## பொருளடக்கம்


1. நல்ல புதல்வர் .................................................. 7
2. நல்ல மாணவர் .................................................. 29
3. நல்ல கணவர் .................................................. 48
4. நல்ல வணிகர் .................................................. 65
5. நல்ல இளைஞர் .................................................. 76


பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம்

# முஸ்லிம் இளைஞர்களுக்கு

1

## நல்ல புதல்வர்

இப்பொழுது நீங்கள் இளைஞர்களாய் இருந்து கொண்டிருக்கிறீர்கள். வாழ்வின் வசந்தம் என்று கூறுவார்களே அந்தப் பருவத்தில் இருந்து கொண்டிருக்கிறீர்கள். இழந்தவர்கள் எல்லாம் மறுபடியும் வராதா என்று ஏங்குவார்களே அந்த வயதில் இருந்து கொண்டிருக்கிறீர்கள். இதையே உறுதி செய்கிறது பிரான்ஸ் நாட்டின் இந்தப் பழமொழி: ''வாழ்வின் முற்பகுதி இரண்டாம் பகுதியை விரும்புவதில் கழிகிறது. இரண்டாம் பகுதி முற்பகுதிக்காக வருந்துவதில் கழிகிறது.'' இத்தகைய இனிய பருவத்தை எய்தி வனப்பும் வலிமையும் வாய்ந்த வாலிபராய் நீங்கள் வளர்ந்திருப்பதற்குப் பெரும் அளவில் உதவியவர்கள் யார் தெரியுமா? உங்கள் பெற்றோர். அதாவது உங்களைப் பெற்ற தாயும் தந்தையும்.

குழந்தையாய் இருந்த போதும், சிறுவராய் ஆன போதும், வாலிபராய் வளர்ந்த போதும் அவர்களிடமிருந்து நீங்கள் எவ்வளவோ அன்பையும் ஆதரவையும் அடைந்திருக்கிறீர்கள். நீங்கள் வாலிபராய் வளரும்வரை அன்பையும் ஆதரவையும்

அவர்கள் உங்களுக்கு அளிக்கத்தான் வேண்டும். அவற்றைப் பெறுவது உங்கள் உரிமை. அவற்றை அளிப்பது அவர்கள் கடமை. நீங்கள் வாலிபராய் வளர்ந்து விட்டால் அத்தகைய அன்பையும் ஆதரவையும் பெறுவது அவர்கள் உரிமை, அளிப்பது உங்கள் கடமை. ஆனால் பெரும்பாலான பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களிடமிருந்து தங்கள் உரிமையைப் பெற்றுக் கொள்கிறார்கள். ஆனால் தங்கள் பெற்றோர்களுக்குத் தாங்கள் புரிய வேண்டிய கடமையைச் சிலர் மறக்கிறார்கள், சிலர் மறுக்கிறார்கள்.

இவ்விதப் பிள்ளைகளாய் நீங்கள் இருக்கவே கூடாது. நீங்கள் வாலிபராய் வளரும்வரை அவர்களின் அன்பும் ஆதரவும் உங்களுக்கு எப்படித் தேவையோ அப்படித் தேவை அவர்கள் முதியவர்களாய் ஆகும்போது உங்களின் அன்பும் ஆதரவும். ஆனால் இதை உணராத சில பிள்ளைகள் தாங்கள் பலவீனர்களாய் இருக்கும் போது அவர்களின் அன்பும் ஆதரவும் தங்களுக்குத் தேவையாய் இருக்கும் வரை அவர்களுடன் ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பலவீனர்களாய் ஆகும் போது, பிள்ளைகளின் அன்பும் ஆதரவும் அவர்களுக்குத் தேவைப்படும் போது அவர்களிட மிருந்து வெட்டிக் கொண்டு விடுகிறார்கள்.

பெற்றோர்கள் பிள்ளைகளைப் பெற்று வளர்த்து, படிக்க வைத்து, வாலிபப் பருவம் வந்ததும் ஒரு வேலையையும் தேடித் தந்து அல்லது ஒரு தொழிலையும் வைத்துத் தந்து, அதன்பின் அவர்களுக்குத் திருமணமும் செய்து வைக்கிறார்கள். சில பிள்ளைகள் சிறிது வளரும் வரை, சில பிள்ளைகள் படித்து முடிக்கும் வரை, சில பிள்ளைகள் ஒரு வேலை அல்லது ஒரு தொழில் ஏற்படும் வரை, சில பிள்ளைகள் திருமணம் செய்யும் வரை பெற்றோர்களுக்குப் பணியும் நல்ல பிள்ளைகளாய் இருக்கிறார்கள். பல பிள்ளைகள் திருமணத்திற்குப் பிறகு பெரிதும் அல்லது முற்றிலும் மாறிப் போய் விடுகிறார்கள்.



வளர்ந்து விட்டோம், படித்துக் கொண்டு விட்டோம், பணம் சம்பாதிக்கத் தொடங்கி விட்டோம் இனிமேல் பெற்றோர் தேவை நமக்கு அவ்வளவு அவசியமில்லை என்னும் எண்ணமே அவர்களின் இவ்வித மாற்றத்திற்குக் காரணமாகும். இதனால் சில பிள்ளைகள் பெற்றோர்களை மதிப்பதில்லை. சில பிள்ளைகள் பெற்றோர்களுடன் இருப்பதில்லை.

பெற்றோர்களை மதிக்காத பிள்ளைகள் தாங்கள் நடந்து வந்த பாதையைச் சற்றுப் பின்நோக்கிப் பார்க்க வேண்டும். உங்கள் பெற்றோர்களின் உதவி இல்லாமலா நீங்கள் வளர்ந்து கொண்டு விட்டீர்கள்? முதலில் உங்கள் அன்னையின் ஊன், அதன்பின் உங்கள் தந்தையின் உழைப்பு நீங்கள் வளர்வதற்குக் காரணமாகவில்லையா? சில ஏழை அன்னையர் தம் வயிற்றைக் காயப் போட்டு விட்டுத் தம் பிள்ளைகளின் வயிற்றிற்கு உணவு அளிக்கும் சம்பவங்கள் உண்டல்லவா? நம் இந்திய நாட்டின் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் தம் அன்னையின் மீது அளவற்ற அன்பு கொண்டவர். ஒரு சமயம் அவர் தம் அன்னையைப் பாராட்டி விட்டுக் கூறினார், ''என் அன்னை தம் உணவையும் தாம் உண்ணாமல் எனக்குத் தருவார்கள்'' என்று. இவ்விதம் அன்னையர் தாம் உண்ணாமல் நமக்கு உணவு இல்லையே என எண்ணாமல் உங்களுக்கு ஊட்டி வளர்ப்பது எதற்காக? நீங்கள் நன்கு வாழ வேண்டும், நீங்கள் விரைவில் வளர வேண்டும் என்பதற்காக அல்லவா? நீங்கள் வளர்வது கண்டு அவர்கள் மனம் மகிழ்கிறார்கள். பிள்ளைகள் வளரக் கூடாது; பிள்ளைகள் வளர்ந்தால் நாம் வயதானவர்களாய் ஆகிவிடுவோம் என்று எண்ணும் பெற்றோர் உண்டா? உண்மையில் பிள்ளைகள் வளரும் போது பெற்றோர்களும் வளர்கிறார்கள். பிள்ளைகளுக்கு வயதேறும் போது பெற்றோர் களுக்கும் வயதேறுகிறது. பிள்ளைகள் இளைஞர்களாய் ஆக வேண்டுமானால் பெற்றோர்கள் முதியவர்களாய் ஆகாமல் முடியாது.

நீங்கள் இருபத்தைந்து வயது இளைஞராய் ஆகும் போது உங்கள் பெற்றோர்களுக்கு ஐம்பது அல்லது அறுபது வயது ஆகிவிடுகிறது. உங்கள் வயதிற்கும் உங்கள் பெற்றோர் வயதிற்கும் இருபத்தைந்து அல்லது முப்பது வயது இடை வெளி ஏற்பட்டு விடுகிறது. இதனால் உங்கள் பெற்றோரின் பேச்சு, போக்கு உங்களுக்குப் பிடிக்காமல் போகிறது. அவை பழைமையானவையாய், பத்தாம் பசலித்தனமானவையாய் உங்களுக்குத் தோன்றுகின்றன. ஓர் உண்மையை நீங்கள் உணர வேண்டும். காலம் உங்களுக்கு நிலையாக இருப்பது போலவும், அவர்களுக்குத்தான் கழிந்து கொண்டிருக்கிறது போலவும் கருதிக் கொள்கிறீர்கள். ஆனால் காலம் அவர்களுக்கு மட்டும் கழியவில்லை, உங்களுக்கும் சேர்த்துத்தான் கழிகிறது. கதிரவன் அவர்களுக்கு மட்டும் எழுந்து மறையவில்லை, உங்களுக்கும் சேர்த்துத்தான் அது எழுந்து மறைகிறது. எனவே, நீங்களும் ஒரு நாள் வயதானவர்களாய் ஆகத்தான் போகிறீர்கள். உங்கள் பிள்ளைகளின் வயதிற்கும், உங்கள் வயதிற்கும் இடையே இருபத்தைந்து அல்லது முப்பது வயது இடைவெளி ஏற்படத்தான் போகிறது. அப்பொழுது உங்களின் பேச்சு, போக்கு அவர்களுக்குப் பிடிக்காமல் போகலாம் அல்லவா?

எனவே, நீங்கள் இளைஞர்களாய் இருப்பதை வைத்து, உங்கள் பெற்றோர் முதியவர்களாய் இருப்பதை வைத்து அவர்களை மதிக்காத, அவர்களின் பேச்சு, போக்கிற்கு மதிப்புக் கொடுக்காத பெரும் பிழையைச் செய்து விடாதீர்கள்! ஓர் உண்மையை உங்களுக்குக் கூறட்டுமா? நீங்கள் உங்கள் பெற்றோர்களை மதித்தால் உங்கள் பிள்ளைகள் உங்களை மதிப்பார்கள். நீங்கள் உங்கள் பெற்றோர்களை மதிக்கா விட்டால், நிச்சயமாக உங்களை உங்கள் பிள்ளைகள் மதிக்க மாட்டர்கள். இவ்வளவு அழுத்தமாகக் கூறுகிறீர்களே, உங்கள் கூற்றிற்கு ஆதாரம் என்ன என்று கேட்கிறீர்களா? அல்லாஹ்வின் தூதர் அவர்களின், ஆன்றோர் ஒருவரின் இந்தச் சொற்களைப் படித்துப் பாருங்கள் : ''நீங்கள் உங்கள் பெற்றோர்களுடன் நன்முறையில் நடந்து வாருங்கள்! உங்கள் பிள்ளைகள் உங்களுடன் நன்முறையில் நடந்து வருவார்கள்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றனர். ''சிறு வயதில் ஒருவன் தன் பெற்றோர்களிடம் எப்படி நடந்து கொள்வானோ அப்படியே அவன் பிள்ளைகள் அவன் முதுமைப் பருவத்தில் நடந்து கொள்வார்கள்,'' என்று ஷைகு சஅதி(ரஹ்) அவர்கள் கூறியிருக்கின்றனர். பெற்றோர்களை மட்டுமல்ல, மற்றப் பெரியோர் களையும் இளைஞர்கள் மதிக்க வேண்டும், அவர்களிடம் மரியாதையாக நடக்க வேண்டும் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பின் வரும் சொற்களைக் கொண்டு அறிவுறுத்து கிறார்கள்: ''எவனொருவன் பெரியவர்களுக்கு அவர்களின் வயதின் காரணமாகக் கண்ணியம் அளிப்பானோ அவனுக்கு அவனுடைய வயோதிகக் காலத்தில் கண்ணியம் அளிக்கக் கூடிய வர்களை அல்லாஹ் ஏற்பாடு செய்வான்.'' இந்த உத்தர வாதத்திற்கு மேல் உங்களுக்கு வேறு என்ன உறுதிமொழி வேண்டும்.



உங்கள் பெற்றோர் உயிர் வாழும் போது அவர்களின் ஆயுள் மட்டும் வளரவில்லை, அவர்களின் அறிவும் வளர்கிறது. அதனால் உங்களிடம் இல்லாத அரிய கருவூலம் ஒன்று அவர்களிடம் இருக்கிறது. அதுதான் அவர்கள் நடந்து வந்த பாதையில், கடந்து வந்த பாட்டையில் கண்டெடுத்த அனுபவம். ஒவ்வொரு விஷயத்தையும் நீங்களே அனுபவித்து அறிந்து கொள்ளலாம் தான். ஆனால் அதில் கஷ்டமும் நிறைய வரும், காலமும் விரையம் ஆகும். எனவே அவர்களின் அனுபவத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்!

காலம் மாறிக் கொண்டிருக்கிறது. அவர்கள் பிறந்த காலம் வேறு, நீங்கள் பிறந்த காலம் வேறு. அதனால் அவர்கள் தங்கள் காலத்தில் பொருத்தமாயிருந்த கருத்தை - உங்கள் காலத்திற்குப் பொருத்தமாய் இராத ஒரு கருத்தைக் கூறலாம் தான். அதனால் அதனை அபத்தம் என்று எண்ணிக் கொள்ளாதீர்கள். ஆய்ந்து

பார்த்தீர்களேயானால் நிச்சயம் அதில் அறிவு இருப்பதை அறிவீர்கள்.

நீங்கள் இளைஞர்களாய் இருப்பதால் உங்களிடம் அறிவை விட உணர்ச்சி அதிகமிருக்கும். அதனால் உங்களால் ஒன்றைப் பற்றி அமைதியாக சிந்திக்க இயலுவதில்லை. அதனால் உங்களுக்குத் தவறான முடிவுக்கு வரும் சந்தர்ப்பம் அதிகம் ஏற்படும். உங்கள் பெற்றோர் மூத்தவர்களாய் இருப்பதால் அவர்களிடம் உணர்ச்சியைவிட அறிவு அதிகம் இருக்கும். அதனால் அவர்களால் அமைதியாகச் சிந்திக்க முடியும், சரியான முடிவுக்கும் வர முடியும். எனவே அவர்களின் கருத்திற்கு மதிப்புக் கொடுத்து அதன்படி நடக்க முயலுங்கள்! பெரும் பாலும் அதில் நன்மை இருக்கும். பெற்றோர் பேச்சைத் தூக்கி எறிந்து விட்டுத் தம் போக்கில் சென்ற பிள்ளைகள் படு குழியில் விழுந்த சம்பவங்கள் பலவற்றை நாம் பார்த்திருக்கிறோம்.

சில சமயங்களில் உங்கள் பெற்றோர், காலத்திற்கு ஒவ்வாத கருத்து ஒன்றைக் கூறலாம்தான். அப்பொழுது அவர்களை வெறுப்புடன் பார்க்காதீர்கள்! அப்பொழுதே, அவர்கள் கூறியதற்கு மறுப்புக் கூறி விடாதீர்கள்! ஒருவர், உர்வா (ரலி) அவர்களிடம், ''திருமறையில் பெற்றோர்களுக்குப் பிள்ளைகள் பணிந்து நடக்க வேண்டிய கட்டளைகள் கூறப்பட்டிருக் கின்றனவே, அவற்றின் கருத்து யாது?'' என்று கேட்டார். உடனே உர்வா(ரலி) அவர்கள், 'உனக்கு விருப்பமில்லாத ஒரு விஷயத்தை அவர்கள் கூறுவார்களேயானால் அவர்களை வெறுப்புக் கண்ணோட்டத்தோடு முறைத்துப் பார்க்காதே! ஏனெனில் மனிதனின் கண்கள் மூலமாகவே அவனின் வெறுப்பு வெளிவர ஆரம்பமாகிறது'' என்று பதில் கூறினார்கள்.

உங்களால் ஒப்புக் கொள்ள முடியாத ஒரு கருத்தை உங்கள் பெற்றோர் கூறினால், அவர்கள் கூறியதிலிருக்கும் சாதக, பாதகங்களை அமைதியாக இருந்து ஆராய்ந்து பாருங்கள்! அவர்கள் கூறுவது காலத்திற்கு ஒவ்வாத கருத்து என்று நீங்கள்



எண்ணினால் அதில் உள்ள குறைகளை இதமாக அவர்களிடம் எடுத்துக் கூறுங்கள், அடக்கமாக எடுத்துச் சொல்லுங்கள்! அப்பொழுது நீங்கள் எல்லாம் அறிந்தவர்கள் என்னும் எண்ணமோ, அவர்கள் ஒன்றுமே அறியாதவர்கள் என்னும் எண்ணமோ உங்களிடம் அணுவளவும் இருக்கக் கூடாது. இப்பொழுது அவர்கள் உங்கள் பேச்சைக் கேட்டு விட்டு, பிள்ளை சொல்வது சரியானதுதான் என்று எண்ண ஆரம்பித்து விடுவார்கள்.

இவ்வித இதமான அணுகுமுறையே உங்களிடம் இருக்க வேண்டிய உயரிய பண்பாகும். உங்களுக்கு உங்கள் பெற்றோர் மீது அளவற்ற அன்பிருக்க வேண்டும். அவர்கள்மீது அதிகமான மரியாதை இருக்க வேண்டும். அத்துடன் நீங்கள் அவர்கள் ஆயுள் முழுதும் அவர்களுக்கு ஆதரவாகவும் இருக்க வேண்டும். சில பிள்ளைகளுக்கு ஏனோ பெற்றோர்களைக் கண்டாலே பிடிப் பதில்லை. அவர்கள் தம் தந்தையைத் தந்தை என்றும், தம் தாயைத் தாய் என்றும் குறிப்பிடக்கூட கூச்சப் படுகிறார்கள். சில பிள்ளைகளைப் பற்றிச் சில பெற்றோர்கள் கூறும் குறை அவர்கள் தங்களுடன் பேசுவதில்லை என்பதாகும். சில பிள்ளைகள் தந்தை யுடன் பேசுவதில்லை, சில பிள்ளைகள் தாயுடன் பேசுவ தில்லை. பெற்றோர்களுடன் பேச வேண்டிய அவசியம் ஏற்பட் டால் பெற்றோர் முகத்தைப் பார்க்காமலே எங்கேயோ பார்த்துக் கொண்டு பேசிவிட்டுப் போய் விடுகிறார்கள். இவ்விதம் பெற் றோர்களும் பிள்ளைகளும் அந்நியர் போல் ஆகிவிடுகிறார்கள்.

இப்படியெல்லாம் நீங்கள் இருக்கவே கூடாது.

நீங்கள் உங்கள் பெற்றோர்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுதெல்லாம் அவர்கள் என்ற மரியாதைச் சொல்லைக் கொண்டே குறிப்பிட வேண்டும். உங்கள் தந்தையை ஒருவருக்கு அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால் மிகவும் மரியாதையுடன் அறிமுகப்படுத்த வேண்டும். உங்கள் தந்தையைப் பற்றிப் பிற இடங்களில் பேச நேர்ந்தால் மிகவும் உயர்வாகப் பேச வேண்டும்.

உங்கள் தாயைப் பற்றியும் அப்படித்தான் உயர்வாகப் பேச வேண்டும். அவர்கள் மனிதர்களாக இருப்பதால் அவர்களிடம் சிறு குறைகள் இருக்கத்தான் செய்யும். அவற்றைப் பெரிது படுத்தக் கூடாது, பிறரிடம் கூறவும் கூடாது. மாவீரர் அலெக் சாண்டர் எப்படி நடந்து கொண்டார் என்று கூறட்டுமா? அவர் தம் அரசைக் கவனித்துக் கொள்ளும்படி நம்பிக்கைக்குரிய நண்பர்களிடம் கூறிவிட்டு, இந்தியாவை நோக்கிப் படை யெடுத்து வருகிறார். வழியில் ஓர் இடத்தில் தங்கியிருக்கிறார். அப்பொழுது அவர் ஊரிலிருந்து அவர் நண்பர்களிடமிருந்து கடிதம் ஒன்று வருகிறது. அதில் அலெக்சாண்டரின் தாய் அரசியல் விஷயங்களில் செய்யும் தவறுகள் பட்டியலிடப் பட்டிருக்கின்றன. அலெக்சாண்டர் அவற்றைப் படித்துக் கொண்டிருக்கிறார். அப்பொழுது அவர் நண்பர் ஒருவர் அவர் பின்புறம் நின்று அவர் தோள் மேல் தலை வைத்து அவற்றைப் படிக்கிறார். அப்பொழுது அலெக்சாண்டர் கூறினார், ''இத்தகைய ஆயிரம் குற்றச்சாட்டுகளை என் தாய் விடும் ஒரு துளி கண்ணீர் அழித்து விடும்'' என்று.

உங்கள் பெற்றோர் முன் நீங்கள் அவசியப்படும் போது தான் அமர்ந்திருக்க வேண்டும். நீங்கள் இருக்கும் இடத்திற்கு அவர்கள் வந்தால் உடனே எழுந்து கொள்ள வேண்டும். அவர்கள் எழுந்து நிற்கும் போது ஒரு போதும், நீங்கள் உட்கார்ந்து கொண்டு இருக்கக் கூடாது. உங்கள் தந்தையுடன் வெளியே செல்ல நேர்ந்தால் தந்தையின் பின்னால்தான் நீங்கள் செல்ல வேண்டும். அவர் மெதுவாக நடப்பவராக இருந்தால், நீங்களும் அப்படித்தான் நடக்க வேண்டும். இவ்வித மரியா தையை அந்நிய மதத்தைச் சேர்ந்த முதியவர் ஒருவருக்கே அலீ (ரலி) அவர்கள் செய்திருக்கிறார்கள். அவர்கள் ஒரு நாள் தொழுகைக்குக் கிளம்புகிறார்கள். தொழுகை நேரம் வந்து விட்டதால் அவசரமாக நடக்கிறார்கள். அப்பொழுதுதான் பார்க்கிறார்கள் ஒரு யூத முதியவர் தமக்கு முன்னால் மிகவும்



மெதுவாக நடந்து கொண்டிருப்பதை. முதியவரான அவரை முந்திக் கொண்டு செல்ல அவர்களின் மனம் இடம் தரவில்லை. அதனால் அவர் பின்னாலேயே மெதுவாக நடந்து செல் கிறார்கள். பள்ளியை அடையும் போது தொழுகை முடிந்து விட்டிருக்கிறது. ''ஏன் தாமதம்?'' என்று தோழர்கள் கேட்ட போது, ''என் முன்னால் மெதுவாக நடந்து சென்ற யூத முதிய வரை முந்திக் கொண்டு வருவதை மரியாதைக் குறைவாகக் கருதி அவர் பின்னாலேயே மெதுவாக நடந்து வந்தேன்'' என்று அவர்கள் பதில் கூறினார்கள்.

ஜைனுல் ஆபிதீன் (ரஹ்) அவர்கள் வாழ்வில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை அறிந்தால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். ஒருவர் அவர்களிடம், ''மக்களில் தாய்க்கு மிகவும் பேருதவி செய்து வருபவர்களில் நீங்கள் முதன்மையானவர்களாய் இருக்கிறீர்கள். ஆனால் தாங்கள் ஒரு நாளில் ஒரு வேளைகூட உங்களின் அன்னையுடன் அமர்ந்து ஒரே தட்டில் உணவருந்தவில்லையே. அது ஏன்?'' என்று கேட்டார். அதற்கு அவர்கள், 'நானும் என் அன்னையும் ஒரே சமயத்தில் ஒரே தட்டில் உணவருந்தும் போது உணவை அள்ளிக் கொண்டு என் கை, என் அன்னையின் கையை முந்திவிடக் கூடாது என்று அஞ்சுகிறேன். அப்படி முந்து வதைக் கண்ணியக் குறைவாகக் கருதுகிறேன். அதனால்தான் நான் என் அன்னையுடன் சேர்ந்து ஒரே தட்டில் உணவருந்துவதில்லை. அந்த சுவர்க்கத்தின் விழுதாக அதன் அடியில் இருக்கவே நான் விரும்புகிறேன்'' என்று பதில் கூறினார்கள்.

இவ்வித அற்புதப் பண்புகளெல்லாம் ஜைனுல் ஆபிதீன் (ரஹ்) அவர்களுக்கு வந்தது எதனால் தெரியுமா? அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வாழ்வையும், வாய்மொழியையும் நன்கு அறிந்து இருந்ததால்தான். ஒரு சமயம் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சமுகத்திற்கு ஒருவர் வந்தார். அவருடன் ஒரு வயோதிகரும் வந்தார். அவரிடம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''இப்பெரியவர் யார்?'' என்று கேட்டார்கள். ''இவர்

என் தந்தை'' என்று அவர் பதில் கூறினார். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''நீர் அவருக்கு முன்னால் நடக்காதீர், அவர் அமர்வதற்கு முன் அமராதீர். அவரின் பெயரைச் சொல்லி அழைக்காதீர். அவரைக் குறை கூறாதீர்'' என்று அவருக்கு அறிவுரை பகர்ந்தார்கள்.

அவர்களின் வாழ்வில் ஒரு பிள்ளை தன்னைப் பெற்ற தாய், தந்தையிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கும் அற்புத முன்மாதிரி இருக்கிறது. அவர்கள் தாம் அன்னையின் வயிற்றில் இருக்கும் போதே தந்தையை இழந்தவர்கள் ஆயிற்றே, பிறந்து ஆறுவயது ஆவதற்குள் தாயை இழந்தவர்கள் ஆயிற்றே, தந்தையிடம் எப்படி நடந்து கொள்வது என்பதற்கு, தாயிடம் எவ்விதம் நடந்து கொள்வது என்பதற்கு அவர்களிடம் எப்படி முன் மாதிரியை எதிர்பார்க்க முடியும் என நீங்கள் நினைக்கலாம். அவர்கள் தம் வளர்ப்புத் தாயிடமும், வளர்ப்புத் தந்தையிடமும் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதற்கு முன்மாதிரி இருக்கிறது. அவர்கள், தம் வளர்ப்புத் தாயிடமும் வளர்ப்புத் தந்தையிடமுமே இப்படி நடந்து கொண்டிருக்கும் போது நாம், நம்மைப் பெற்ற தாயிடமும் தந்தையிடமும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை உணர்த்துவதற்காகக்கூட இந்த முன்மாதிரி இருக்கலாம்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கும், கதீஜா (ரலி) அவர்களுக்கும் திருமணம் நிகழ்ந்து முடிந்த நேரம் அது. கதீஜா (ரலி) அவர்கள் செல்வச் சீமாட்டியாக இருந்ததால் அவர்களின் திருமணத்தில் கலந்து கொள்ள உறவினர்களும், நண்பர்களும் ஏராளமானவர்கள் அவர்களின் வீட்டிற்கு வந்திருந்தார்கள். அப்பொழுது வெளியூரிலிருந்து வந்த மூதாட்டி ஒருவர் கதீஜா (ரலி) அவர்களின் மாளிகை வாயிலில் காணப்பட்டார். தொலைவிலிருந்தே அவர் யார் என்பதை அறிந்து கொண்ட அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அவரை நோக்கி விரைந்து சென்று அவரை வரவேற்று, மாளிகையின் உள்ளே அழைத்துச் சென்று, ''இவர்கள்தாம் என் அன்னை



ஹலிமா, என்னைப் பாலூட்டி வளர்த்த தாய்'' என்று கூறித் தம் மனைவி கதீஜா (ரலி) அவர்களுக்கு அறிமுகம் செய்தார்கள். கதீஜா (ரலி) உடனே ஹலீமா (ரலி) அவர்களை அன்புடன் உபசரித்துத் தம் வீட்டில் சில நாள்கள் தங்க வைத்து அவர்கள் ஊர் புறப்படும் போது நாற்பது ஆடுகள் அன்பளிப்புச் செய்தார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மதீனா சென்று அங்கு மன்னர்க்கும் மன்னராய் இருந்து கொண்டிருக்கும் பொழுது அவர்களின் வளர்ப்புத் தாய் ஹலீமாவும் வந்தார், அவரின் கணவர் ஹாரிதும் வந்தார், அவர்களின் புதல்வியும் வந்தார். அவர்களைக் கண்டதும் அண்ணல் நபி ('ஸல்) அவர்கள் அன்புடன் வரவேற்றுத் தம் துண்டை விரித்து அதில் அவர்கள் மூவரையும் அமரச் சொன்னார்கள். மூவரும் அமர்வதற்கு அத்துண்டில் இடம் இல்லாத போது தாம் எழுந்து நின்று கொண்டார்கள்.

இவ்வித அன்பும், மதிப்பும் உங்களுக்கு உங்களைப் பெற்ற தாயிடமும், தந்தையிடமும் இருக்க வேண்டும். உங்கள் நெஞ்சில் அவர்கள் மீது அன்பிருக்கிறது என்பதற்கு ஆதாரம் அவர்களுக்கு ஆதரவாக நீங்கள் இருப்பதேயாகும்.

சில பெற்றோர்கள் உஷாரானவர்களாய் இருந்து தம் இளமை முதலே தாம் ஈட்டுவதில் ஒரு பகுதியைச் சேமிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். பெற்ற பிள்ளை இப்பொழுது நல்லவனாய்த்தான் இருக்கிறான், படித்து, பதவி பெற்று, பணம் ஈட்டும் போது அவன் எப்படி இருப்பானோ என்னும் ஐயமும் அச்சமும் அவர்களுக்கு இருந்து கொண்டிருக்கிறது. பிள்ளை கவனிக்காமல் போனால் முதுமையில் பசித்துப் பட்டினி கிடக்காமல் தம் சேமிப்பைக் கொண்டு காலத்தைக் கடத்தி விடுகிறார்கள். 'நம் பிள்ளை முதுமையில் நமக்கு உதவாமலா போவான்' என்னும் நம்பிக்கையில் உள்ள சில பெற்றோர் பிள்ளைகள் அவர்கள் நம்பியது போல் இல்லாமல் போகும் போது தவிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். இவ்விதப் பெற்றோர் களைப் பற்றிச் சற்று வசதியுடன் இருக்கும் பிள்ளைகளிடம்,

பெற்றோர்களைக் கொஞ்சம் கவனிக்கும்படி கூறினால் பிச்சை கொடுப்பது போல் கொஞ்சம் பணம் கொடுத்து விட்டுத் தம் கடமை முடிந்து விட்டதாகக் கருதிக் கொள்கிறார்கள். இவ்விதப் பெற்றோர்களைப் பற்றிச் சற்று வசதிக் குறைவாய் இருக்கும் பிள்ளைகளிடம் கூறினால், ''ஊம். என் வருமானம் என் மனைவி, மக்களுக்கே பற்றாமல் இருக்கிறது. இவர்களுக் கெல்லாம் கொடுக்க நான் எங்கே போவேன்?'' என்று கேட்டுவிடுகிறார்கள்.

ஒருவர் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சமுகம் வந்து, ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இவ்வுலகிலும், மறுவுல கிலும் பலன் தரக் கூடிய செயல்களைச் சொல்லித் தாருங்கள்!'' என்று வேண்டிக் கொண்டார். உடனே அவர்கள், ''நீர் உம் தாய், தந்தையருக்குச் செய்ய வேண்டிய கடமைகளை சரி வரச் செய்து அவ்விருவருக்கும் வழிப்பட்டு நடப்பீரானால் உமக்கு இவ்வுலகிலும், மறு உலகிலும் பலன் உண்டு. அவ்விரு வருக்கும் நீர் கொடுக்கும் ஒவ்வொரு கவள உணவிற்கும் உமக்கு சுவர்க்கத்தில் இரு மாளிகை உண்டு'' என்று கூறினர்.

முதலில் கவனிக்கப்பட வேண்டியவர்கள் பெற்றோர் களா, மனைவி மக்களா என்னும் பிரச்சினை வரும் போது எவருக்கு இருக்க வேண்டும் முதல் கவனிப்பு என்பதற்கு இதோ இருக்கிறது அருமையான சம்பவம் ஒன்று:

ஒருவருக்கு வயது முதிர்ந்த பெற்றோர்களும், சின்னஞ் சிறு குழந்தைகளும் இருந்தனர். அவர் ஆடு மேய்க்கும் வேலை செய்து வந்தார். தம் வேலையிலிருந்து திரும்பி வந்ததும் பால் கறந்து குழந்தைகளுக்குக் கொடுக்குமுன் தம் பெற்றோர் களுக்குக் கொடுப்பது அவர் வழக்கம். ஒருநாள் அவர் ஆடு மேய்த்துக் கொண்டு வெகு தொலை சென்று விட்டார். வீடு திரும்ப வெகு நேரம் ஆகிவிட்டது. அவரின் பெற்றோர் (அதற்குள்) தூங்கி விட்டார்கள். வழக்கப்படி அவர் ஆடுகளில் பால் கறந்து கொண்டு வந்து பாத்திரத்துடன் தம் பெற்றோர்களின்



தலைமாட்டில் நின்றார். ஆழ்ந்த தூக்கத்திலிருந்த அவர்களை எழுப்பவும் அவர் விரும்பவில்லை, அதே நேரத்தில் தம் காலடியில் (பசியால்) வீறிட்டு அழுது கொண்டிருக்கும் தம் குழந்தைகளுக்குக் கொடுக்கவும் விரும்பவில்லை. இந்நிலை பொழுது விடியும் வரை நீடித்தது.

இவ்வித உதாரணங்கள் எல்லாம் இருக்கும் போது சில பிள்ளைகள் மனைவி மக்களுடன் நன்கு உண்டு மகிழ்கிறார்கள், பெற்றோர்களைப் பட்டினி போட்டு விடுகிறார்கள். இப்படிச் சில பிள்ளைகள் செல்வத்தில் புரளும் போது அவர்களின் பெற்றோர் ஏழ்மையில் உழல்கிறார்கள். பெற்றோர்களுக்கு உணவு அளிப்பது பிள்ளைகளின் தலையாய கடமையாகும். இந்தக் கடமை இரட்டிப்பாகிறது பெற்றோர்கள் ஏழைகளாய் இருந்தால். ஹிதாயா என்னும் நூல், ''பெற்றோர்கள் ஏழை களாயின் அவர்களுக்கு அளிப்பது பிள்ளைகளின் தலையாய கடமையாகும்'' என்று கூறி, பெற்றோர்களுக்கு அளிப்பதே மற்ற எல்லாக் கடமைகளிலும் தலையாயது என்று வலியுறுத்துகிறது.

உங்கள் செல்வத்தில் பங்கு கொள்ள வேறு எவரையும் விட அதிக உரிமையுள்ள ஒருவரை உங்களுக்குக் கூறட்டுமா? அவர்கள்தாம் உங்கள் பெற்றோர். அதற்கு ஆதாரம் இதோ இருக்கிறது: ஒருவர் அண்ணல் நபி(ஸல்) அவர்கள் சமுகம் வந்து, ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என் மகன் பலவீனனாய் இருந்தான், நான் பலசாலியாக இருந்தேன். இப்பொழுது அவன் பலசாலியாக இருக்கிறான், நான் பலவீனனாக இருக்கிறேன். அவன் என்னை ஆதரிக்க மாட்டேன் என்கிறான்'' என்று அழாக் குறையாகக் கூறினார். அவர் கூறுவதைக் கேட்டுவிட்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள், ''உம் கதை உள்ளத்தை உருக்குவதாக உள்ளது. உம் மகனின் உடைமைகளை அவனைக் கேட்காமலேயே நீர் எடுத்துக் கொள்ளும்!'' என்று. இச்சொற்கள் மூலம் உங்களைக் கேட்காமலேயே உங்கள் உடைமைகளை எடுத்துக் கொள்ள

உங்கள் பெற்றோர்களுக்கு உரிமை உண்டு என்று அல்லாஹ்வின் இறுதித் தூதர் அவர்கள் உறுதி அளித்து விட்டார்கள்.

இப்பொழுது உங்கள் பெற்றோர் வயோதிகர்களாய் ஆகியிருக்கிறார்கள், அதனால் அவர்கள் பலவீனர்களாகவும் ஆகிவிட்டிருக்கிறார்கள். அவர்களை ஆதரிப்பது உங்களின் தலையாய கடமையாகும். அந்தக் கடமையைச் செய்வதற்காக நீங்கள் உழைத்தால் அது எத்தகையது தெரியுமா? ''(ஒருவர்) தம்முடைய வயோதிகப் பெற்றோர்களுக்காக உழைத்தால் (அந்த உழைப்பும்) இறைபாதையில் செலவிட்டதாகும்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

இதை உணர்ந்து நீங்கள் உங்கள் பெற்றோர்க்கு ஆதரவாய் இருங்கள்! ''தம் பெற்றோரை அன்புடன் நோக்குபவருக்கு (அவர் அவ்விதம்) ஒவ்வொரு முறை நோக்குவதற்கும் ஓர் ஒப்புக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜின் நன்மை எழுதப்படும்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இவ்வித நன்மைகள் எல்லாம் இருப்பதால் உங்கள் பெற்றோர்களை அவர்கள் வயோதிகத்தின் காரணமாக பலவீனர்களாய் ஆகும் போது அவர்களை உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள்! சில பிள்ளைகள் திருமணம் செய்து கொண்டு ஓரிரு பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டு விட்டால் பெற்றோர்களை விட்டுப் பிரிந்து வாழ்வதற்குப் பிரியப்படுகிறார்கள். சில வீடுகளில் மாமியார் - மருமகள் பிரச்சினை இருக்கலாம்தான். ஆனால் அது அப்படி ஒன்றும் தீர்க்க முடியாத பிரச்சினையாக ஆகாது. ஆனால் சில பிள்ளைகள் இந்த விஷயத்தில் நியாயம், அநியாயமெல்லாம் பார்க்காமல் மனைவியின் பக்கம் சாய்ந்து விடுகிறார்கள். தம் மனைவி சொல்வதே சரி, தம் மனைவி செய்வதே சரி என்று அவர்கள் கருதுவதே அதற்குக் காரணம். அவர்கள் இவ்வித சந்தர்ப்பங்களில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அறிவுறுத்தியதைக் கொஞ்சம் மனத்தில் கொள்ள வேண்டும். ''எவர் தம் தாயை விடத் (தம்) மனைவியைச் சிறந்தவள் என்று கருது



கிறாரோ அவரை அல்லாஹ்வும், (அவன்) அமரர்களும் சபிக்கிறார்கள். அவருடைய பர்லான, நஃபிலான எந்த வணக்கமும் அல்லாஹ் வால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

சில பிள்ளைகள் தம் மனைவி மக்களுடன் தனியாக, சுதந்திரமாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். வீட்டில் பெரியவர்கள் இருந்தால் அவர்கள் அவ்வப்போது தம் அபிப்பிராயங்களைச் சொல்லத்தான் செய்வார்கள். இது பெரும் 'தொண தொண'ப்பாகச் சில பிள்ளைகளுக்குத் தோன்றுகிறது. இந்தக் காரணங்களாலும் சில பிள்ளைகள் பெற்றோர்களை விட்டுப் பிரிய நினைக்கிறார்கள்; சில பிள்ளைகள் பெற்றோர்களைத் தங்களை விட்டும் பிரிக்க நினைக்கிறார்கள். ''அவர்களில் (பெற்றோர்களில்) ஒருவரோ, அல்லது இருவருமோ முதுமையை அடைந்துவிட்ட போதும் உங்களை விட்டும் அவர்களை விரட்டக் கூடாது'' என்று அல்லாஹ் கட்டளையிடுகிறான்.

பெரும்பாலும் வயதினாலும், சில சமயம் நோயினாலும், சில சமயம் காலமெல்லாம் உழைத்துக் களைத்த அலுப்பினாலும் பெற்றோர்கள் பலவீனர்களாய் ஆகிவிடுகிறார்கள். இந்நிலையில் அவர்களுக்கு உதவியாக இருப்பதற்கு ஒரு துணை தேவைப்படுகிறது. பெற்ற பிள்ளைகளைவிடப் பெரிய துணை அவர்களுக்கு வேறு எவராக இருக்க முடியும்? அதனால் அவர்கள் தாங்கள் இருக்கும் இடத்தில் பிள்ளைகள் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் அல்லது பிள்ளைகள் இருக்குமிடத்தில் தாங்கள் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். பிள்ளைகளை விட்டுப் பிரிந்து இருக்க அவர்கள் பிரியப்படுவதேயில்லை. இந்நிலையில் அவர்கள் இருக்கும் இடத்தில் நீங்கள் இருக்க முடியவில்லை என்றால் நீங்கள் இருக்கும் இடத்திற்கு அவர்களை அழைத்துக் கொள்ளுங்கள். அவர்களை அநாதைகளைப் போல் விட்டு விடாதீர்கள். அவர்களை முதியோர் இல்லங்களில் சேர்த்து

விட்டு விடலாம் என்னும் பாதக எண்ணத்திற்கு ஒருபோதும் பலியாகி விடாதீர்கள்! முன்பெல்லாம் மேலை நாடுகளில் இந்த நிலை இருந்தது. இப்போழுது கீழை நாடுகளிலும் இந்தக் கீழ் நிலை வந்து விட்டது. அது எங்கு வந்துவிட்டாலும் அது உங்கள் வீட்டிற்கு வந்துவிடக் கூடாது.

அவர்களை உங்கள் அருகில் வைத்துக் கொண்டு அவர் களுக்கு உங்கள் வேலைக்கு இடையிலும் உதவியாய் இருங்கள், உங்களால் இயன்ற பணிவிடைகளையும் செய்யுங்கள். இவ்விதம் தம் பெற்றோர்களுக்குப் பணிவிடை செய்யும் பிள்ளைகளுக்கு அல்லாஹ் கொடுப்பதாகக் கூறும் பரிசுகளை அறிந்தால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். அந்தப் பரிசுகளை நாமும் அடைய வேண்டும் என்று ஆசைப்படுவீர்கள்.

ஒருசமயம் நபி மூஸா( அலை) அவர்கள் இறைவனை நோக்கி, ''இறைவ, எம் பெரும! என்னுடன் சுவனத்தில் வாழும் நண்பரை எனக்குக் காட்டியருள்வாயாக!'' என்று இறைஞ் சினார்கள். அதற்கு இறைவன் ஒருவரைக் குறிப்பிட்டு அவரின் அடையாளத்தையும், அவரின் பெயரையும் அறிவித்தான். அவரை நபி மூஸா (அலை) அவர்கள் பல நாள்கள் தேடித் திரிந்து இறுதியாக ஒரு நாள் கண்டுபிடித்தார்கள். அவர் இறைச்சி வியாபாரம் செய்து கொண்டிருந்தார். அவர் வியாபாரம் செய்வதைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த நபி மூஸா (அலை) அவர்கள் அவர் கடையை மூடிவிட்டு இல்லம் ஏகும் பொழுது அவர் பின்னே சென்று, ''இன்று என்னைத் தங்களின் விருந்தினராக ஏற்றுக் கொள்கிறீர்களா?'' என்று கேட்டார்கள். ''நல்லது. என்னுடன் வாரும்!'' என்று கூறி அவர்களை அவர் தம் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். தம் இல்லம் சென்றதும் அவர் தாம் கொண்டுவந்த இறைச்சியைச் சமைத்தார். அதன்பின் அவர் தொட்டிலில் படுத்திருந்த ஒரு மூதாட்டியைத் தூக்கி, தலை முழுக்காட்டி, மாற்று உடை அணிவித்துத் தாம் சமைத்து வைத்திருந்த உணவை எடுத்து



அவருக்கு ஊட்டினார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த நபி மூஸா( அலை) அவர்கள் அவரைப் பார்த்து, ''யார் அவர்?'' என்று வினவ, ''அவர்கள் என் அன்னை. வயோதிகத்தின் காரணமாக அவர்களால் எவ்வித வேலையும் செய்ய இயலாது. எனவே நான்தான் அவர்களுக்கு அனைத்து ஊழியமும் செய்து என் பிறவிக் கடனை ஆற்றி வருகிறேன்,'' என்று கூறினார். அப் பொழுது மூஸா (அலை) அவர்கள், அவரைப் பார்த்து, ''நண்பரே! நான்தான் மூஸா கலீமுல்லாஹ். நீர் உம் அன்னைக்கு ஆற்றி வரும் அரும் பெரும் தொண்டின் காரணமாக நீர் என்னுடன் சுவனத்தில் இருப்பீர்'' என்று கூறினார்கள்.

இவ்விதப் பணிவிடைகள்கூட உங்கள் பெற்றோர் உங்களுக்குப் புரிந்த பணிகளுக்கு இம்மி அளவும் ஈடாகா. அதனால்தான் அல்லாஹ், ''நீங்கள் பாலகர்களாய் இருந்தபோது அவர்கள் (உங்கள் பெற்றோர்) எவ்வளவு பாடுபட் டிருப்பார்கள் என்பதை உணர்ந்து பாருங்கள்(23: 25)'' என்று கூறுகிறான். இதற்கு ஆதாரமாக அருமையான சம்பவம் ஒன்று இருக்கிறது.

ஒருவர் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனக்கு வயது முதிர்ந்த தாய் இருக்கிறார். நான் அவருக்குத் தினமும் உணவு ஊட்டி விடு கிறேன், தண்ணீர் அருந்த வைக்கிறேன். மல சலம் கழிக்க அவரைக் கழிப்பிடம் வரை தூக்கிச் செல்கிறேன். நான் அவருக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்தவன் ஆவேனா?'' என்று கேட்டார். ''இல்லை'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பதில் அளித்தார்கள். அவர் அவர்களை ஏக்கத்துடன் ஏறிட்டுப் பார்த்தார். அப்பொழுது அவர்கள் கூறினார்கள், ''உம்முடைய தாய் உமக்கு இதையும்விட அதிகமாய்ப் பணிவிடை செய்திருக்கிறார்'' என்று.

இவ்விதப் பணிவிடைகள்கூட அவர்கள் உங்களுக்குப் புரிந்த உதவிகளுக்கு ஈடாகா என்பதைத்தான் இந்நிகழ்ச்சி நமக்கு உணர்த்துகிறது. எனவே நீங்கள் பெற்றோர்களிடம் நன்றியுடன்

நடந்து கொள்ளுங்கள்! ''நான் உன்னைப் படைத்த தற்காக எனக்கும், உன்னை வளர்த்ததற்காக உன் பெற்றோருக்கும் நன்றி பாராட்டுவாயாக'' என இறைவன் கூறியிருப்பதை மறந்து விட வேண்டாம்.

ஒருமுறை நபி மூஸா (அலை) அவர்கள், இறைவனை நோக்கி, ''இறைவ, எம் பெரும! எனக்கு அறிவுரை நல்குவாயாக!'' என்று வேண்டினார்கள். அப்பொழுது இறைவன், ''நீர் உம்மை ஈன்ற உம்மரும் அன்னைக்கு நன்றிக் கடன் ஆற்றுவீராக!'' என்று கூறினான். அது கேட்டு மன நிறைவடையாத நபி மூஸா (அலை) அவர்கள், ''இறைவ எம் பெரும! எனக்கு அறிவுரை நல்குவாயாக!'' என்று வேண்டினார்கள். அப்பொழுதும் இறைவன், ''நீர் உம்மை ஈன்ற உம்மரும் அன்னைக்கு நன்றிக் கடன் ஆற்றுவீராக!'' என மறுமொழி பகர்ந்தான். இவ்வாறு ஏழுமுறை நபி மூஸா (அலை) அவர்கள் இறைவனை வேண்டிய பொழுதும் அவ்வேழு முறையும் அவன் அதே மறுமொழியைத்தான் அளித்தான். அப்பொழுது நபி மூஸா (அலை) அவர்கள், ''இறைவ என் பெரும! இது எனக்குப் போதும்'' என்று கூறினார்கள். அதன்பின் இறைவன் நபி மூஸா( அலை) அவர்களை நோக்கி, ''அன்னையின் மகிழ்ச்சி என்னுடைய மகிழ்ச்சி, அன்னையின் சினம் என்னுடைய சினம்'' என்று கூறினான்.

மேலும் இறைவன் தொடர்ந்தான். ''மூஸா! நீர் உம்முடைய தந்தைக்கு நன்றிக் கடன் ஆற்றுவீராக, எவனேனும் ஒருவன் தன் தாய், தந்தையருக்கு நன்றிக் கடன் ஆற்றின் நான் அவனுக்கு இவ்வுலகில் செயலாளராகப் பணி புரிவேன். அவனுடைய புதைகுழியில் அவனுக்கு நல்லாதரவு நல்குவேன். அவனை மஹ்ஷர் வெளியில் அருள் கண் கொண்டு பார்ப்பேன். அவனுக்கு சிராத்துல் முஸ்தகீம் பாலத்தில் வழிகாட்டிச் செல்லும் வழிகாட்டியாக விளங்குவேன். அவனோடு சுவனத்தில் உரையாடிக் கொண்டிருக்கும்



உறுதுணை நண்பனாகத் துலங்குவேன். எவ்விதத் திரையுமின்றி நான் அவனுடன் உரையாடுவேன். அவனும் என்னுடன் உரையாடுவான். மேலும் ஒருவன் என்னை நோவினை செய்து தன் தாய், தந்தையருக்கு நன்றிக் கடன் ஆற்றினால் நான் அவனை நல்லவன் என்றே எழுதுவேன். அவன் தன் தாய், தந்தையரை நோவினை செய்து எனக்கு நன்றிக் கடன் ஆற்றினால் அவன் என்னை நோவினை செய்தவனே ஆவான். எனவே அவனை நான் தீயவன் என்றே எழுதுவேன். எவன் தன் தாய், தந்தையரைச் சங்கை செய்கிறானோ அவனுக்கு நீண்ட ஆயுளை நல்கி அவனுக்கு நன்றி செலுத்தும் நன்மக்களையும் அளிப்பேன். மாறாக நடப்பின் அவனுடைய ஆயுளைக் குறைத்து அவனுக்குத் துன்பம் செய்யும் தீய மக்களை வழங்குவேன்'' என்று இறைவன் கூறினான்.

இதைத்தான் அண்ணல் நபி (ஸல்) அவர்களும், ''தாய், தந்தையருக்கு நன்றியுடையவனாய்த் திகழாமல் அல்லாஹ்வுக்கு நன்றியுடையவனாய் ஆக முடியாது'' என்றும், ''தந்தையின் பொருத்தத்தில் (அதாவது திருப்தியில்) அல்லாஹ்வின் பொருத்தமும் (அதாவது திருப்தியும்) தந்தையின் கோபத்தில் அல்லாஹ்வின் கோபமும் இருக்கிறது'' என்றும் கூறி உறுதி செய்தார்கள். அத்துடன் அவர்கள், ''தலை சிறந்த நுழைவாயில் வழியாக சுவர்க்கம் புக விரும்புவோர் தம் தந்தையையும், தாயையும் மகிழ்விப்பாராக!'' என்றும் அறிவுறுத்தினார்கள்.

உங்களின் தந்தையையும், தாயையும் மகிழ்விப்பதற்கு இன்னொரு கடமையையும் நீங்கள் சிறப்பாகச் செய்ய வேண்டும். உங்களின் தந்தை வயது முதிர்ந்தவராகவும், வசதிக் குறைவானவராகவும் இருக்கலாம். வீட்டில் நீங்கள் மூத்த பிள்ளையாக இருந்தால் உங்களின் சகோதரர்களையும், சகோதரிகளையும் கவனிக்கும் பொறுப்பு உங்களுடையதாகும். நீங்கள் அவர்களுக்குத் தந்தையைப் போன்று இருந்து அவர்களுக்கு உதவிகள் புரிய வேண்டும். நீங்கள் இளைய பிள்ளையாக

இருக்கலாம். உங்களுக்கு மேல் ஒரு சகோதரரோ அதற்கு மேற்பட்ட சகோதரர்களோ இருக்கலாம். அப்பொழுது நீங்கள் இப்பணியில் உங்களின் மூத்த சகோதரர்களுடன் சேர்ந்து உதவிகள் செய்ய வேண்டும், ஒத்தாசைகள் புரிய வேண்டும். இதையெல்லாம் அறியாது சில பிள்ளைகள் பெற்றோர்களுக்கு உதவி செய்ய மாட்டார்கள். ஆனால் உபத்திரவம் கொடுப் பார்கள். இவ்விதம் செய்து பெற்றோர் மனத்தை வருந்தச் செய்வார்கள்.

அதனால்தான் அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பதும், பெற்றோர்களுக்கு மாறு செய்வதும், (தகாத முறையில் திட்டமிட்டுக்) கொலை செய்வதும் பெரும் பாவங்களாகும்'' என்றும் கூறி, பெற்றோர்களுக்கு மாறு செய்வதைப் பெரும் பாவங்களில் ஒன்றாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ''சுவனத்தின் வாடையைக்கூட முகர மாட்டார்கள்'' என்று சிலரைக் குறிப்பிட்டு அவர்களில் ஒருவனாக, ''பெற்றோர்களுக்குத் தொந்தரவு கொடுப்பவன்'' என்றும் கூறியிருக்கிறார்கள்.

இவ்விதப் பிள்ளைகளாய் இராது உயர் ஒழுக்கமுள்ள பிள்ளைகளாய் இளைஞர்கள் இருக்க வேண்டும். நீங்கள் உங்களுக்காகவும், உங்கள் மனைவி மக்களுக்காகவும் இறைவனிடம் பிரார்த்தனை புரியும் போதெல்லாம் உங்கள் பெற்றோர்களுக்காகவும் பிரார்த்தனை புரியுங்கள்! இவ்விதம் பிரார்த்திக்கும்படி இறைவனே உங்களுக்குக் கட்டளையிடுகிறான்: ''என் இறைவனே! நான் குழந்தையாய் இருக்கும் போது (மிக்க அன்புடன்) என்னை வளர்த்துச் செழுமைப் படுத்தியவாறே நீயும் அவ்விருவர் மீதும் அன்பும் அருளும் புரிவாயாக எனவும் நீர் வேண்டிக் கொள்வீராக!''

உங்கள் பெற்றோர் நல்ல உடல்நலத்துடனும், நீண்ட ஆயுளுடனும் இருக்க வேண்டும் என இறைவனிடம் பிரார்த்தியுங்கள். அவர்களின் இம்மை, மறுமை வாழ்வு சிறப்பாக அமைய வேண்டும் எனவும் இறைவனிடம் இறைஞ்சுங்கள்!



உங்கள் பெற்றோர்களிடம் நீங்கள் நல்லமுறையில் நடந்து, இவ்விதமெல்லாம் பிரார்த்தித்தால் அவர்களும் உங்களுக்காகப் பிரார்த்திப்பார்கள். அதுவும் மனப்பூர்வமாகப் பிரார்த்திப் பார்கள். இந்தப் பிரார்த்தனை அல்லாஹ்வின் இருக்கையை அவசியம் சென்றடையும்: ''தந்தை, தம் மகனுக்குச் செய்யும் துஆ, நபி தம் உம்மத்துக்குச் செய்யும் துஆ போலாகும்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். இருக்கும் இடத்தில் இருந்து கொண்டு செய்யப்படும் துஆவே ஏற்றுக் கொள்ளப்படும் என்று இருக்கும் போது ஹஜ்ஜில் வைத்து துஆ ஏற்றுக் கொள்ளப்படும் இடங்களில் வைத்து செய்யப்படும் துஆ நிச்சயம் ஏற்றுக் கொள்ளப்படும். எனவே நீங்கள் உங்கள் பெற்றோரை அவர்கள் அதிக முதுமை அடையுமுன் ஹஜ் செய்ய அனுப்பி வையுங்கள்.

உங்கள் பெற்றோர் அதிக வயதினராய் ஆகிவிட்டால், அதனால் பலவீனர்களாய் ஆகிவிட்டால் அவர்களுக்குப் பதிலாக ஹஜ் செய்ய ஏற்கெனவே ஹஜ் செய்த ஒருவரை உங்கள் செலவில் அனுப்பி வையுங்கள். நீங்கள் ஒரு முறை ஹஜ் செய்தவர்களாய் இருந்தால் உங்கள் பெற்றோர்களுக்காக நீங்களே ஹஜ் செய்யுங்கள்! இதனால் நீங்களும் நன்மை அடைவீர்கள். உங்கள் பெற்றோரும் நன்மை அடைவார்கள். ''தாய், தந்தையரில் யாருக்காக ஹஜ் செய்யப்படுகிறதோ அவருக்கு ஒரு ஹஜ்ஜின் நன்மை கிடைக்கிறது. ஹஜ் செய்பவருக்கு ஒன்பது ஹஜ்ஜின் நன்மைகள் கிடைக்கின்றன'' என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

பெற்றோர்கள் உயிரோடு இருக்கும் போதும் இவ்விதம் அவர்களுக்காக ஹஜ் செய்யலாம். அவர்கள் இறந்த பிறகும் இவ்விதம் ஹஜ் செய்யலாம். பெற்றோர்களை இழந்த பிள்ளைகள் அவர்களுக்காக ஹஜ்ஜும் செய்யலாம், பல தான தர்மங்களும் புரியலாம். இதனால் பிள்ளைகளின் பாவமும் கழியும். பெற்றோர்களின் பாவமும் கழியும். ஒருவர் பெரும்

பாவம் செய்துவிட்டு அதற்கு என்ன பரிகாரம் செய்யலாம் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வந்து கேட்டார். அவரிடம் அவர்கள் பெற்றோர் பெயரில் கிணறு வெட்டும்படி கூறினார்கள்.

பெற்றோர் இறந்தபின் பிள்ளைகள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அண்ணல் (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்களா என்பதை அறிய ஆவலுறலாம். அபூ அஸ்யத் மாலிக் இப்னு ரபீஆ கூறுகிறார்கள்: ''நாங்கள் அல்லாஹ்வின் தூதர் சமூகம் அமர்ந்திருந்தோம். (அப்பொழுது) பனூ சல்மா குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் அங்கு வந்து, 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என் பெற்றோரின் மறைவுக்குப் பின் அவர்களுடன் நன்முறையில் பழகுவதில் ஏதேனும் பாக்கி உண்டா?' என்று கேட்டார். அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ''ஆம். ஆம். அவர்களுக்காக நீர் பிரார்த்தனைகள் புரிய வேண்டும். அவர்களின் பாவ மன்னிப்பிற்காக 'துஆ' செய்ய வேண்டும். அவர்களின் பந்துக்களை அரவணைத்து நடக்க வேண்டும். அவர்களின் நண்பர்களுக்குக் கண்ணியம் அளிக்க வேண்டும்'' என்ற பதில் கூறினார்கள்.

பெற்றோரின் நண்பர்களுக்குக் கண்ணியம் அளிப்பதுடன் அவர்களுடன் நன்முறையில் பழகவும் வேண்டும் எனவும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அறிவித்தார்கள். ''ஒருவன் தன் தந்தை காலமான பின் அவருடைய நண்பர்களுடன் நன்கு பழகுவது பெற்றோர்களுக்குச் செய்யும் நன்மைகளில் சிறந்ததாகும்'' என்றும் அவர்கள் தெரிவித்தார்கள்.

கீழ்வரும் இந்த அறிவுரையில் இளைஞர்களுக்கு அரிய வழிகாட்டுதல் இருக்கிறது: ''வாலிபத்தில் வழிபாட்டை அவசியமாக்கிக் கொள்! தாய், தந்தையருக்குப் பணிவிடை செய்வதை அவசியமாக்கிக் கொள்! தான தர்மங்கள் செய்வதை அவசியமாக்கிக் கொள்! நல்ல நண்பர்களைத் தேடுவதை அவசியமாக்கிக் கொள்! பெரியவர்களுக்கு மரியாதை செய்வதை அவசியமாக்கிக் கொள்!''

# 2

# நல்ல மாணவர்

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அரபு மக்களின் அவல நிலை போக்கும் வழியைக் காண ஹிரா குகையில் தனித்திருந்து தவம் செய்த போது அவர்கள் முன் வானவர் கோன் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் தோன்றி, அவர்களைக் கட்டி அணைத்துக் கூறியது என்ன தெரியுமா? 'இக்ரவு' என்பதாகும். இதன் பொருள் 'ஓதும்!' என்பது.

இவ்விதம் தமக்கு ஜிப்ரயீல் (அலை) அவர்கள் மூலம் 'ஓதும்!' எனப் பணிக்கப்பட்டதைப் போல் அண்ணல் நபி (ஸல்) அவர்களும் அன்றைய அரபு மக்களைப் பார்த்து, 'ஓதும்!' என்று பணித்தார்கள். ''நான் ஓதியவன் அல்லனே'' என அவர்கள் ஜிப்ரயீல் (அலை) அவர்களிடம் கூறினார்கள். ஏனெனில் அவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாய் இருந்தார்கள். அவ்விதம் அவர்களை அல்லாஹ் இருக்கச் செய்தது ஒரு முக்கிய காரணத்திற்காக என்றாலும் எழுதப் படிக்கத் தெரிந்திருப்பதன் அவசியத்தை அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். கல்வியையும், அதன் மூலம் பெறும் அறிவையும் அவர்களைப் போல் மதித்தவர்கள் அதிகம் இருக்க முடியாது.

அதனால்தான் அவர்கள் கல்வி எங்கிருந்தாலும் இழந்து விட்ட ஒரு பொருளை எடுப்பது போல் எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். நம்மிடமிருந்த அரிய பொருள் ஒன்றை எங்கேயோ தவற விட்டு விட்டோம் என்று வைத்துக்

கொள்வோம். அதனை எங்காவது கண்டால் எவ்வளவு ஆவலு டன் சென்று எடுப்போமோ அவ்வளவு ஆவலுடன் சென்று எடுக்க வேண்டும் என்பதே அவர்கள் கூறியதன் பொருளாகும்.

மேலும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அறிவு எங்கிருந்தாலும் சென்று தேட வேண்டும் என்றும் கருதினார்கள். அதனால் ஏற்படும் இடர்கள், இன்னல்கள் பொருட்படுத்தத் தக்கவை அல்ல என்பதும் அவர்கள் கருத்தாகும். ''சீனா சென்றாயினும் கல்வியைப் பெறுங்கள்!'' என்று அவர்கள் கூறினார்கள். சீனா என்பதற்கு அவர்கள் பயன்படுத்திய சொல் 'சீன்' என்பதாகும். இந்த 'சீன்' என்னும் அரபிச் சொல்லிற்கு சீனா என்றும், சிங்கத்தின் நெற்றி என்றும் இரு பொருள்கள் இருக்கின்றன. சீனா அரபு அவனியிலிருந்து மிகவும் தொலைவில் இருக்கும் நாடாகும். அங்கு நிலவழியாகச் செல்வதும் மிகவும் சிரமம், நீர் வழியாகச் செல்வதும் மிகவும் கடினம்.

சிங்கம் கொடிய விலங்கு. அதனை நெருங்குவதே பெரும் கஷ்டம். அப்படி நெருங்கினாலும் அதன் நெற்றியில் இருக்கும் ஒரு பொருளை எடுப்பது அதனினும் பெரும் கடினம். இவ்விதக் கஷ்டங்களைக் கடந்தும் அறிவைப் பெற வேண்டும் என்பதை உணர்த்துவதற்காகத்தான் அண்ணல் நபி (ஸல்). அவர்கள் 'சீன்' என்னும் இந்தச் சொல்லைப் பயன்படுத்தி யிருப்பார்கள் என்பதில் ஐயம் இல்லை.

இவ்விதம் அறிவைத் தேடி ஒருவர் பிறந்த ஊர் பிரிந்து பிற ஊர் செல்வதை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஊக்குவித்திருக் கிறார்கள். அதற்காகத்தான் அவர்கள் கூறினார்கள், ''எவர் கல்வியை நாடிச் செல்கிறாரோ அவர் (வீடு) திரும்பும் வரை அல்லாஹ்வின் பாதையில் இருக்கிறார்'' என்று.

நம்மை எல்லாம் பார்த்து அல்லாஹ், ''இறைவா! என்னில் கல்வியை அதிகமாக்குவாயாக! என்று 'துஆ' கேளுங்கள்!''



*(20:114)* என்று கூறியிருக்கிறான். உண்மையில் அல்லாஹ் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் உள்ளத்தில் அறிவின் ஊற்றுக் கண்களையே திறந்து விட்டு விட்டானோ என்று எண்ணத் தோன்றுகிறது அவர்களின் அறிவுத் திறனை அறியும்போது. அவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாய் இருந்தார்கள் என்பது உண்மை. அதனால் எழுதப் படிக்கத் தெரியாதவர் என்று பொருள்படும் 'உம்மி' என்னும் பெயர் பெற்றதும் உண்மை. ஆனால் அதையும்விடப் பெரிய உண்மை அவர் களின் ஆசானாக அல்லாஹ்வே இருந்தான் என்பது. அல் ஹக்கீம் என்னும் பெயர் பெற்ற அல்லாஹ்விடம் கல்வி கற்றவர் களாக அவர்கள் இருந்ததால்தான் அவர்களால் ''நான் அறிவு என்னும் பட்டணம்'' என்று கூற இயன்றது.

அவர்கள் கூறியது உண்மையே உண்மை என்பதை உறுதிப் படுத்துகின்றன அவர்கள் உதிர்த்த உயர்மொழிகள். அவர்கள் அறிந்திராத விஷயமே உலகில் இராதா என்று மூக்கில் விரல் வைத்து அவர்களை ஆச்சரியத்துடன் பார்க்கிறது அறிவுலகம். இவ்வளவு நுணுக்கமாக ஒவ்வொரு விஷயம் பற்றியும் எப்படித்தான் அவர்கள் அறிந்து கொண்டார்கள் என்று வியக்கிறார்கள் அறிவு உலகத்தினர். படித்தோ, கேட்டோ இவ்வளவு அறிவையும் ஒருவர் அடையவே முடியாது என்று அவர்கள் அனைவரும் முடிவிற்கு வருகின்றனர். அவர்களின் ஆசான் அல்லாஹ் என்பதை அறிந்தால் அவர்களின் ஐயம் அகலும், வியப்பு உயர்விண்ணை முட்டும்.

இதை உறுதி செய்கிறது இங்கே கூறப்படும் இந்தச் சம்பவம்: ஒரு நாள் அபூபக்ர் (ரலி) அவர்கள், ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் அரபி இலக்கியம் அறிந்த மேதை களிடையே சுற்றியவன். அரபி மொழி வல்லுநர்கள், பெரும் கவிஞர்கள், கற்பனையில் வல்லவர்களையெல்லாம் நான் சந்தித்திருக்கிறேன். எனினும் எழுதவும் படிக்கவும் தெரியாமல் இருந்தும் தங்களைப் போன்று மொழித் திறமை

யிலும் இலக்கிய நயத்திலும் வல்லமை மிக்க வசீகர நாவன்மை உடைய ஒருவரை நான் பார்த்ததில்லை'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் பார்த்துக் கூறினர். அது கேட்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''என் ரப்பு அந்த ஆற்றலை, வல்லமையை எனக்குத் தந்தருளியிருக்கிறான்'' என்று கூறினார்கள்.

இவ்விதம் அல்லாஹ் அற்புத அறிவையெல்லாம் அளித்து அவற்றை மக்களுக்கு வழங்குமாறு அவர்களை அகிலத்திற்கு அனுப்பி வைத்தான். அவர்கள் ''நான் ஓர் ஆசிரியனாகவே அனுப்பப் பட்டேன்'' என உரைத்து உறுதி செய்தார்கள். அதற்கு ஆதாரம் இந்தச் சம்பவம்; இதனை அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ''ஒரு நாள் அல்லாஹ்வின் தூதர் அவர்கள் மஸ்ஜிதுந் நபவீயுள் நுழைந்த போது அங்கு இரு வகையினரைக் கண்டார்கள். ஒரு சாரார் நஃபிலான வணக்கங் களில் ஈடுபட்டிருந்தனர், மறு சாரார் கற்பதிலும் கற்பிப்பதிலும் ஈடுபட்டிருந்தனர். இதைக் கண்டதும் அல்லாஹ்வின் தூதர் அவர்கள் சொன்னார்கள், 'இரு பிரிவினரும் நல்ல வேலையைச் செய்கின்றனர். இருப்பினும் ஒரு பிரிவினரின் வேலை மிகவும் உயர்ந்ததாகும். ஏனெனில் இறைவனிடம் கேட்கும் மக்களுக்கு இறைவன் நாடினால் கொடுக்கலாம், நாடினால் மறுக்கலாம். உண்மையில் மற்றொரு பிரிவினர் கல்வி கற்கின்றனர், மடமையை துரத்துகின்றனர். நானும் ஆசிரியனாகவே அனுப் பப்பட்டுள்ளேன் என்பது உண்மையே' என்று. அதன்பின் அவர்கள் கல்வியாளர்களின் கூட்டத்தில் அமர்ந்தார்கள்.''

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஓர் ஆசிரியராகவே அனுப்பப்பட்டார்கள் என்பதை அல்லாஹ்வின் திருமறையும் இவ்விதம் உறுதி செய்கிறது: ''அல்லாஹ் அம்மக்களிடத்தில் (அவர்களிலிருந்தே ஒரு தூதரை) ரசூலை அனுப்பிய நேரத்தில் ஐயமின்றி முஃமின்கள் மீது அருள் கிருபை செய்து விட்டான். அம்மக்களுக்கு அவர் அல்லாஹ்வின் திருவசனங்களை ஓதிக் காட்டி அவர்களைத் தூய்மைப்படுத்துகிறார். அவர்களுக்கு



கிதாபையும் (திரு மறையையும்) நுண்ணிய விஷயங்களையும் கற்றுக் கொடுக்கிறார். நிச்சயமாக இதற்கு முன் அவர்கள் வெளிப்படையான வழி கேட்டிலேயே இருந்தனர்'' (*3:164*). அல்லாஹ்வின் திருமறை கூறியதையே அறிஞர் சையித் சுலைமான் நத்வி (ரஹ்) அவர்களும் இவ்விதம் சொல்கிறார்கள்: ''கண்ணிய மிக்க நபிதோழர்களும் அவர்களைப் பின்பற்றிய தாபியீன்களும் இறைதூதரின் ஞானப் பேரூற்றிலிருந்து தாம் கற்ற கல்விக் கருவூலத்தை இவ்வுலகம் முழுவதற்கும் பங்கிட்டுக் கொடுத்தார்கள்.''

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தாமும் ஆசிரியராக இருந்து கற்பித்தார்கள், கல்வி அறிவு பெற்ற பிறரையும் ஆசிரியராக இருந்து கற்பிக்க ஏற்பாடு செய்தார்கள். அவர்கள் மதீனாவுக்குச் செல்வதற்கு முன்னர் முஸ்அப் இப்னு உமைர் (ரலி) அவர்களைக் குர்ஆனைக் கற்றுக் கொடுப்பதற்காக மதீனாவுக்கு அனுப்பி வைத்தார்கள். மதீனாவுக்கு வந்த பின்னர் மஆத் இப்னு ஜபல்(ரலி) அவர்களை குர்ஆனைக் கற்றுக் கொடுப்பதற்காக மக்காவுக்கு அனுப்பி வைத்தார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மதீனா வந்ததும் செய்த முதல் வேலை என்ன தெரியுமா? அங்கு ஒரு பள்ளிவாயிலைக் கட்டியது. அது இறைவனை வணங்கும் பள்ளியாகவும் இருந் தது, இறைமறையைப் பயிலும் பள்ளிக்கூடமாகவும் இருந்தது. இறைபள்ளியில் இருந்த இந்த சுஃபா என்னும் பள்ளிக்கூடம் மாணவர் பயிலும் பள்ளிக்கூடமாகவும் இருந்தது, மாணவர் தங்கும் விடுதியாகவும் இருந்தது. அங்கு உள்ளூர் மாணவர் களும் பயின்றார்கள், வெளியூர் மாணவர்களும் பயின்றார்கள். அதில் குர்ஆனைப் பயிலும் சிறுவர்களும் இருந்தார்கள்; குர் ஆனை ஆய்வு செய்யும் முதியவர்களும் இருந்தார்கள். அங்கு குர்ஆனை மனனம் செய்வோர் , குர்ஆனை முறையோடும் இனிமையோடும் ஓதப் பழகுவோர், மார்க்க விதிகளைக் கற்போர் என *400* முதல் *900* மாணவர்கள் இருந்தனர். அவர் களுக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்களே கற்றுக் கொடுத்தனர்.

மதீனாவில் முஸ்லிம்களின் குடியேற்றம் அதிகமான போது அங்குக் கட்டப்பட்ட ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு பள்ளிக்கூடம் தோன்றத் தொடங்கியது. இந்த முறையே இஸ்லாம் எங்கெங்குப் பரவியதோ அங்கெல்லாம் பின்பற்றப் பட்டது. பள்ளிகளே பள்ளிக்கூடங்களாகவும் இருந்ததால் அங்குப் பயின்ற மாணவர்கள் கல்வியும் கற்றார்கள், உயர் ஒழுக் கமும் பெற்றார்கள். அதனால் இஸ்லாமிய உலகில் அறிவு அரசர்களும் அதிகமானார்கள், ஆன்மீக மன்னர்களும் அதிகரிக்க ஆரம்பித்தார்கள்.

அறிவு அரசர்களாய் ஆகிக் கொண்டிருந்த அவர்கள் மேலும் மேலும் தம் அறிவை அபிவிருத்தி செய்து கொள்வதற் காக அறிவு எங்கெங்குக் கிடைக்குமோ அங்கெல்லாம் செல்ல லானார்கள். அங்குக் கிடைக்கும் அறிவையெல்லாம் இஸ்லாம் இழந்து விட்டிருந்த பொருள் என எண்ணி அள்ளலானார்கள். கிரேக்க, பாரசீகக் கலா ஞானத்தையும், பௌதீக அறிவி யலையும், இந்தியக் கணிதத்தையும், ஞான மார்க்கத்தையும் கற்றுக் கொண்டார்கள். அவற்றை அபிவிருத்தி செய்து பிறருக்கு வழங்க ஆரம்பித்தார்கள். கிரேக்க அறிவியல் தத்துவங்களை அரபி மொழியில் ஆக்கினார்கள். இஸ்லாமிய அறிவியல் தத்துவங்களை இலத்தீன் மொழிக்கு மாற்றினார்கள். இதுதான் ஐரோப்பாவில் மறுமலர்ச்சி ஏற்படக் காரணமாயிற்று என்று அறிஞர்கள் கூறுகின்றனர். இதையே கவி திலகர் இக்பாலும், ''ஐரோப்பிய மறுமலர்ச்சிக்குக் காரணமாக இருந்தவர்கள் முஸ்லிம்கள்தாம்'' என்று உறுதி செய்கிறார்.

அப்பாஸியக் கலீபா ஹாரூன் அல் ரஷீத் தாம் வென்ற நாட்டின் அரசர்களிடம், தமக்குக் கட்ட வேண்டிய கப்பத்திற்குப் பதிலாக அவர்களின் நாட்டிலிருந்த நூல்களைப் பிரதி செய்து கொள்ள அனுமதி கோரினார். அந்நூல்களை முஸ்லிம்கள் அரபியில் ஆக்கினார்கள். கிரேக்க, இலத்தீன் மொழிகளில் இருந்த நூல்கள் அரபியில் ஆக்கப்பட்டதால் இன்று ஆங்கிலம்



வகிக்கும் பதவிக்கு அரபி வந்தது. அதனால் கல்வி அரபி மூலம் கற்பிக்கப்பட்டது. ஐரோப்பிய அறிஞர்கள் முஸ்லிம் ஸ்பெயினுக்குச் சென்று ஆங்கிருந்த கல்லூரிகளில் சேர்ந்து கற்க ஆரம்பித்தார்கள். ஆங்கிருந்த நூலகங்களில் குவிக்கப்பட்டிருந்த அறிவுக் கருவூலங்களை அள்ளி அருந்தித் தம் அறிவை ஆழப்படுத்திக் கொண்டார்கள். தம் உள்ளத்தை அகலப்படுத்திக் கொண்டார்கள். முஸ்லிம் ஸ்பெய்னிலிருந்த முக்கிய நகரங் களான கார்டோவா, கிரனாடா ஆகியவற்றில் எத்தனையோ நூலகங்கள் இருந்தன. அந்நூலகங்களில் எத்தனையோ ஆயிரம் நூல்கள் இருந்தன. முஸ்லிம் ஸ்பெய்னிலிருந்த பல்கலைக் கழகங்களில் பயின்ற ஒருவர் பிரஷ்ஷியப் பேரரசர் ஆனார். ஒருவர் பெரிய மதகுருவானார். அறிவியலுக்கு விளக்கம் அளித்து அதற்கு விரிவான அடிப்படை அமைத்த முதல்வர் ரோஜர் பேக்கன் என்பவர். அவர் ஸ்பெய்னிலிருந்த முஸ்லிம் பல்கலைக்க கழகம் ஒன்றில் பயின்றவர். உலகம் உருண்டை யானது என்னும் உண்மையைக் கொலம்பஸ் முஸ்லிம் ஸ்பெய்னில் வைத்துத் தாம் பார்த்த பூகோள உருண்டை யிலிருந்து தான் தெரிந்து கொண்டார் என்று கூறுவர்.

அதனால் அன்றைய முஸ்லிம்கள் அறிவியல் கல்வியில் அதிகம் தேர்ந்தவர்களாய் இருந்தார்கள். ஒரு சமயம் உலகம் தலை சிறந்த அறிஞர்களாய் நால்வரைக் கணக்கிட்டது. அந்நாள் வரை அவர்களைப் போன்ற அறிஞர்கள் தோன்றவில்லை என்று உலகம் அடித்துக் கூறியது. அவர்களையும், அவர்கள் ஆக்கிய நூல்களையும் படித்து விட்டுத்தான் அவ்விதம் பகர்ந்தது. அந்நால்வர் யார் தெரியுமா? இருவர் அரிஸ் டாட்டில், அலக்சாண்டர். இருவர் அபுந்நாஸர் ஃபாராபி, அபூ அலீ சீனா. முந்தைய இருவரும் கிரேக்கர்கள், பிந்தைய இரு வரும் முஸ்லிம்கள். அபுந்நாஸர் ஃபாராபி எழுபதுக்கு மேற்பட்ட மொழிகளைத் தெரிந்திருந்தார் என்று கூறுகின்றனர். ''தாங்கள் மேலானவரா, அரிஸ்டாட்டில் மேலானவரா?''

என்று அவரிடம் ஒரு சமயம் கேட்கப்பட்ட போது அவர் அடக்கத்துடன் கூறினார், ''அரிஸ்டாட்டில் இன்று உயிருடன் இருந்தால் அவரின் தலை மாணாக்கனாய் நான்தான் இருப்பேன்'' என்று. அபூ அலீ சீனா அவனியில் தோன்றிய அற்புத மனிதர்களில் ஒருவர். அவர் அறிந்திராத கலைகளே கிடையாது என்று கூறலாம். அவரின் ஆயிரம் ஆண்டு விழாவைச் சில ஆண்டுகளுக்கு முன் சோவியத் ருஷ்யாவே வெகு சிறப்பாகக் கொண்டாடியது. அவர் எழுதிய மருத்துவ நூல்கள் சமீப காலம் வரை ஐரோப்பியப் பல்கலைக் கழகங்களில் பாட நூல்களாக வைக்கப்பட்டிருந்தன.

அவர் தம் மருத்துவ நூல்களை எப்படியெல்லாம் கற்று அதனால் பெற்ற அறிவைக் கொண்டு ஆக்கினார் என்பதற்கு ஓர் அருமையான சம்பவம் இருக்கிறது:

தாம் அறிந்திராத கண்நோய் மருந்து ஒன்றை ஒரு கிழவி அறிந்திருந்தது அவருக்குத் தெரியவந்தது. அவர் அதனை அந்தக் கிழவியிடமிருந்து அறிந்து கொள்ள ஆசைப்பட்டார். அந்தக் கிழவியிடம் சென்று அதனைத் தமக்குத் தெரிவிக்கும்படி வேண்டினார். அவர் எவ்வளவோ வினயமாய் வேண்டிக் கொண்ட போதும் அக்கிழவி அதைக் கூறக் கண்டிப்பாய் மறுத்து விட்டாள்.

அதை அறிந்து கொள்ள அபூ அலீ சீனா ஓர் உபாயம் செய்தார். அபாயகரமான வேலை என்றாலும் அதனைப் புரிய அவர் அறவே அஞ்சவில்லை. தாமாகவே தம் கண்ணைக் குத்திப் புண்ணாக்கிக் கொண்டார். அதன்பின் அவளிடம் சென்று தம் கண்புண்ணிற்கு மருத்துவம் செய்யும்படி வேண்டினார். அதற்கு அவள் இணங்கி அவர் கண்ணுக்கு மருந்திட்டார். அவர் கண்ணிலிருந்து கண்ணீர் வடிந்தது. அது அவள் இட்ட மருந்தையும் இலேசாகக் கரைத்துக் கொண்டு வடிந்தது. அது தம் நாவில் படப்பட பக்கத்திலிருந்த தம் ஊழியனிடம் அதன் சுவையைக் கொண்டே தெரிந்து கூறிக் கொண்டு வந்தார்.



அவனும் அவர் கூறக் கூறக் குறித்துக் கொண்டே வந்தான். இவ்வாறு அவர் கூறிய மருந்துகளின் எண்ணிக்கை எழுபது. ஒரே ஒரு மருந்தை மட்டும் அதன் சுவையிலிருந்து தம்மால் தெரிந்து கொள்ள இயலவில்லை என்று அவர் தம் ஊழியனிடம் கூறினார். இதையெல்லாம் பக்கத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்த அந்தக் கிழவி அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தாள். அடுத்த கணம், ''மகனே! உன்னைத் தவிர்த்து வேறு யாருக்கு நான் அதனைக் கூறுவது?'' என்று சொல்லி விட்டு, ஒரு வண்டைக் குறிப்பிட்டு, ''அதன் கொழுப்பு அது'' என்று அறிவித்தாள்.

இவ்விரு அற்புத அறிஞர்கள் அல்லாமல் இவ்வித அறிஞர்கள் ஆயிரமாயிரம் இஸ்லாமிய உலகில் தோன்றலானார்கள். அல்பெரூனியைப் பற்றி நீங்கள் அறிந்திருக்கலாம். ஆப்கன் மன்னர் மஹ்மூது கஸ்னவீயின் அவையை அலங்கரித்தவர்களில் அவரும் ஒருவர். அந்தப் பதவி அவருக்கு அப்படி எளிதாகக் கிடைத்து விடவில்லை. அவர் அறிவைத் தேடி அன்றைய உலகின் பல பகுதிகளுக்குப் பயணம் செய்தார். அப்பொழுது அவர் இந்தியாவுக்கும் வந்தார். இப்படி அவர் அறிவைத் தேடி அலைந்த ஆண்டுகள் எத்தனை தெரியுமா? நாற்பது. தாம் சென்ற நாடுகளையெல்லாம் அவர் வேடிக்கை பார்க்கவில்லை. அவற்றைக் கூர்ந்து பார்த்து அங்குக் கிடைக்கும் அறிவையெல்லாம் அள்ளிக் கொள்வது அவர் வாடிக்கையாக இருந்தது. பொதுவாக அவரிடம் எதையும் கூர்ந்து பார்க்கும் அறிவும், எதையும் நுண்மையாக ஆயும் ஆற்றலும் அமைந்திருந்தன. அவரின் இந்த அறிவையும் ஆற்றலையும் அறிவுலகம் அதனால்தான் தன் விழிகளை விரித்துப் பார்த்தது. அவர் கஸ்னீயில் வைத்து கி.பி. 1048 இல் இறக்கும் வரை எழுதிக் கொண்டேதான் இருந்தார் என்றும் அவர் கையில் எழுதுகோல் இல்லாத நாளே கிடையாது என்றும் கூறுகின்றனர்.

இறுதி நாள் வரை அறிவைத் தேடுவதில் அவருக்கு இருந்த ஆர்வத்தை உணர்த்த ஓர் அற்புதமான சம்பவம் அவர்

வாழ்வில் உண்டு. அவருக்கு இறுதி வந்து விட்டது, இறப்புப் படுக்கையில் இருந்து கொண்டிருந்தார். அவரைப் பார்க்க அவருடைய நண்பர் ஒருவர் அவர் வீடு வந்தார்; அவரைக் கண்டு ஆறுதலாக ஓரிரு வார்த்தைகள் கூறினார். அப்பொழுது அல்பெரூனி நண்பரைப் பார்த்து, ''சில நாள்களுக்கு முன் நீங்கள் என்னைச் சந்தித்த போது நபிமொழி ஒன்றைக் கூறினீர்கள். அதனை இப்பொழுது நினைவுபடுத்திப் பார்க்கிறேன், முடிய வில்லை. அதை இன்னொரு முறை கூறுகிறீர்களா?'' என்று கெஞ்சும் குரலில் கேட்டார். ''கொஞ்சம் நாளில் உங்கள் உயிர் பிரியப் போகிறது. இந்தச் சமயத்தில் அதை அறிந்து கொள்ள வேண்டிய அவசியம்தான் என்ன?'' என்று நண்பர் சற்றுக் கேலியுடன் கேட்டார். அதைக் கேட்டு அல்பெரூனி என்ன பதில் கூறியிருப்பார் என்று உங்களால் ஊகிக்க முடிகிறதா? அவர் சொன்னார், சொன்னத்தை நிகர்ந்த இந்தச் சொற்களை: ''அந்த நபி மொழியைத் தெரிந்திராத நிலையில் இறப்பதை விட அதைத் தெரிந்து கொண்ட நிலையில் இறப்பதையே நான் விரும்புகிறேன்.''

இப்படி இறக்கும் இறுதி நிமிடம் வரை அறிவைத் தேடிக் கொண்டே இருந்தவர் அல்பெரூனி. ஒரு நாள் மன்னர் மஹ்மூது கஸ்னவீ அல்பெரூனியின் கூரிய அறிவை அறிந்து கொள்ள ஒரு சோதனை வைக்க விரும்பினார். அரசவை கூடியதும் அவர் அல்பெரூனியைப் பார்த்து, ''நான் இப்பொழுது இருந்து கொண்டிருக்கும் இந்த அறையிலிருந்து எந்த வழியாக வெளியேறுவேன்? உங்கள் பதிலை எழுதி ஓர் உறையில் வைத்துக் கொடுங்கள்!'' என்று கூறினார். அவர் அப்பொழுது இருந்த அறைக்கு ஒரே ஒரு வாயில்தான் இருந்தது. இது எல்லோரையும் வாயைப் பிளக்க வைக்கும் கேள்வி என்பதில் ஐயமில்லை. அவ்விதமே அல்பெரூனி ஒரு தாளில் ஏதோ எழுதி, மடித்து உறையில் வைத்து மன்னர் குறிப்பிட்ட ஆளிடம் கொடுத்தார். அதன் பின் மன்னர் அறைச் சுவரில் ஒரு பகுதியை



உடைக்கச் செய்து அதன் வழியாக வெளியேறினார். அதன்பின் அறைக்குள் வந்து அல்பெரூனி எழுதிக் கொடுத்த தாளைப் பிரித்துப் பார்த்த மன்னர் அப்படியே ஆச்சரியத்தில் அதிர்ந்து போனார். மன்னர் எந்த இடத்தில் சுவரை உடைக்கச் சொன்னாரோ அந்த இடத்தையும், அதன் மூலம் அவர் வெளியேறும் முறையையும் அனுவத்தனையும் பிழை இல்லாமல் அப்படியே எழுதியிருந்தார் அல்பெரூனி அந்தத் தாளில்.

இவ்வித அறிவரசர்கள் அன்று இஸ்லாமிய உலகில் எத்தனையோ பேர் இருந்து கொண்டிருந்தார்கள். அன்று ஐரோப்பா இருண்ட காலத்தில் இருந்து கொண்டிருந்தது. இஸ்லாமிய உலகமோ ஒளிமிக்க பொற்காலத்திற்குள் புகுந்து கொண்டிருந்தது. அறிவியல் துறையின் ஆழ, அகலத்தை அவர்கள் அளக்கத் தொடங்கியிருந்தார்கள். மனிதன் தான் தோன்றிய காலம் முதலே பறவைகள் போலத் தானும் பறக்க வேண்டும் என்று முயன்று கொண்டிருந்தான். அவர்களில் ஒருவர் அபூ பிர்னஸ். அவர் பறக்கும் பொறி ஒன்றைச் செய்து அதைச் சிறிது தொலை பறக்கச் செய்தார். இதனால்தான் அறிஞர் ஒருவர் கூறினார், ''அன்று மட்டும் நோபல் பரிசு அளிக்கும் முறை இருந்திருந்தால் அதைப் பெறுபவர்களில் பெரும்பாலாராக முஸ்லிம்களே இருந்திருப்பர்'' என்று.

ஆனால் அந்த உயர்நிலை இப்பொழுது இல்லை என்னும் துயர்நிலையை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். நம் இந்தியாவை எடுத்துக் கொண்டால், இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி இருக்கும் வரை முஸ்லிம்கள் உயர் கல்வியிலும் உயர்ந் திருந்தார்கள், உயர் அரசுப் பதவிகளிலும் அமர்ந்திருந்தார்கள். ஆங்கிலேயர் ஆட்சி இந்நாட்டிற்கு வந்தபின்னர் இந்நிலை முற்றிலும் மாறியது. நம்மிடமிருந்து ஆட்சியைப் பறித்தவர்கள் அந்நிய ஆங்கிலேயர். அவர்களின் மொழியைக் கற்பதா, அவர் களின் கீழ் பணிபுரிவதா என முஸ்லிம்கள் எண்ணினார்கள். அதிலிருந்துதான் ஆரம்பித்தது சீரழிவு. சர் சையித் அஹ்மது

கான் போன்ற சான்றோர்கள் இவ்வவல நிலையை நீக்க அயராது பாடுபட்டார்கள் தாம். ஆனாலும் அவர்களால் அந்நிலையைப் முற்றிலும் அகற்ற முடியவில்லை. அதனால்தான் முஸ்லிம்கள் இன்றும் பிற்பட்ட வகுப்பினராக இருந்து கொண்டிருக் கிறார்கள்.

சமீப காலம் வரை முஸ்லிம்களின் அதிகபட்சப் படிப்பாக ஐந்தாம் வகுப்பே இருந்து கொண்டிருந்தது. அதன்பின் எட்டாம் வகுப்பை எட்டியது. இப்பொழுது பத்தாம் வகுப்பாக ஆகியிருக்கிறது. ஆயினும் பத்தாம் வகுப்பை எட்டும் முஸ்லிம் பிள்ளைகளும் குறைவு. அதைத் தாண்டும் முஸ்லிம் பிள்ளைகளும் அதைவிடக் குறைவு. பத்தாம் வகுப்பு வரை படித்தால் போதும் என்னும் எண்ணம் முஸ்லிம் பிள்ளை களிடமும் இருக்கிறது, முஸ்லிம் பெற்றோர்களிடமும் இருக்கிறது. ஒரு கடையில் சேர்ந்து உழைக்கலாம், கடல் கடந்து சென்று பிழைக்கலாம் என்று பிள்ளைகளும் நினைக்கிறார்கள், பெற்றோர்களும் நினைக்கிறார்கள். கை நிறையச் சம்பாதிக்க இது போதும் தான், பை வழியச் சம்பாதிக்க இது பற்றாது.

ஒரு சில முஸ்லிம் பிள்ளைகளே பன்னிரண்டாம் வகுப்பு பாஸ் செய்கிறார்கள். இதன்பின் என்ன செய்வது என்று விழிக்கிறார்கள். கடல் போல் கல்வி விரிந்து கிடப்பதை இவர்கள் காணவில்லை. இப்பொழுது உங்களுக்குப் பெரும் பாலும் இருபது வயது இருக்கும். ஏதாவது ஒரு தொழில் கல்வியில் சேர வேண்டும் என்று எண்ணுங்கள், ஆசைப் படுங்கள், ஆர்வம் கொள்ளுங்கள், அதற்கான முயற்சியில் இறங்குங்கள்! துவக்குங்கள், அல்லாஹ் துணை நிற்பான். தொழில் கல்வி கற்பதெல்லாம் மிகவும் செலவு ஆகும் காரியம் என்பது உண்மைதான். எனினும் நீங்கள் முயன்றால் முடியும் என்பது அதனினும் பெரிய உண்மை. உங்கள் பெற்றோரிடம் ஏதாவது சொத்திருந்தால் அதை முழுதும் அல்ல, அதில் ஒரு பகுதியை விற்பனை செய்யுங்கள், அதைக் கொண்டு உங்கள்



கல்வியைத் தொடருங்கள். உங்கள் உறவினர் எவராவது வசதி உள்ளவர்களாய் இருந்தால் அவர்களின் உதவியை நாடுங்கள். உங்கள் பெற்றோர்களின் நண்பர்கள் எவராவது இரக்க சிந்தை உள்ளவர்களாய் இருந்தால், அவர்களின் உதவியை நாடுங்கள்! எப்படியும் உயர் கல்வி படிப்பது, வாழ்வில் உயர்வது என்பதில் வைராக்கியமாய் இருங்கள்! இப்படி இருந்த எத்தனையோ பிள்ளைகள் படித்து, பல கலையும் கற்று வாழ்வில் உயர்ந்து வாகை சூடியிருக்கிறார்கள். நம் நாட்டின் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் ஓர் ஏழை விவசாயியின் மகன்தான். பிறர் உதவியால்தான் அவர் இவ்வளவு கற்றிருக்கிறார். இங்கிலாந்தில் பயிலும்போது அதிகம் மதிப்பெண்கள் பெற்றதால் கிடைத்த மானியங்களைக் கொண்டுதான் தாம் உயர் கல்வி கற்றதாக அவர் கூறினார்.

அதனால் வறுமையில் வாடிக் கொண்டும், வயிற்றிற்குக் கூட உணவு பற்றாமல் பரிதவித்துக் கொண்டும் அன்றைய முஸ்லிம்கள் பயின்றார்கள், பலகலையும் கற்றார்கள். அறிஞர் அபுல் அலாவுதீன் பகுதாதுப் பள்ளி ஒன்றின் சுவரில் மாட்டப் பட்டிருந்த விளக்கின் ஒளியில் நின்று படித்தார். அறிஞர் அபுந் நாஸர் ஃபாராபி வீதி விளக்கின் வெளிச்சத்தில் நின்று கற்றார்.

இவ்வித நிலைகளெல்லாம் நம் பிள்ளைகளுக்கு இல்லை. இருக்கும் வசதியை வைத்துக் கொண்டு அவர்கள் ஒழுங்காகப் படிக்க வேண்டும். முதலில் நீங்கள் வகுப்பிற்கு ஒழுங்காகச் செல்ல வேண்டும். அங்குக் கற்றுக் கொடுப்பதைக் கவனமாகக் கேட்க வேண்டும். முக்கியமான விஷயங்களைக் குறிப் பெடுத்துக் கொள்ள வேண்டும். அந்தக் குறிப்பு ஆசிரியர் நடத்திய பாடத்தை நினைவுபடுத்திக் கொள்ள உங்களுக்கு நன்கு உதவும், தேர்வு நேரத்திலும் உங்களுக்கு அதிக உதவியாக இருக்கும். பாடங்களைச் சுவையாகச் சொல்லித் தரும் ஆசிரியர்களும் உண்டு; அப்படிச் சொல்லித் தராத ஆசிரியர் களும் உண்டு. ஆனால் இருவர் சொல்லித் தருவதிலும்

உங்களுக்குத் தேவையான விஷயங்கள் இல்லாமல் போகா. எனவே நீங்கள் வகுப்பை நன்கு கவனியுங்கள். வசதியுள்ள பிள்ளைகள் சிலருக்குக் கல்லூரி வாழ்க்கை ஒரு வேடிக்கையான காலமாக இருக்கும். அவர்கள் வகுப்பை கவனிக்கவும் மாட்டார்கள், ஆசிரியரைக் கேலியும் செய்வார்கள். இவர்களுடன் நீங்கள் சேர வேண்டாம்.

ஆசிரியரைக் கேலி செய்வதற்குக் காரணம் அவரைக் கேவலமாகக் கருதுவதாகும். ஆசிரியரைக் கேலி செய்து, கிண்டல் பண்ணுவதால் அவரால் வகுப்பை ஒழுங்காக நடத்த முடியாமல் போய் விடுகிறது. அதனால் அக்கறையுடன் படிக்கும் பிள்ளைகளும் பாதகமடைகிறார்கள். ஆசிரியரைக் கேலி செய்யும் இந்தப் பிள்ளைகள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளதை அறிந்தால் நிச்சயம் திருந்துவார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: ''எவன் தன் ஆசிரியரைக் கேவலமாகக் கருதுகிறானோ அவனை அல்லாஹ் பல சோதனைகளில் போடுகிறான். அவன் கல்வி பயனற்றதாக ஆகிவிடும். அவன் நலம் குன்றி விடும். அவன் முதுமையில் மிகவும் கேவலமாக்கப்படுவான்.'' அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியது எவ்வளவு உண்மை என்பதை வகுப்பில் கலாட்டா செய்த பிள்ளை சிலர் வாழ்வில் தோல்வியுற்று வருந்துவதைப் பார்க்கும் போது அறிந்து கொள்ளலாம்.

இப்பொழுது ஆசிரியர் - மாணவர் உறவெல்லாம் அவ்வளவு நன்றாக இல்லை. தந்தை - மகன் உறவு போன்று இருக்க வேண்டியது அது. அதற்கு மேற்பட்ட உறவு என்றும் கூடக் கூறலாம். ஆசிரியர் என்பவர் நாம் அறிந்திராத ஒன்றை அறிந்தவர், அதை நமக்குக் கற்றுத் தருகிறார், அதனால் அவர் மேலானவர் என்பவர் என்பதில் என்ன ஐயம்?

ஆசிரியர்பற்றிக் கவி திலகர் இக்பால் என்ன கூறினார், எப்படி நடந்து கொண்டார் என்பதைத் தெரிந்து கொண்டால்



நீங்கள் ஆச்சரியம் அடைவீர்கள். அவர் இவ்விதம் சொன்னார்: ''ஒரு காலம் இருந்தது. கற்றுக் கொடுத்த ஆசிரியரைக் கண்டால், அவருக்கு உன் இதயத்தையே காணிக்கையாகக் கொடு என்று சொல்லும் நிலை. ஆனால் இன்றைய மாணவர்கள், 'ஏன் சார் பாடம் சொல்லியாயிற்றல்லவா? உங்கள் 'பில்'லைக் கொண்டு வாருங்கள்!' என்று சொல்லுவார்கள்.''

இக்பாலைச் சிறப்பிக்க அன்றைய அரசு அவருக்கு 'டாக்டர்' பட்டம் கொடுக்க விரும்பியது. அரசின் விருப்பம் அவரிடம் அறிவிக்கப்பட்ட போது, ''பட்டம் தாருங்கள்! ஆனால் எனக்கு அல்ல'' என்று அவர் கூறினார். ''உங்களைக் கௌரவிப்பதற்காகத்தானே இந்தப் பட்டம்'' என்று அரசு தரப்பில் கூறப்பட்டது. ''என்னைக் கௌரவிக்க விரும்பினால் நான் குறிப்பிடுகிற ஒருவருக்குப் பட்டம் கொடுங்கள்!'' என்று கூறித் தம் ஆசிரியரின் பெயரைக் குறிப்பிட்டார் இக்பால். ''அது எப்படி முடியும்? டாக்டர் பட்டம் பெற வேண்டுமானால் உங்களைப் போல் பல நூல்களை அவர் எழுதியிருக்க வேண்டுமே. நீங்கள் குறிப்பிடும் உங்கள் ஆசிரியர் அப்படி எதையும் செய்திருப்பதாகத் தெரியவில்லையே'' என்று அரசு தரப்பில் கூறப்பட்ட போது, ''உயிருள்ள புத்தகம் ஒன்றை அவர் உருவாக்கியிருக்கிறாரே, அதைவிட அவர் என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்? அந்த உயிருள்ள நடமாடும் புத்தகம் நான்தான். என்னை இந்த அளவுக்கு ஆளாக்கிய ஆசிரியருக்குப் பட்டம் கொடுக்காமல் வேறு எவருக்குப் பட்டம் கொடுக்க வேண்டும் என்கிறீர்கள்?'' என்று இக்பால் கேட்டார். தம் ஆசிரியர்மேல் எவ்வளவு மதிப்பு வைத்திருந்தால் இக்பால் இப்படிக் கேட்டிருப்பார் என்று எண்ணிப் பாருங்கள்!

இவ்விதம் ஆசிரியரை மதித்து, அவர் கற்றுத் தருவதைக் கவனித்து நீங்கள் படித்தால் நிச்சயம் நீங்கள் கல்வியில் உயர்வீர்கள். உள்ளூர்ப் பள்ளியில் படித்தால் போதும், உள் நாட்டுக் கல்லூரியில் படித்தால் போதும் என்று எண்ணாமல்

மேலை நாட்டுப் பல்கலைக் கழகங்களில் படிக்க வேண்டும் என்று ஆசை கொள்ளுங்கள்! அன்றைய முஸ்லிம்கள் அறிவைத் தேடுவதற்காக அபாயம் மலிந்த அந்தக் காலத்தில் ஒட்டகங்களில் ஏறிப் பாலைவனங்களையெல்லாம் கடந்து சென்றார்கள். அப்படிச் செல்லும் போது வழிப்பறிக் கொள்ளையர்களிடம் அகப்பட்டுக் கொண்டு அவதிப்பட்ட சம்பவங்கள் அநேகம் உண்டு. இப்படிப் பல காதங்கள் பயணம் செய்து படித்தவர்களில் இப்னுபைதார், சையிது ஷரீஃப், அபூ ஹாதம் ராஜீ, ஹாபில் இப்னு தாஹிர், சயீது இப்னு முஸையப், இமாம் புகாரி, ஆகிய பலர் ஆவர்.

மேலைநாடுகள் சென்று படிக்கும் மாணவர்கள் நம் சமுகத்தில் மிகவும் குறைவு. குறைவு என்ன அறவே கிடையாது என்றுகூடக் கூறலாம். அறிவியல் அறிஞர்கள் அதிகம் உள்ள நாடு இந்தியா என்று கூறப்படுகிறது. ஆனால் அறிவியல் அறிஞர்கள் அரிதாக உள்ள சமுகம் நம் சமுகம் என்றும் சொல்லப்படுகிறது.

மேலைநாடுகளுக்கெல்லாம் சென்று உயர்கல்வி பெற வேண்டும் என விரும்பினால் இங்கு நீங்கள் நன்கு கற்று உங்கள் அறிவை அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டும். படிக்க வேண்டியவை பாடப் புத்தகங்கள் மட்டும்தான் என்னும் எண்ணத்தை நீங்கள் விட்டு விட வேண்டும். உங்கள் பாடங்கள் சம்பந்தமான பல புத்தகங்கள் உங்கள் கல்லூரி நூலகங்களில் இருக்கும். அவற்றை எடுத்துப் படியுங்கள். பல பிள்ளைகளிடம் அவர்கள் பெற்ற பட்டத்திற்கு ஏற்ற அறிவு இருப்பதில்லை. நீங்கள் ஒரு பட்டம் பெற்றிருந்தால் அந்தப் பட்டத்திற்கும் மேற்பட்ட அறிவு உங்களிடம் இருக்க வேண்டும். அப்பொழுது தான் நீங்கள் ஒரு பதவியில் இருந்தால் அந்தப் பதவிக்கும் அதிகமான திறன் உள்ளவராய் ஆக முடியும். மொத்தத்தில் உங்கள் அறிவு உலகத் தரத்திற்கு உயர வேண்டும்.



பொதுவாகப் பிள்ளைகள் கல்வி கல்லூரியுடன் முடிந்து விடுகிறது என்று கருதிக் கொள்கிறார்கள். அது தவறு. கல்வி நிலையங்கள் கல்வி முற்றுப் பெறும் இடங்கள் அல்ல, அவை கல்வி துவக்கப்படும் இடங்கள். அவை கல்விக்கு அடிக்கால் இடுகின்றன. அடிக்காலே கட்டடம் ஆகாதது போல் கல்வி நிலையங்களே கல்வி முற்றுப் பெறும் இடங்களாக ஆக மாட்டா. உண்மையில் நீங்கள் கல்வி நிலையங்களை விட்டு வெளியேறியதும்தான் உங்களின் கல்வி தொடங்குகிறது. அதனால்தான் அன்றைய முஸ்லிம்கள் ஒரே சமயத்தில் அறிஞர்களாயும் இருந்தார்கள் மாணவர்களாயும் இருந்தார்கள்.

படிக்கும் காலத்தில் உங்கள் கவனமெல்லாம் படிப்பில் தான் பதிந்திருக்க வேண்டும். நாம் கூறுவது கண்டு நாங்கள் வேறு வேலை எதுவுமே செய்யக் கூடாதா என்று நீங்கள் கேட்கலாம். உங்களுக்கும் உதவிக் கொள்ளுங்கள், பிறருக்கும் உதவிக் கொள்ளுங்கள் என்பதே நாம் கூற விரும்பும் ஆலோசனை ஆகும். உங்களின் உடல்நலத்தையும், உடல்பலத்தையும் அதிகரிக்கச் செய்யும் உடற்பயிற்சியையும் செய்து கொள்ளுங்கள், உடற்பயிற்சி தரும் விளையாட்டுக்களிலும் ஈடுபடுங்கள். ஆனால் அது உங்கள் படிப்பிற்குப் பாதகம் செய்யும் அளவு போய் விட வேண்டாம்.

இப்பொழுது பேரிடிகள் போல் பேரிடர்கள் உலகின் பல பாகங்களிலும் உண்டாகிக் கொண்டிருக்கின்றன. இடைக் கிடையே அவை நம் நாட்டிலும் ஏற்படுகின்றன. அவ்வித சமயங்களில் நீங்கள் உங்களால் இயன்ற சிறு சிறு பணிகள் புரிவதில் ஒரு தவறும் இல்லை. கடினமான பணிகளில் நீங்கள் கலந்து கொள்ள முடியாவிட்டாலும் எளிமையான பணிகளில் ஏன் ஈடுபடக் கூடாது? இதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கிறது. அவர்கள் இளைஞராய் இருக்கும் போது 'ஹிஸ்புல் புஸூல்' என்னும் பெயரில் ஒரு சங்கத்தை ஏற்படுத்தி அதில் தம் வயதொத்த

இளைஞர்களைச் சேர்த்துக் கொண்டு மக்கள் தொண்டு செய்தார்கள். யாத்திரைக் காலங்களில் மக்கா வரும் யாத்திரிகர்களுக்கு உதவி செய்தார்கள், ஒத்தாசை புரிந்தார்கள். பாலைவன அரேபியாவில் உணவிற்கும் அதிகமாகத் தேவைப்படுவது தண்ணீராகும். எனவே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தாகத்தால் தவிக்கும் யாத்திரிகர்களுக்குத் தண்ணீர் கொடுக்கும் தகுபணியைச் சிறப்பாகச் செய்தார்கள். அவர்கள் கடைவீதிக்குப் புறப்படும் போது, ''முகம்மது கடைத் தெருவுக்குச் செல்கிறார், உங்களுக்குத் தேவையான சாமான்களைக் கூறுங்கள்!'' என்று உதவி அற்ற ஏழைப் பெண்களின், ஆதரவற்ற அபலை விதவைகளின் வீட்டு வாயில்களில் நின்று கூவுவார்கள். அவர்கள் கூறும் சாமான்களையெல்லாம் வாங்கித் தம் தோளில் போட்டுக் கொண்டு, தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வந்து கொடுப்பார்கள். 'பெரிய குடும்பத்துப் பிள்ளை, ஏன் இப்படியெல்லாம் செய்கிறார்?' என்று உறவினர் குறைபட்டுக் கொண்டால் அவர்களைப் பார்த்துப் பகர்வார்கள், ''நான் ஹாஷிமின் பெயரன். ஹாஷிம் எல்லோரையும் நேசித்தார்'' என்று.

தீனர்களைக் கண்டால் இப்படி உதவுவதுடன் தீமையைக் கண்டால் அதை இப்படி அகற்றலாம்: எகிப்தில் ஓர் இளம் பிள்ளை இருந்தார். அவர் கப்பல் பயணம் செய்யும் போது பிறந்த மேனியுடன் இருந்த பெண்சிலை ஒன்று கப்பலில் இருப்பதைக் கண்டார். அது கப்பலைத் தூசுபடுத்தா விட்டாலும் அதைப் பார்க்கும் மக்களின் மனங்களை மாசு படுத்தும் என அவர் எண்ணினார். உடனே அவர் காவல் துறை அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதினார், ''அது கப்பலில் இருக்கத் தக்கதல்ல, கடலில் தூக்கி எறியத் தக்கது'' என.

இவ்விதப் பணிகளை நீங்கள் உங்கள் படிப்பிற்கிடையிலும் புரிந்து கொள்வதில் தவறில்லை. சில இளைஞர்கள் படிக்கும் போதே ஏதாவது ஒரு தொழிலைத் தொடங்கிவிட வேண்டும் என்று விரும்புகிறார்கள். சில இளைஞர்கள்



அரசியலில் ஈடுபட்டுவிட வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். அவர்களைப் பார்த்து நாம் கூற விரும்புவது இது தான்: ''கொஞ்சம் பொறுங்கள்!'' படித்துப் பட்டம் பெற்ற பின் நீங்கள் என்ன பண்ண வேண்டும் என்பதற்கு ஓர் அழகான வழி காட்டும் பொன்மொழி இருக்கிறது. அது பள்ளி ஒன்றில் அப்பள்ளியில் பயில நுழையும் மாணவர்களுக்கு வழி காட்டுவதற்காகப் பொறிக்கப்பட்டிருக்கிறது. அது என்ன தெரியுமா: 'Enter to learn, Leave to Serve' பயில உள்ளே நுழை, பணி புரிய வெளியே செல்! என்பதுதான் அதன் பொருள். பல பாடுபட்டு எங்களைப் படிக்க வைத்த எங்கள் பெற்றோர் களுக்கு நாங்கள் உதவ வேண்டாமா, ஊருக்குத்தான் நாங்கள் உதவ வேண்டுமா என்று நீங்கள் கேட்கலாம். 'பணி புரிய' என்னும் சொற்றொடரில் உங்களுக்கு உதவுவதும் அடங்கும்; ஊருக்கு உதவுவதும் அடங்கும். எனவே உங்களை உயர்த்திக் கொள்வதற்காக, உங்களுக்கு உதவிக் கொள்வதற்காக நீங்கள் புரியும் எந்தப் பணியிலும், ஊரை உயர்த்துவதும் ஊருக்கு உதவுவதும் சிறிதளவாவது இருக்கட்டும். மேலைநாடு சென்று உயர் கல்வி பெறும் இளைஞர்கள் சிலர் ஊருக்குத் திரும்புவதில்லை. அங்கேயே பெரும் ஊதியம் பெறும் பதவியைத் தேடிக் கொள்கின்றனர். தங்களை உயர்த்திக் கொள்ள அவர்கள் பெரும் பதவிகளில் அமர்ந்து பணி புரிந்தாலும் அவர்கள் தாம் பிறந்த நாட்டை மறந்து விடக் கூடாது. ஏனெனில் அவர்கள் பயில இந்நாட்டு அரசு பல இலட்சம் ரூபாய்களை அவர்களுக்காகச் செலவிட்டிருக் கின்றது. எனவே அவர்கள் மேலைநாட்டில் வதிந்தாலும் அவர்களின் பார்வை தாய்நாட்டின் மீது பதிந்திருக்க வேண்டும்.

ஆனால் அவர்கள் தாம் வசிக்கும் நாட்டின் குடியுரிமையைப் பெற்று அதன் குடிமக்களாய் ஆகிவிட்டால் அதன்பின் அவர்கள் தாம் பிறந்த நாட்டை நேசிக்கலாம்.. ஆனால் அவர்கள் விசுவாசிக்க வேண்டியது தாம் குடியுரிமை பெற்ற நாட்டைத் தான்.

# 3

# நல்ல கணவர்

இப்பொழுது நீங்கள் இருபத்தைந்து வயதை அடைந்த அல்லது சற்றுக் கடந்த இளைஞராய் இருப்பீர்கள். ஒரு வேலையைத் தேடிக் கொண்ட பின், ஒரு தொழிலை உண்டு பண்ணிக் கொண்ட பின் திருமணம் செய்து கொள்ளலாம் என்று சிலர் எண்ணலாம். நீங்கள் ஒரு வேலையைத் தேடிக் கொண் டால் சரி, ஒரு தொழிலை உண்டு பண்ணிக் கொண்டால் சரி. அப்படிச் செய்து கொள்ளுவது தள்ளிப் போகுமானால் இந்த வயதிற்குப் பிறகும் உங்கள் திருமணத்தைத் தள்ளிப் போட வேண்டாம். நமக்கு ஒருவேலை கிடைக்கும், நமக்கு ஒரு தொழில் ஏற்படும் என்று நம்பி, அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்துத் திருமணத்தைச் செய்து கொள்ளுங்கள்.

திருமணத்தில் எத்தனையோ நன்மைகள் இருப்பதால்தான் அதனை அல்லாஹ்வும் ஏவினான், அவன் தூதரும் வலியுறுத்தி னார்கள். திருமணத்தில் இருக்கும் பிரதான நன்மைகள் இரண்டு: ஒன்று கற்பு, மற்றொன்று சந்ததி. அதனால்தான் அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''வாலிப சமூகத்தினரே! உங்களில் உடல் வலிமையுள்ளவர்கள் அவசியம் திருமணம் செய்து கொள்வீர் களாக! ஏனெனில் அது உங்களின் பார்வையைச் சீர் செய்து, உங்களின் கற்பைப் பாதுகாப்பதற்குச் சிறந்த வழியாகும்'' என்று கூறினார்கள்.



ஒரு முஸ்லிமிடம் மார்க்கம் பூரணமாக இருக்க வேண்டும். அதைப் புரிவது எது என்று உங்களுக்குப் புரிகிறதா? அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள், கேட்டுக் கொள்ளுங்கள்: ''மார்க்கத்தில் ஒரு பாதி தொழுகை, நோன்பு போன்றவற்றால் பூரணமடைகிறது, மறுபாதி திருமணத்தால் பூரணமடைகிறது.''

திருமணம்தான் ஓர் இளைஞனைப் பொறுப்புள்ள மனித னாக மாற்றுகிறது. அதனால்தான் சிலர் சொல்வர் பொறுப் பற்றுத் திரியும் இளைஞர்களைப் பார்த்து, ''அவனுக்கு ஒரு கால் கட்டுப் போடுங்கள்! எல்லாம் சரியாகிவிடும்'' என்று. கால்கட்டு என்று அவர்கள் குறிப்பிடுவது திருமணத்தைத்தான். திருமணத் திற்குப் பின் திருந்திப் பொறுப்புள்ள பிள்ளைகளாய் மாறியவர்களை நீங்கள் பார்த்திருக்கலாம். திருமணம் செய்ததும் தம் வயிற்றிற்கும், மற்றொரு வயிற்றிற்கும் உணவு அளிக்க வேண்டும் என்னும் பொறுப்பு அவர்களுக்கு வந்து விடுவது தான் அதற்குக் காரணம். பிள்ளைகள் பிறந்து விட்டால் அந்தப் பொறுப்பு இன்னும் அதிகமாகி விடுகிறது. மனைவி என்று ஒருத்தி வந்த பிறகும், பிள்ளைகள் ஒன்றிரண்டு பிறந்த பிறகும் பொறுப்பைப் புரிந்து கொள்ளாமல் சிலர் இருப்பர். அவர்கள் கணக்கில் எடுக்கப்படக் கூடியவர்கள் அல்லர். பெரும்பாலார் வாழ்வில் திருமணத்திற்குப் பின் ஒரு மாற்றம் ஏற்படுவது திண்ணம்.

கற்புள்ள மனைவியை விளைநிலம் என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் வர்ணித்தார்கள். ''திருமணங்கள் செய்து சந்ததி விருத்தி செய்து கொள்வீர்களாக!'' என்றும் அவர்கள் கூறினார்கள். பிள்ளைகள் இல்லாத வீட்டைப் பாழடைந்த வீடு என்றும் அவர்கள் பகர்ந்தார்கள்.

இவ்வித நன்மைகள் திருமணம் செய்து கொள்வதில் இருக்கும் போது அதைச் செய்து கொள்ளாமல் சிலர் தள்ளிப்

போட நினைக்கிறார்கள். சிலர் தவிர்க்கவும் நினைக்கிறார்கள். வேலை என்ன எப்படி எளிதாகவா கிடைக்கிறது, தொழில் என்ன அப்படி எளிதாகவா கை கொடுக்கிறது என்னும் எண்ணமும், பல வாய்களுக்கு உணவளிக்க வேண்டுமே என்று பலவாறாய் எண்ணுவதும் அவர்களின் தயக்கத்திற்குக் காரணமாகும். இந்தக் காரணங்களால் திருமணம் செய்து கொள்ளாமல் இளமையைக் கழித்து விடும் சிலர் நடு வயதில் ஞானோதயம் பெறுகிறார்கள். இளமையிலேயே திருமணம் செய்யாதது தவறு என உணர்கிறார்கள். இப்பொழுது திருமணம் செய்து கொண்டால் என்ன என்று எண்ணத் தொடங்குகிறார்கள். இள்மை கழிந்து விட்ட பிறகு, காலம் கடந்து விட்ட பிறகு அவர்களுக்கு இந்த ஆவல் பல மடங்காக அதிகரிக்கிறது. உடல், உள்ளம் கெட்டுப் போவதும் தனிமை இன்பம் கைத்துப் போவதும்தான் இதற்குக் காரணமாகும். சிலர் ஆவல் நிறைவேறுகிறது, சிலர் விருப்பம் நிறை வேறாமலேயே போய் விடுகிறது. அவர்கள் சோக மனிதர் களாக உலகில் உலவிவிட்டு உயிரை விடுகிறார்கள்.

இவ்வித நிலைகளெல்லாம் ஏற்படக் கூடாது என நினைப் பவர்கள் அவசியம் திருமணம் செய்து கொள்ள வேண்டும். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள், ''திருமணம் என்பது என் வழிமுறைகளில் ஒன்றாகும். என் வழிமுறைகளை எவராவது புறக்கணிப்பார்களேயானால் அவர்கள் என்னைச் சேர்ந்தவர்கள் அல்லர்'' என்று.

திருமணம் செய்து கொள்வது என்று தீர்மானித்ததும் இளைஞர்கள் முதலில் நல்ல பெண் தம் உறவில் இருக்கிறாளா என்று பார்க்க வேண்டும். அப்படி இல்லா விட்டால் தம் ஊரில் இருக்கிறாளா என்று பார்க்க வேண்டும். உறவில்தான் பெண் எடுக்க வேண்டும், ஊரில்தான் பெண் எடுக்க வேண்டும் என்பது இஸ்லாமியக் கட்டளை அல்ல. ஒரு பெண் எத்தகையவள் என்பதை உறவில் அல்லது ஊரில்தான் ஓரளவாவது



தெரிந்துகொள்ள முடியும். அந்நியத்தில், அயல் ஊரில் பெண் பார்த்தால் அப்பெண் பற்றி விசாரித்து அறிவது கொஞ்சம் கஷ்டம். பெண்ணிடம் குறை இருந்தால் அதைக் கூறச் சிலர் தயங்குவார்கள். 'ஏன் ஒரு பெண் பாவத்தை அள்ளிக் கட்டிக் கொள்ள வேண்டும்' என்று எண்ணுவதே அவர்களின் தயக்கத்திற்குக் காரணமாகும். ''ஆயிரம் பொய் சொல்லி ஒரு திருமணத்தைச் செய்து வை!'' என்று நம் நாட்டில் ஒரு பழமொழி இருப்பதால் உண்மையை மறைத்துப் பொய்யும் கூறுவார்கள். மேலும் பெண் பார்க்கும் போது அவளின் குடும்பம் பற்றியும், அவளின் பெற்றோர்கள் பற்றியும் கொஞ்சமாவது அறிந்து கொள்வது அவசியம். ஏனெனில் அந்தப் பெண் மூலம் சந்ததி ஏற்படப் போகிறது. அந்த சந்ததி களிடம் அந்தப் பெண்ணின் பெற்றோர்களின் குணம் இருப்பது இயற்கை. இந்தக் காரணங்களால்தான் உறவில் ஊரில் பெண் பார்ப்பது நலம் எனக் கூறுகிறோம்.

ஆனால் இஸ்லாம் இளைஞர்கள் மார்க்க பக்தியுள்ள பெண்ணையே தேர்ந்தெடுக்க வேண்டும் என வலியுறுத்து கிறது. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

''பெண்கள் நான்கு நன்மைகளின் காரணமாக மண முடிக்கப் பெறுகிறார்கள். (1) அவளின் செல்வத்தின் காரணமாக, (2) அவளின் உயர் குலத்தின் காரணமாக, (3) அவளின் அழகின் காரணமாக, (4) அவளின் மார்க்க பக்தியின் காரணமாக! எனவே நீங்கள் மார்க்க பக்தியுள்ளவளைத் தேடிப் பெறுவீர்களாக! (இல்லையெனில்) உங்கள் கை மண்ணாகட்டும்!'' இந்தக் கடுமையான சொற்களை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அவசியம் கருதித்தான் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

இளைஞர்கள் பெண்ணைத் தேர்ந்தெடுக்கும் வேலையைத் தம் பெற்றோர்களிடமே விட்டு விட வேண்டும். ஏனெனில் இம்மாதிரி விஷயங்களில் உங்கள் பெற்றோர்

களுக்குத்தான் அனுபவம் அதிகம் இருக்கும். அவர்கள் ஒரு பெண்ணைப் பார்த்து அவளைப் பற்றி உங்களிடம் கூறினால், ''அவள் மார்க்கப் பக்தியுள்ள பெண்ணா?'' என்பதுதான் உங்களின் முதல் கேள்வியாக இருக்க வேண்டும். ''ஆம்'' என்று அவர்கள் கூறினால் இஸ்லாமிய முறைப்படிதான் திருமணம் செய்ய வேண்டும் என்று அவர்களிடம் உறுதியாகக் கூறி விட வேண்டும்.

ஆடம்பரத்தை இஸ்லாம் எதிலும் அனுமதிக்கவில்லை. அதிலும் திருமணத்தில் அது அறவே கூடாது என்பதுதான் இஸ்லாமிய விதியாகும். அதனால்தான் ''திருமணங்களில் சிறந்தது எளிமையான திருமணம்'' என்றும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவ்விதமே அவர்கள் தம் அருமை மகள் பாத்திமா (ரலி) அவர்களின் திருமணத்தை இதற்கு மேலும் எளிமையாக நடத்த் முடியாது என்று கூறத்தக்க விதம் செய்தும் காட்டினார்கள்.

சில பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு எளிமையாகத் திருமணம் செய்ய மறுப்பதற்கு ஒரு காரணம் தம் தரம் என்பது. தரம் என்று அவர்கள் தம் செல்வத் தரத்தைத்தான் குறிப்பிடுகிறார்கள். பாத்திமா (ரலி) அவர்களுக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மிகவும் எளிமையாகத் திருமணம் செய்து வைக்கும் போது உண்மையில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் அரசர்க்கும் அரசராய் இருந்து கொண்டிருந்தார்கள். தம் செல்வத்தின் தரம் பற்றிப் பேசும் பெற்றோர்கள் தம் பிள்ளையின் திருமணத்தில்தானா அதைக் காட்ட வேண்டும்? அவர்கள் தம் தரத்தைக் காட்ட வேண்டுமானால் பிள்ளைகள் படிக்க ஒரு பள்ளிக்கூடத்தைக் கட்டட்டுமே, மக்கள் தொழ ஒரு பள்ளிவாயிலைக் கட்டட்டுமே.

எனவே இளைஞர்கள் இந்த விஷயத்தில் தங்கள் பெற்றோரின் பிடிவாதத்திற்குப் பிடி கொடுத்து விடக்கூடாது.



அடுத்தது வரதட்சினை வாங்கும் விஷயம். மணமகன்தான் மணமகளுக்கு 'மகர்' கொடுக்க வேண்டும் என்பது இஸ்லாமிய விதி. ''பெண்களுக்குரிய அவர்களின் 'மகர்' தொகைகளை பிரதி பலன் அற்ற கொடையாகக் கொடுத்து விடுங்கள்!'' என்று அல்லாஹ் தன் திருமறையில் கூறுகிறான் (4:4). இந்த 'மகர்' தொகையைத் திருமணத்திற்கு முன்பே கொடுத்து விடுவதே சிறந்ததாகும். ஒரு பெண், தன் கணவனிடமிருந்து பெறும் முதல் பணமாக அது இருக்க வேண்டும் என்பதற்காகச் செய்யப் பட்டதே இந்த விதியாகும்.

இந்த மகர் தொகை எவ்வளவு இருக்க வேண்டும் என்பதை அல்லாஹ் அழகாகக் கூறுகிறான். ''செல்வந்தன் தன் செல்வத்திற்குத் தக்கவாறும், ஏழை தன் சக்திக்குத் தக்கவாறும் 'மகர்' கொடுக்க வேண்டியவர்கள் (2:236)'' இதைக் கொண்டு மக்கள் மகர் தொகையை அவரவர் தகுதிக்கு ஏற்பக் கொடுத்துக் கொள்கின்றனர். மகராக அதிகத் தொகையும் கொடுக்கப்படு கிறது, மிகக் குறைந்த தொகையும் கொடுக்கப்படுகிறது. ''மகர் தொகை கொடுக்க சக்தியில்லாதவர்கள் இரண்டு உள்ளங்கை நிறைய மாவேனும் பேரீத்தம் கனிகளேனும் மகராகக் கொடுக்க (அவை) ஏற்றுக் கொள்ளப்பட்டன'' என அல்ஹதீஸில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு பெண் ஒரு சோடி மிதியடிகளை மகராகப் பெற்றுக் கொண்டு திருமணம் செய்து கொள்ள முன் வந்த போது அவளைப் பார்த்து அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''அதைக் கொண்டு நீர் திருப்தியுறுகிறீரா?'' என்று கேட்டார்கள். அவ்வாறு அவர்கள் கேட்டது அது மிகவும் குறைவான மகராக இருந்தது என்பதற்காகத்தான்.

மகர் சிறியதோ, பெரியதோ அதை மணமகன்தான் கொடுக்க வேண்டும் என்பது இஸ்லாமிய விதி. வரதட்சினை என்னும் பெயரில் மணமகன் மணமகளிடமிருந்து பெறுவதை இஸ்லாம் கடுமையாகக் கண்டிக்கிறது. ஆனால் இப் பொழுதோ இந்த இஸ்லாமிய விதி அதோகதி அடைந்திருக்கிறது.

பெண்களுக்குச் சொத்துரிமை இல்லாத காலத்தில் சில சமுகங்களில் திருமணத்தின் போது பெண்ணிடமிருந்து பெறும் பழக்கம் ஏற்பட்டது. பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்பட்டிருக்கும் இந்தக் காலத்தில் எந்தச் சமுகத்திலும் இருக்கத் தகுந்ததல்ல இந்தப் பழக்கம். முஸ்லிம் சமுகத்தில் இந்தப் பழக்கத்திற்கு இம்மியும் இடம் கிடையாது. ஏனெனில் ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்பேயே இஸ்லாம் பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கிவிட்டது. ஒரு பெண் எத்தனையோ வகைகளில் சொத்துக்களுக்கு உரிமை கொண்டாட இஸ்லாத்தில் இடமுண்டு.

எனவே முஸ்லிம் இளைஞர்கள் திருமணத்தின் போது பெண்ணைப் பெற்றவர்களிடமிருந்து பணம் பெறுவதை வெறுக்க வேண்டும், பெறுவதற்கு வெட்கப்பட வேண்டும். பெண்ணைப் பெற்றவர்களிடமிருந்து மட்டுமல்ல, வேறு எவரிடமிருந்தும் எதையும் பெறுவதை அவர்கள் வெறுக்க வேண்டும். கூடாது என்று அவர்கள் ஒதுக்க வேண்டும். ''வீரமிக்க ஆண்மைக்கு அடையாளம் எவரிடமிருந்தும், எவ்வித உதவியும் கோராமல் இருப்பதுதான்'' என இறைநேசச் செல்வர் புலைல் இப்னு இயால் (ரஹ்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். ''கடலின் நடுவில் வைத்தும்கூட உன் பாத்திரம் கவிழ்ந்திருக்கட்டும் நீர்க்குமிழியைப் போல்'' என்று கவி திலகர் இக்பால் கூறுகிறார். அதாவது கடலில் நடுவில் வைத்து உங்களுக்கு ஒரு பொருள் தேவைப்பட்டால் அதை அங்கிருக்கும் ஒருவர் வைத்திருந்தால் அதை அவரிடமிருந்து கேட்கக் கூடாது என்பதுதான் அவர் கூறியதன் பொருள். அதற்கு அவர் கூறும் உவமை அருமையானது. ''உங்கள் பாத்திரம் நீர்க்குமிழி போல் கவிழ்ந்திருக்கட்டும்'' என்று அவர் கூறியது நீர்க்குமிழி ஒரு பாத்திரத்தைக் கவிழ்த்துப் போட்டது போல் இருக்கும் என்பதால்தான். எனவே இளைஞர்கள்தம் பாத்திரம் எவர் முன்பும் நிமிரக் கூடாது. அதிலும் ஒரு பெண்முன் ஒரு போதும் நிமிரக் கூடாது என்பதில் உறுதியாக இருக்க வேண்டும்.



இளைஞர்கள் படித்துப் பல்கலையும் கற்று, உழைத்து உடல் வளைத்துப் பணம் சம்பாதிக்கட்டும், பங்களா கட்டட்டும், 'வேண்டாம்!' என்று எவரும் கூற மாட்டார்கள். 'சபாஷ்' என்று முதுகில் தட்டிக் கொடுப்பார்கள். எனவே அவர்கள் தம் முயற்சியால் முன்னேற முயல வேண்டும். ஓர் இளைஞனிடம், ''நீ யார்?'' என்று கேட்கப்பட்ட போது அவன் என்ன பதில் கூறினான், தெரியுமா? ''நான் என்னுடைய மகன்.'' அவனுடைய இந்தப் பதிலில் பொதிந்திருக்கும் பொருள் புரிகிறதா? ''நான் பிறரால் உண்டாக்கப்பட்டவன் அல்ல. நான் என்னாலேயே உண்டாக்கிக் கொள்ளப்பட்டவன்'' என்பதுதான் அவன் கூறியதன் பொருள். எவ்வளவு தன்மானம் இருந்தால் அவன் இப்படிக் கூறியிருப்பான் என்று எண்ணிப் பாருங்கள்! ஒரு நாள் இரவு மாவீரர் நெப்போலியன் மாறுவேடத்தில் தம் படையணிகளைப் பார்வையிட்டுக் கொண்டு வருகிறார். அப்பொழுது அவர் வருவதைப் பார்த்த ஒரு வீரன் அவரைப் பிடித்து நிறுத்தி, ''நில்! யார் நீ சொல்?'' என்றான். அப்பொழுது நெப்போலியன் என்ன கூறியிருப்பார் என்று எதிர்பார்க்கிறீர்கள். 'நான் பிறப்பால் கார்ஸிகன், தொழிலால் போர்வீரன், சாதனையால் சக்ரவர்த்தி' என்று பொருள்பட, "I am Corcican by birth, Soldier by profession, Emperor by achievement" என்று அவர் கூறினார். எவ்வளவு பெருமிதத்துடன் அவர் இப்படிக் கூறியிருப்பார் என்று எண்ணிப் பாருங்கள்! இதை எண்ணிப் பார்த்து நீங்கள் வாழ்வில் உயர உங்கள் உழைப்பு படிக்கட்டாக இருக்க வேண்டும் என்றும், ஒரு பெண்ணிடமிருந்து பெறும் பணக்கட்டு அல்ல என்றும் முடிவு செய்யுங்கள்!

வரதட்சிணை வாங்கும் விஷயத்தில் இருவர் பிழை செய்கிறார்கள். ஒருவர் பெற்றோர், மற்றொருவர் பிள்ளை. பெற்றோர்களைப் பார்த்து, ''ஏன் வரதட்சிணை வாங்குகிறீர்கள்? இஸ்லாத்திற்கு விரோதமான காரியம் இல்லையா அது?'' என்று கேட்டால் அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான பதிலைக் கூறுகிறார்கள்.

''எங்கள் பிள்ளையை எவ்வளவோ பணம் செலவு செய்து படிக்க வைத்தோம். அதை முழுவதும் அல்ல, அதில் ஒரு பகுதியைப் பெண்வீட்டாரிடமிருந்து பெற்றுக் கொண்டால் என்ன?'' இப்படிச் சிலர்.

''எங்களிடம் பெண் பிள்ளைகள் இருக்கின்றனர். அவர்களைத் திருமணம் செய்து கொடுக்க வேண்டுமானால், மாப்பிள்ளை வீட்டார் கேட்கும் வரதட்சிணையை நாங்கள் கொடுத்தால்தானே எங்கள் பெண்கள் கரையேறுவர். அதனால் எங்கள் பையனைத் திருமணம் செய்து கொள்ள விரும்பும் பெண்வீட்டாரிடமிருந்து வரதட்சிணை வாங்கினால் என்ன?'' இப்படிச் சிலர்.

''எங்கள் அடுத்த வீட்டுக்காரர்கள் அவர்கள் பையனுக்கு ஐம்பதினாயிரம் வாங்கினார்கள். எங்கள் எதிர்த்த வீட்டுக்காரர்கள் அவர்கள் பையனுக்கு ஓர் இலட்சம் வாங்கினார்கள். அவர்களெல்லாம் வாங்கும் போது நாங்கள் வாங்கினால் என்ன?'' இப்படிச் சிலர்.

''நாங்கள் வரதட்சிணை வாங்காமல் எங்கள் பிள்ளைக்குத் திருமணம் செய்தால் எங்கள் பிள்ளையிடம் ஏதாவது கோளாறு இருக்கும், அதனால்தான் பெண் வந்தால் போதும் எனத் திருமணம் செய்தோம் என ஊர் பேசுமே. இந்நிலையில் நாங்கள் வரதட்சிணை வாங்கினால் என்ன?'' இப்படிச் சிலர்.

''கொஞ்சம் குறைவாகத்தான் வரதட்சிணை வாங்கிக் கொண்டால் என்ன?'' என்று கேட்கப்பட்டால், ''மற்றவர்கள் எல்லாம் பெரும் தொகை வாங்கும் போது நாங்கள் சிறு தொகை வாங்கினால் அவர்களுக்கு நாங்கள் குறைந்தவர்கள் என்று ஆகிவிடாதா, என்ன?'' இப்படிச் சிலர்.

''நாங்கள் ஒன்றும் அவர்களிடம் கேட்கவில்லை. அவர்களாகத் தரும் போது வாங்கிக் கொண்டால் என்ன?'' இப்படியும் சிலர்.



இவையெல்லாம் அவைக்குப் போனால் அடிபட்டுப் போகும் வாதங்கள் என்பதில் ஐயமில்லை.

இளைஞர்களிடம் இதைப் பற்றிக் கேட்டால் 'நாங்களா கேட்கிறோம்? எங்கள் பெற்றோர்கள் அல்லவா கேட்கிறார்கள்' என்று கூறி அந்த விஷயத்தில் தங்களுக்கு அறவே சம்பந்தம் இல்லாதது போல் காட்டிக் கொள்கிறார்கள். ''உங்கள் பெற்றோர்களிடம் வரதட்சிணை வாங்க வேண்டாம்; அது இஸ்லாமிய விதிகளுக்கு எதிரானது என்று நீங்கள் கூறினால் என்ன?'' என்று கேட்டால், ''என் பேச்சை அவர்கள் எங்கே கேட்கிறார்கள்'' என்று சொல்லி விஷயத்தை அத்துடன் முடித்துக் கொண்டு விடுகிறார்கள்.

இஸ்லாமிய இளைஞர்களாகிய நீங்கள் இந்தச் சமுகத்தின் மிகவும் முக்கியமான அங்கம் இல்லையா? ஏழைப் பெண்களும் காலா காலத்தில் திருமணம் செய்து கொடுக்கப்பட்டு அவர்கள் கணவர் வீடு சென்று அங்கு அவர்கள் மகிழ்ச்சியோடு வாழ வேண்டும் அல்லவா? ஒரு பெண் திருமணம் ஆகாததால் ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டு ஒரு வீட்டில் இருந்து கொண்டிருந்தால் அந்த வீடும் விளங்காது, அந்த வீட்டிற்கு வலப்புறத்திலும் இடப்புறத்திலும் இருக்கும் பல வீடுகளும் விளங்க மாட்டா என்று கூறப்படுகிறது.

இதற்கு ஆதாரமாக இதோ இருக்கிறது ஒரு சம்பவம்: நபி மூஸா (அலை) அவர்கள் காலத்தில் இருந்த அரசன் பிரமாண்ட மாளிகை ஒன்றைக் கட்டினான். அது முழுமை பெறாமல் பல முறை இடிந்து விழுந்தது. அது பற்றி நபி மூஸா (அலை) அவர்கள் அல்லாஹ்விடம் கூறி அதன் இரகசியம் என்ன என்று கேட்ட போது அவ்வூரிலுள்ள வயதுக்கு வந்த பெண்ணின் பெருமூச்சால் அந்தக் கட்டடம் இடிந்து விழுகிறது என்றும் அந்தப் பெண்ணுக்குத் திருமணம் செய்து கொடுக்காத வரை மாளிகையைக் கட்டி முடிக்க முடியாது என்றும் அல்லாஹ் அறிவித்தான்.

வயதிற்கு வந்த பிறகும் பல பெண்கள் வரதட்சிணை கொடுக்க முடியாததால் திருமணம் செய்து கொள்ள முடியாமல் வீட்டிற்குள்ளே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தம் வாழ்வில் விடிவு வராதா என்று பொறுத்துப் பொறுத்துப் பார்க்கிறார்கள். அவர்களின் பொறுமை காக்க முடியா கட்டத்தைக் கடந்து விடும் போது சிலர் கால் கிளப்பி விடுகிறார்கள், சிலர் தம் உயிரையே போக்கிக் கொண்டு விடுகிறார்கள்.

இந்தப் பரிதாப நிலைக்கு இளைஞர்கள் பரிகாரம் பண்ண வேண்டாமா? பிரச்சினைக்குப் பரிகாரம் பண்ண வேண்டிய அவர்களே அல்லவா பிரச்சினைக்குக் காரணமாக அமைந்திருக்கிறார்கள். தங்கள் பெற்றோர்கள்மீது குற்றத்தைப் போட்டு விட்டுத் தாங்கள் தப்பித்துக்கொள்ள நினைக்கிறார்கள். அவ்வித இளைஞர்களாய் நீங்கள் இருக்கவே கூடாது.

வரதட்சிணை விஷயத்தில் உங்கள் பெற்றோர் உங்கள் பேச்சைக் கேட்காவிட்டால் அவர்கள் பேச்சை நீங்கள் கேட்க வேண்டாம்! நம் தாய் ஆயிற்றே, தந்தையாயிற்றே அவர்கள் சொல்லை எப்படி மீறுவது என்றெல்லாம் யோசிக்காதீர்கள்! அண்ணல் நபி (ஸல்) அவர்கள் காலத்தில் நடந்த நிகழ்ச்சியைக் கூறட்டுமா? அப்பொழுது சஃதுபின் அபீவக்காஸ் (ரலி) அவர்களுக்கு வயது பதின்மூன்று. அவர்கள், அன்னைக்குச் செல்லப் பிள்ளை. அன்னை சொல்லை அவர்கள் மீறியே அறியாதவர்கள். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுவிட்டார்கள். அது அவர்களின் அன்னைக்குப் பிடிக்கவில்லை. ''தாய், தந்தையருக்கும், உறவினர்களுக்கும் உபகாரம் செய்ய வேண்டும் என உன் இறைவன் கூறுகிறான் என நீ சொல்லிக் கொண்டிருப்பது உண்மைதானா?'' என்று அவர்களின் அன்னை கேட்டார். அதற்கு ''ஆம்'' என்று சஃதுபின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் பதில் கூறினார்கள். ''அப்படியானால் முகம்மது எதனைக் கொண்டு வந்தாரோ அதனை நீ மறுத்து விட வேண்டும். அப்படிச் செய்யாத வரை நான் (உணவு) உண்ண மாட்டேன், (நீர்) அருந்த மாட்டேன்'' என்றார் அவர்களின் அன்னை. இந்த இக்கட்டான நேரத்தில்தான் அல்லாஹ் தன் வேத வசனத்தை இறக்கி வைத்தான். ''தாய், தந்தையர்க்கு உபகாரம் செய்ய வேண்டும் என்று நாம் உபதேசித்தோம்.... ஆனால் உனக்குப் புரியாத (ஆதாரமற்ற)வற்றை எனக்கு இணையாக வைத்திட உன்னை அவர்கள் பலவந்தப்படுத்தினால் நீ அவர்களுக்குக் கட்டுப்பட வேண்டாம்'' *(31:14,5)* என்று அல்லாஹ் கூறினான். அல்லாஹ்வின் வழிகாட்டுதல் கிடைத்ததும் சஃதுபின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் நேராகத் தம் அன்னையிடம் சென்று, ''உங்களுக்கு நூறு உயிர்கள் இருந்து ஒவ்வோர் உயிராக இறந்து கொண்டிருந்தாலும் நான் முகம்மதுடைய இந்த மார்க்கத்தை விடப் போவதில்லை'' என்று அழுத்தமாகக் கூறினார்கள். இது மார்க்கத்தை விடும் விஷயமாக இருந்ததால் சஃது பின் அபீ வக்காஸ் அவர்கள் அவ்வளவு அழுத்தமாகக் கூறினார்கள்.



இஸ்லாமிய இளைஞர்களாகிய நீங்கள் இதவாதம் கொண்டு உங்கள் பெற்றோரை உங்கள் வழிக்குக் கொண்டு வர முயலுங்கள்! ஒரு போதும் அவர்களின் ஒப்புதல் இல்லாமல் அவர்களை ஒதுக்கி வைத்து விட்டு, திருமணம் செய்து கொள்ளலாம் என்று எண்ணாதீர்கள்! ஒரு வழியாக உங்கள் பெற்றோர் வரதட்சிணை வாங்காமல் உங்களுக்குத் திருமணம் செய்ய இணங்கி விட்டார்களா? இப்பொழுது பெண் தேர்வில் தீவிரமாக ஈடுபடுங்கள். உங்கள் உறவில், ஊரில் மார்க்க பக்தியும் நற்பண்புகளும் நிறைந்த ஏழைப் பெண் இருந்தால் அந்தப் பெண்ணைத் தேர்ந்தெடுக்கத் தயங்காதீர்கள்! ''செழிப்பான பண்ணையிலிருந்து குதிரை வாங்கு! ஏழ்மையான வீட்டிலிருந்து பெண்ணை எடு!'' என்று ஒரு பழமொழி உண்டு. இது அறிவான பழமொழி, அனுபவத்தின் அடிப்படையில் கூறப்பட்ட கனிமொழி என்பதில் ஐயமில்லை.

ஏழைப்பெண் உங்களை மதிப்பாள், உங்களுக்கு மரியாதை செய்வாள், உங்கள் பெற்றோரை மதிப்பாள், உங்கள் பெற்றோர்களுக்கு மரியாதை செய்வாள். உங்கள் எல்லோருக்கும் முகம் சுளிக்காமல் பணிவிடை செய்வாள். நமக்கு வாழ்வளித்தவர்கள் இவர்கள் என்னும் நன்றியுணர்ச்சி அவள் உள்ளத்தில் இருந்து கொண்டிருக்கும்.

இதையெல்லாம் நீங்கள் பணக்காரப் பெண்ணிடம் எதிர் பார்க்க முடியாது. வழங்கும் கை வாங்கும் கையைவிட ஒரு படி உயர்ந்தது என்பது பொது விதி. பணக்காரப் பெண்ணிட மிருந்து வாங்கிக் கொட்டிக் கொண்டபின் அவள் மதிப் பில்லாமல் மரியாதை இல்லாமல் பேசுவதையும் ஏசுவதையும் வாங்கிக் கட்டிக் கொள்வதைத் தவிர்த்து வேறு வழி கிடையாது. ஏனெனில் ''ஒரு பணக்காரப் பெண் ஒரு கணவனை விரும்பு வதில்லை, ஒரு வேலைக்காரனைத்தான் விரும்புகிறாள்'' என்று கூறுவதுண்டு. அதனால்தான் பணக் காரப் பெண் கணவனுக்கும் அடங்கி நடப்பதில்லை, கணவனின் பெற்றோருக்கும் அடங்கி நடப்பதில்லை. அவள் மனத்தில் உங்களையெல்லாம்விடத் தான் உயர்ந்தவள் என்னும் அகங்காரம் இருந்து கொண் டிருக்கும். இதனால் குடும்பத்தில் இருக்க வேண்டிய ஒருவர் மீது ஒருவர் அன்பு, ஒருவருக்கொருவர் உதவி ஆகியவை யெல்லாம் அறவே இருக்காது. குடும்பம் ஓர் இயந்திரம் போல் இயங்கிக் கொண்டிருக்கும்.

பெரும்பாலான பணக்காரப் பெண்கள் ஆடம்பரத்தில் அதிகப் பிரியம் உள்ளவர்களாய் இருப்பார்கள். அவர்கள் அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்டுக் கொண்டே இருப்பார்கள். அது உங்கள் சக்திக்கு அப்பாற்பட்டதாய் இருந்தால் அவற்றை வாங்கிக் கொடுக்க உங்களால் இயலாமல் இருக்கும். அதனால் சில சமயங்களில் சில கணவர்கள் ஆகாத வழிகள் மூலம் பொருள் ஈட்டவும் ஆரம்பித்து விடுவார்கள். இது ஆபத்தான காரியம் என்பதில் ஐயமில்லை.



சில பணக்காரப் பெண்கள் பிறந்த வீட்டின் மீது அதிகம் பற்றுள்ளவர்களாய் இருப்பார்கள். அதனால் அவர்கள் அடிக்கடித் தம் பிறந்த வீட்டுக்குச் செல்வார்கள். அங்குப் பல நாள்கள் தங்கி விடவும் செய்வார்கள். இது விரும்பத் தக்கதல்ல. பெரும்பாலான படித்த பெண்களும் பெரும்பாலும் பணக்காரப் பெண்களைப் போலவே நடந்து கொள்வார்கள். அவ்விதமானால் பணக்காரப் பெண்களையோ, படித்த பெண்களையோ எவரும் திருமணமே செய்து கொள்ளக் கூடாதா என்று நீங்கள் கேட்கலாம். பணக்காரப் பெண்ணோ படித்த பெண்ணோ மார்க்க பக்தியும் மற்றும் நற்பண்புகளும் உள்ளவளாய் இருந்தால் அவளை மணந்து கொள்வதில் ஒரு தடையும் இல்லை.

ஏழைப் பெண்ணோ, பணக்காரப் பெண்ணோ திருமணம் செய்து கொண்டு விட்டீர்களா? இப்பொழுது குடும்பத்தை ஓர் அரசைப் போல் நடத்த ஆரம்பியுங்கள்! உண்மையில் குடும்பம் என்பது ஒரு குட்டி அரசுதான். அதனால் அதனை ஒழுங்காக நடத்துவதற்கு ஓர் அரசை நடத்துவதற்கு வேண்டிய திறன்களில் ஓரளவாவது அவசியம் இருக்க வேண்டும்.

மனைவி, தன்னைப் பெற்றவர்களையும், உடன்பிறந்தவர் களையும் உற்றவர்களையும் மற்றவர்களையும் விட்டுக் கணவன் வீட்டிற்கு வருகிறாள். இனி நமக்குக் கணவனே கதி என்று கருதிக் கொண்டு வருகிறாள். அவளுக்கு உங்களின் அன்பும் பரிவும் அவசியமாகும். அதை வழங்க நீங்கள் தவறக் கூடாது. அவளுக்குச் சில உரிமைகளும் இருக்கின்றன. அவற்றை அளிக்க நீங்கள் மறுக்கக் கூடாது.

இளம் மனைவி வீட்டிற்கு வந்ததும் சில இளைஞர்கள் சற்று நிதானமில்லாமல் நடந்து கொள்வார்கள். கொஞ்சம் அளவுக்கு அதிகமாகவே சலுகைகளையும் அளிப்பார்கள். சில சமயங்கள் பெற்றோர்களையும், தம் உடன்பிறந்தவர்களையும்

கூடப் பின்னுக்குத் தள்ளி விடுவார்கள். சில காலம் சென்ற பின் அந்தச் சலுகைகளைக் குறைக்கத் தொடங்குவார்கள். ''நீட்டி விட்டுக் குறைத்தால் நெடும்பகை'' என்று கூறுவதுண்டு. அந்த நிலை குடும்பத்தில் ஏற்பட ஏது ஏற்படும்.

மனைவி வந்ததும் அவளுக்குள்ள உரிமைகளை உணர்த்தி விட்டு அவளுக்குள்ள கடமைகளையும் உரைக்கத் தவறக் கூடாது. தம் பெற்றோர்களுடன் எப்படி நடந்து கொள்ள வேண்டும், தம்முடன் பிறந்தவர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும், உற்றார் உறவினர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையெல்லாம் அவளுக்கு இதமாக எடுத்துரைத்துவிட வேண்டும்.

குடும்பங்களில் மாமனார் - மாமியாரைக் கொடுமைப் படுத்தும் மருமகள்களும் உண்டு. மருமகள்களைக் கொடுமைப் படுத்தும் மாமனார் - மாமியாரும் உண்டு. இளைஞர்கள் இதைக் கண்காணித்து எத்தரப்பினரும், எவருக்கும் கொடுமை புரியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அவர்கள் ஒரேயடியாக மனைவி பக்கமும் சாய்ந்துவிடக் கூடாது. ஒரேயடியாக பெற்றோர் பக்கமும் சாய்ந்துவிடக் கூடாது.

இளைஞர்கள் பிரதானமாக மனைவிக்கு இஸ்லாமிய மார்க்க விஷயங்களையும் அதன் அடிப்படை விஷயங்களையும் எடுத்துரைக்க வேண்டும். அவளுக்கு இறை நம்பிக்கை பற்றி எடுத்துக் கூறி அதற்குப் பாதகமான காரியம் எதையும் பண்ணி விடக் கூடாது என்று எச்சரிக்க வேண்டும். அவளை ஒவ்வொரு நாளும் ஐந்து வேளை அவசியம் தொழச் செய்ய வேண்டும். ரமலான் மாதத்தில் முப்பது நோன்பும் தப்பாமல் வைக்க வற்புறுத்த வேண்டும். தங்கள் வீட்டிற்கு வந்து ஏதாவது கேட்கும் ஏழைகளுக்கு அவசியம் காசோ பணமோ கொடுக்க அனுமதிக்க வேண்டும். ஹஜ் செய்ய வேண்டும் என்னும் ஆசையை அவள் மனத்தில் ஏற்படுத்த வேண்டும்.



இவற்றையெல்லாம் ஏவுமுன் நீங்களே இவற்றையெல்லாம் செய்ய வேண்டும். போதனை செய்வதற்கு எளிமையாக இருக்கலாம். போதித்தது போல் நடப்பது சிரமமாக இருக்க லாம். எனினும் நீங்களே அவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

இப்பொழுது உங்கள் குடும்பத்தை ஒரு நல்ல குடும்பமாக ஆக்கிக் கொண்டு விட்டீர்கள் அல்லவா? வீட்டிற்கு அழகு சேர்ப்பவர்கள் குழந்தைகள் ஆவர். ஆனால் பெரும்பாலான இளைஞர்கள் விரைவில் பிள்ளை பெற்றுக் கொள்ளக் கூடாது என்று விரும்புகின்றனர். பிள்ளை பிறந்த உடனேயே பொறுப்பு களும் வந்து விடுகின்றன அல்லவா? அதனால் அவர்கள் கொஞ்சம் பொறுத்துப் பெற்றுக் கொள்ளலாமே என்று எண்ணு கிறார்கள். இந்த எண்ணம் அவ்வளவு நல்லதல்ல. இருபத் தைந்து வயதிலிருந்து முப்பத்தைந்து அல்லது நாற்பது வயதிற்குள் நீங்கள் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்வதே உகந்ததாகும். இந்த வயதிற்குள் பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டால் உங்களுக்கும் நல்லது, பிள்ளைகளுக்கும் நல்லது. இந்த வயதிற்குள் நீங்கள் பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டால் தான் உங்கள் இளமை அவர்களைப் பராமரிக்கப் படிக்க வைக்க உங்களுக்கு வசதியாக இருக்கும். உங்களுக்கு ஐம்பது வயது ஆகும் போது அவர்கள் வளர்ந்து வாலிபராகி, படித்துப் பதவி பெற்று உங்களுக்கு உதவியாக வந்துவிட வசதியாக இருக்கும். இந்த வசதியெல்லாம் ஆண்குழந்தைகள் இருந்தால்தானே சாத்தியம் என எண்ணாதீர்கள்! அதற்காக ஆண்குழந்தைகள் தாம் பிறக்க வேண்டும் என ஆசைப்படாதீர்கள். பெண்குழந்தை பிறந்தால் அதை அல்லாஹ் தந்த பாக்கியம் என எண்ணிக் கொள்ளுங்கள்! ''அல்பின்து பரக்கத்துன்'' என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த வாக்கியத்தின் பொருள் 'பெண் பரக்கத் ஆவாள்'' என்பதாகும். ஓர் உண்மையைக் கூறட்டுமா? ''ஒரு தந்தை இரண்டு அல்லது

மூன்று பெண் மக்களைப் பெற்று அவர்களை வளர்த்து அவர்களுக்கு வயது வந்ததும் திருமணம் செய்து கொடுத்தால் அவருக்கு சொர்க்கம் உண்டு'' என்றும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். உங்களுக்கு சுவர்க்கத்தை எளிதாகப் பெற்றுத் தரும் பெண்மக்கள் உங்களுக்குக் கிடைக்கும் பாக்கியம் இல்லையா!

# 4

# நல்ல வணிகர்

இப்பொழுது உங்களுக்கு இருபத்தைந்து வயது இருக்கலாம். பள்ளியை விட்டோ, கல்லூரியை விட்டோ படிப்பை முடித்துக் கொண்டு வெளியே வந்து விட்டீர்களா? உடனே ஒரு வேலையைத் தேடிக் கொள்ளுங்கள் அல்லது ஒரு தொழிலை உண்டு பண்ணிக் கொள்ளுங்கள்! உயர் படிப்புப் படித்திருந்தால் அரசு வேலைக்கோ, பெரிய நிறுவன அலுவலுக்கோ செல்லுங்கள்! அங்கிருந்து கொண்டு மேலும் மேலும் முன்னேற முயலுங்கள்! குறைந்த படிப்புத்தான் படித்திருந்தால் அவசரம் காரணமாக, அவசியம் காரணமாக அரசு வேலையிலோ,நிறுவனப் பணியிலோ சேருங்கள்! அதில் இருந்து கொண்டு முன்னேற முடியாது என்று தெரிந்தால் அதை விரைவில் மாற்றிக் கொள்ளுங்கள்! சிலர் ஆயுளில் பெரும் பகுதியை இவ்வித வேலைகளில் கழித்து விட்டுப் பிறகு மாற்ற விரும்புவார்கள். சிலர் வாணிபம் செய்ய வருவார்கள். இவர்களில் சிலர் வென்றாலும் பலர் தோற்று விடுவார்கள். எனவே இப்பொழுது என்ன தொழில் செய்வது என்பதை அறிவோடு சிந்தித்து அமைதியாக ஆலோசித்து முடிவு செய்யுங்கள்!

அரசு அலுவலகங்களில் சிறு பணியில் சேர்ந்தவர்களும் மேற்கொண்டு படித்தும், துறை சம்பந்தப்பட்ட தேர்வுகள்

எழுதியும் முன்னேறியவர்களும் உண்டு. தனியார் நிறுவனங்களில் சிறு பணியில் சேர்ந்து அதிலேயே பெரும் பதவிக்கு உயர்ந்தோர்களும் உண்டு. ஆனால் அரிதாகவே இத்தகையவர்கள் இருப்பார்கள். ஊக்கமும் உழைப்பும் அவர்களை அப்படி உயர்த்தி இருக்கும்.

அலுவலகங்களில் பணிபுரிவதைவிட வாணிபம் செய்வதில்தான் உங்களுக்கு விருப்பம் அதிகம் இருக்கிறதா? இறைவன்மீது நம்பிக்கை வைத்து வாணிபத்தில் ஈடுபடுங்கள்! அரசுப் பணியிலோ, அலுவலக வேலையிலோ சிறிய ஊதியமாய் இருந்தாலும் மாதம் முப்பது நாள் முடிந்ததும் ஊதியம் கைக்குக் கிடைத்து விடும். ஆனால் வாணிபத்தில் அப்படி இராது. ஒரு மரத்தை வைத்துப் பழம் பறிப்பது போலாகும் அது. ஆயினும் வாணிபம்தான் புரிய வேண்டும் எனத் தீர்மானித்து விட்டீர்கள் அல்லவா? நல்லது. வாணிபத்தை அல்லாஹ்வும் ஏத்தியிருக்கிறான், அல்லாஹ்வின் தூதரும் போற்றியிருக்கிறார்கள். ''நீங்கள் பூமியில் பரவிச் சென்று அல்லாஹ்வுடைய அருளைத் தேடுங்கள்!'' (62:10) என்று அல்லாஹ் கூறுகிறான். ''உணவில் ஒன்பது பங்குகள் வாணிபம் செய்வதில் இருக்கின்றன'' என்று அல்லாஹ்வின் தூதர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்து உங்களுக்குப் பிரியமான வாணிபத்தைத் தேர்ந்தெடுங்கள், உங்களுக்குப் பொருத்தமான வாணிபத்தைத் தேர்ந்தெடுங்கள்! அது நல்ல வருவாய் வரும் வாணிபமா என்று பாருங்கள், அந்த வருவாய் நல்ல வருவாயா என்று பாருங்கள்! இறுதி நாளில் மனிதர்கள் எழுப்பப்படும் போது அவர்களிடம் கேட்கப்படும் கேள்விகளில் ஒன்று 'செல்வத்தை எம்முறையில் சம்பாதித்தாய்?' என்பதாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

ஒரு வாணிபம் நல்லதா, கெட்டதா என்று முடிவு செய்ய முடியவில்லையா, அதிலிருந்து வரும் வருவாய் சரியானதா,



தவறானதாக என்று தீர்மானிக்க இயலவில்லையா? அதைத் தேர்ந்தெடுக்காதீர்கள்! ஏனெனில் இந்த விஷயத்தில் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அறிவுரை மிகவும் தெளிவாக இருக்கிறது. ''விதிக்கப்பட்டதும் தெளிவாக இருக்கிறது. விலக்கப்பட்டதும் தெளிவாக இருக்கிறது. இவற்றிற்கு இடையில் சந்தேகமானவை இருக்கின்றன. சந்தேகமானவற்றை எவன் தவிர்த்துக் கொண்டானோ அவன் தன் கண்ணியத்தையும், மார்க்கத்தையும் காத்துக் கொண்டவன் ஆவான்.'' இவ்விதம் கூறிய அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இன்னும் கூறியிருக்கிறார்கள் : ''பாவம் ஏற்பட்டு விடலாம் எனச் சந்தேகிக்கும் காரியத்தை விடாத வரையில் உங்களில் எவரும் உண்மையான முத்தகீன்களாக (பக்த சீலர்களாக) ஆக முடியாது.''

இவ்வித எச்சரிக்கைகளை அறியாமலும், அறிந்தாலும் அலட்சியப்படுத்தி விட்டும் சிலர் சந்தேகத்திற்கு இடமான தொழில்களைத் தங்களுக்கு சாதகமாக விளக்கம் செய்து கொண்டு செய்வார்கள். இவர்கள் தாங்கள் இலாபத்தில் இருப்பதாய் எண்ணிக் கொள்ளலாம். உண்மையில் இவர்கள் இழப்பில் இருப்பவர்கள் ஆவர். இவர்களில் ஒருவராய் நீங்கள் இருக்க வேண்டாம்!

ஒரு நல்ல தொழிலைத் தொடங்கத் தேவைப்படுபவை மூன்றாகும். அவைதாம் இடம், பொருள், ஏவல். முதலில் நீங்கள் வாணிபம் தொடங்குவதற்கு ஒரு நல்ல இடத்தைத் தேர்வு செய்ய வேண்டும். நீங்கள் விற்கப் போகும் பொருள்களை வாங்கக் கூடியவர்கள் அந்தப் பகுதியில் அதிகம் இருக்க வேண்டும். அந்த வாணிபம் செய்ய உங்களுக்குத் துணையாக அனுபவமிக்க ஆட்கள் அவசியம் இருக்க வேண்டும். ஏற்ற இடமும் தேர்ந்தெடுத்து விட்டீர்கள். தகுந்த ஆட்களும் அகப்பட்டு விட்டார்கள். ஒரு பகுதி வேலை முடிந்து விட்டது.

வாணிபம் செய்யப் பிரதானமானது மூலதனமாகும். ''வெறுங்கையை வைத்து முழம் போட முடியாது'' என்று நம்

நாட்டில் கூறுவார்கள். எனவே போதுமான மூலதனத்தைத் திரட்டிக் கொள்ளுங்கள்! உங்களிடம் போதுமான மூலதனம் இருந்தால் நல்லது. இல்லாவிட்டால் வருவாய் வராத அல்லது வருவாய் அதிகமாக வராத ஏதாவது சொத்து இருந்தால் அதை விற்பனை செய்யுங்கள். அப்படிச் சொத்து இல்லையா? உங்களிடம் நகைகள் இருந்தால் அவற்றை முழுதும் அல்ல, ஒரு பகுதியை விற்பனை செய்யுங்கள்! அடைமானம் வைக்க வேண்டாம்! அடைமானம் வைத்தால் வட்டி கொடுக்க வேண்டும். வட்டி வாங்குவதைப் போலவே கொடுப்பதும் குற்றமாகும். அதுவும் இயலவில்லை என்றால் வட்டி இல்லாத கடனாக உறவினர்களோ, நண்பர்களோ தந்தால் வாங்கிக் கொள்ளுங்கள்.

உங்களிடம் மூலதனமும் இல்லை, கடன் தருவதற்கு ஆளும் இல்லை என்றால் பங்காளிகளைச் சேர்த்துக் கொள்ளப் பாருங்கள்! எவரைப் பங்காளியாகச் சேர்த்துக் கொள்வது என்பது பற்றிப் பல முறை சிந்தியுங்கள்! ஏனெனில் எங்தப் பங்காளிகளால் வாணிபம் வளர்ந்ததோ அந்தப் பங்காளிகளாலேயே வாணிபம் தளரவும் செய்யும். ஆரம்பத்தில் எல்லோரும் நல்லவர்கள்போல்தான் நடந்து கொள்வார்கள். பங்காளிகளும் அப்படித்தான். போகப் போகத்தான் அவர்கள் தங்களின் உண்மை உருவத்தைக் காட்ட ஆரம்பிப்பார்கள். அதனால்தான் நம் நாட்டில் ஒரு மனிதனின் உண்மை சுபாவத்தை அறிய வேண்டுமானால் அவனுடன் கொண்டு விற்றுப் பார்க்க வேண்டும் என்று கூறுவதுண்டு. கொண்டு விற்பது என்பது வாணிபம் செய்வதையே குறிக்கும்.

பங்காளிகளுக்குள் பிளவு ஏற்படுவதற்குப் பிரதான காரணங்கள் இரண்டு. ஒன்று இணங்கிப் போகாதது, மற்றொன்று நேர்மையாக நடந்து கொள்ளாதது. பங்காளிகளுடன் இயன்ற மட்டும் இணங்கிப் போய்விட வேண்டும். பெரிய விஷயங்களில் கண்டிப்பாய் இருந்தாலும் சிறிய விஷயங்களில்



அப்படி இருக்கக் கூடாது. பங்காளிகளுடன் மிகவும் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். நேர்மைக் குறைவாய் நடக்கும் போதுதான் சந்தேகம் ஏற்படுகிறது. சந்தேகம் ஏற்பட்டு விட்டால் கூட்டுத் தொழிலுக்குக் குழி தோண்டப்பட்டு விட்டது என்று கொள்ளலாம். நேர்மைக் குறைவாய் நடந்து கூட்டுத் தொழிலைக் கெடுத்துக் கொண்டால் ஏற்படும் பாதகங்கள் இரண்டு : ஆதாயம் அகலும், அல்லாஹ் விலகுவான். அல்லாஹ் கூறியதாக அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அறிவிக்கிறார்கள் : ''ஒரு வாணிபத்தில் பங்குதாரர் இருவர் எதுவரை ஒருவரை ஒருவர் மோசடி செய்ய மாட்டார்களோ அதுவரை நான் அவர்களுடன் இருக்கிறேன். ஆனால் ஒரு பங்குதாரர் இன்னொரு பங்குதாரரை மோசடி செய்யும் போது நான் அவ்விருவருக்கும் இடையே இருந்து வெளியேறி விடுகிறேன்.''

எனவே வாணிபத்தைப் பங்காளிகளுக்கு மோசம் பண்ணாமலும் பொது மக்களுக்கு மோசம் பண்ணாமலும் நடத்த வேண்டும். ''கொடுக்கல், வாங்கலில் மக்களை ஏமாற்றாதீர்கள்!'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். உதாரணத்திற்கு உணவுப் பொருள் வாணிபத்தை எடுத்துக் கொள்வோம். அதில் இரண்டு நன்மைகள் இருக்கின்றன. ஒன்று இலாபம், மற்றொன்று புண்ணியம். அது, பொதுமக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களைப் பல இடங்களிலிருந்தும் வாங்கிக் கொண்டு வந்து ஓர் இடத்தில் வைத்து விற்பதாகும். உணவுப் பொருள்களில் நல்லவற்றையே வாங்கிக் கொண்டு வந்து விற்க வேண்டும். உணவுப்பொருள் உடலுக்கும் நன்மை செய்பவை, உயிருக்கும் நன்மை செய்பவை. அதில் ஏதாவது கோளாறு இருக்குமானால் உடல், உயிர் இரண்டும் பாதிப்படையும். நீங்கள் நல்ல பொருளை வாங்கிக் கொண்டு வந்தாலும் அது உங்கள் கடையில் இருக்கும் போது ஏதாவது ஒரு காரணத்தால் கெட்டுப் போய் விடலாம்.

அப்படிக் கெட்டுப் போன பொருளை நல்ல பொருள் என்று கூறி விற்கக் கூடாது. கலப்படப் பொருளைக் கொள்முதல் செய்யவும் கூடாது, கடையில் வைத்துக் கலப்படமும் செய்யக் கூடாது. ''வழக்கமாகக் கலந்திருக்கும் தூசியைவிட அதிகமாக மண் சேர்ந்திருக்கும் தானியத்தை விற்பவன் பாவியாவான்'' என்று இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். மாவீரர் திப்பு சுல்தான் அதிகம் வெறுத்த இரு செயல்கள் எவை தெரியுமா? ஒன்று 'களாக'வாகத் தொழுவது. மற்றொன்று, கலப்படம் செய்வது.

தானியங்களுக்கு ஈரம்பட்டதும் ஊறிக் கொள்ளும் உப்பிக் கொள்ளும் தன்மை உண்டு. இதனால் தானியத்தின் எடை கூடும். இதற்காகச் சில வணிகர்கள் சிறிது தண்ணீரைத் தானியத்தின் மீது தெளித்துக் கிளறி விட்டு விடுவதுண்டு. அப்படிப்பட்ட வணிகர் ஒருவர் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் காலத்திலேயே இருந்தார். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒரு நாள் கடை வீதியைக் கண்காணித்துக் கொண்டு சென்றார்கள். அப்பொழுது தானியக் கடை ஒன்று அவர்களின் கண்களில் பட்டது. அங்குச் சென்று அங்குக் குவித்து வைக்கப்பட்டிருந்த தானியத்திற்குள் கையை நுழைத்தார்கள். தானியம் ஈரமாக இருந்ததை அவர்களின் கை அறிவித்தது. இப்படி ஈரப்படுத்தி விற்க வேண்டாம் என அவர்கள் அவருக்கு அறிவுரை பகர்ந்தார்கள்.

தாம் விற்கும் தங்கக் காசின் எடை அதில் சேர்ந்திருக்கும் அழுக்கால் அதிகரித்து விடலாம் என அஞ்சினார் ஒருவர். அவர் தாம் இறைநேசச் செல்வர் புலைல் (ரஹ்) அவர்களின் மகனார். அவர் தங்கக் காசின் அழுக்கைப் போக்க அதைத் தேய்த்துக் கொண்டிருப்பதைக் கண்ட தந்தையார் மனம் மகிழ்ந்து கூறினார்கள், ''மகனே! நீ இப்பொழுது செய்த செயல் இருமுறை ஹஜ் செய்வதை விட நன்மை தரக் கூடியது'' என்று.



கெட்டுப் போன பொருள் அது தானியமாயிருந்தாலும், அது துணிமணியாய் இருந்தாலும் விற்கக் கூடாது. அப்படி விற்பதாய் இருந்தாலும் அதை வாங்குபவரிடம் கூறிவிட்டுத் தான் விற்க வேண்டும். அப்படிக் கூறாமல் விற்றால் அந்தப் பணம் ஹராமான முறையில் வந்தது என்று இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்கள் கருதினார்கள். அவர்கள் துணி விற்பனை செய்யும் கடை ஒன்று வைத்திருந்தார்கள். அதில் பழுது அடைந்த துணி ஒன்று இருந்தது. அதை எவருக்கும் விற்க வேண்டாம், அப்படி விற்பதாக இருந்தால் அதன் பழுதை எடுத்துக் காட்டி விற்பனை செய்யும்படி அவர்கள் தம் ஊழியரிடம் கூறியிருந்தார்கள். அவர்கள் வெளியே சென்றிருந்த போது அந்த ஊழியர் அதை விற்று விட்டார். இமாம் அவர்கள் கடைக்கு வந்ததும் அந்தத் துணி இல்லாததை அறிந்து அதைப் பற்றிக் கேட்டார்கள். அதனை விற்று விட்டதாக ஊழியர் கூறினார். ''அதிலிருந்த பழுதை எடுத்துக் காட்டினாயா?'' என்று அவர்கள் கேட்டார்கள். அவர் ''இல்லை'' என்றார். ''பணம் எங்கே?'' என்று கேட்டார்கள். ''கல்லாவில் போட்டு விட்டேன்'' என்று அவர் கூறினார். இமாம் அவர்கள் கல்லாவைப் பார்த்தார்கள், அந்தத் துணி விற்ற பணத்தை அவர்களால் கண்டெடுக்க முடியவில்லை. இமாம் அவர்கள் என்ன செய்தார்கள், தெரியுமா? கல்லாவிலிருந்த அவ்வளவு பணத்தையும் எடுத்துத் தர்மம் செய்து விட்டார்கள்.

உணவுப் பொருள் மனிதர்கள் தம் உயிரை உடலிற்குள் வைத்துக் கொள்வதற்கு உதவுவதாகும். அதனால் அதன் விற்பனையில் அதிகக் கவனம் அவசியமாகும். உணவுப் பொருள்களை அப்போதைக்கு அப்போது 'மார்க்கட்'டில் என்ன விலைக்கு விற்கப்படுகிறதோ அந்த விலைக்கு விற்று விட வேண்டும். அறுவடைக் காலத்தில் தானியங்களைக் குறைந்த விலைக்கு வாங்கிப் பதுக்கி வைத்துக் கொள்ளக் கூடாது. வந்து கேட்பவர்களுக்கு 'இல்லை' என்று கூறக் கூடாது. ''நாற்பது

நாள்கள் வரையோ அதற்கு மேற்பட்ட நாள்கள் வரையோ உணவுப் பொருள்களை விலை உயர்வதற்காகப் பதுக்கி வைக்கின்றவன் அல்லாஹ்வை விட்டும் விலகிவிட்டான், அல்லாஹ்வும் அவனைக் காப்பதிலிருந்து விலகிவிட்டான்'' என்றும், 'பதுக்கல் செய்பவன் பாவங்கள் புரிபவன் ஆவான்'' என்றும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மேலும், ''உணவுப் பொருள்களைப் பதுக்கியவர்களையும், மனிதர்களைக் கொலை செய்பவர் களையும் இறைவன் ஒரே இடத்திலிருந்து எழுப்பி (மறுமையில்) ஒன்று சேர்ப்பான்'' என்றும், ''சரக்குகளைப் பதுக்கி வைக்காது மக்களின் தேவைக்கு ஏற்ப விற்போர் அல்லாஹ்வின் பேரருளைப் பெற்றவர் ஆவார். அதற்கு மாறாக அவற்றைப் பதுக்கி வைப்போர் அல்லாஹ்வால் சபிக்கப்பட்டவர் ஆவார்'' என்றும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் எச்சரித்துள்ளனர். ''பதுக்கி வைக்கும் பாவத்திற்கு ஏதாவது பரிகாரம் உண்டா?'' என்று கேட்கலாம். விலை ஏறிய பின் விற்கலாம் என்று தானியங்களை யாராவது ஒருவன் கட்டி வைத்திருந்தால் அவன் அந்தத் தானியங்கள் முழுவதையும் தர்மம் செய்தாலும் அவனுடைய பாவத்திற்கு (அது) ஈடாகாது. இதை உணர்ந்திருந்த தால்தான் அந்தக் காலத்தில் முஸ்லிம்கள் களத்து மேட்டில் வைத்தே அறுத்த தானியங்களை அளந்து கொடுத்து விட்டு வந்துவிடும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர் என்று கூறப்படுகிறது.

கலப்படம் செய்வது, பதுக்கி வைப்பது இதற்கெல்லாம் காரணம் அதிக இலாபம் பெற வேண்டும் என்னும் பேராசை தான். சிலர் குறைந்த வியாபாரம் நடந்தால் போதும், ஆனால் அதில் அதிக இலாபம் இருக்க வேண்டும் என்று விரும்பு வார்கள். சிலர் அதிக வியாபாரம் நடக்க வேண்டும், குறைந்த இலாபம் கிடைத்தால் போதும் என்று கருதுவார்கள். அதிக இலாபம் கிடைக்க வேண்டும் என்பதற்காகக் குறைந்த வியாபாரம் நடந்தாலும் பாதகமில்லை என்று விரும்புபவர் களைக் காட்டிலும் குறைந்த இலாபம் கிடைத்தாலும் போதும்



அதிக வியாபாரம் நடக்க வேண்டும் என்று விரும்புபவர்கள் உண்மையில் அதிக இலாபம் அடைந்திருப்பார்கள், அதி விரைவில் பெரும் செல்வந்தர்களாகவும் ஆகிவிடுவார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் தோழர்களில் ஒருவர் அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃபு (ரலி) அவர்கள். அவர்கள் மதீனாவிலிருந்த பெரும் செல்வந்தர்களில் ஒருவராக இருந்தார்கள். அவர்கள் செல்வம் ஈட்டிய முறையை அறிய ஆவலா? ஒரு சமயம் ஒரு நூறு ஒட்டகைகள் மதீனாவுக்கு விற்பனைக்கு வந்தன. அவற்றை அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃபு (ரலி) அவர்கள் விலைக்கு வாங்கினார்கள். அவர்கள் வாங்கியதும் ஒருவர் வந்து அந்த ஒரு நூறு ஒட்டகைகளையும் தமக்குத் தர வேண்டும்' என்று கேட்டார். ஆனால் அவர் அவர்கள் என்ன விலைக்கு வாங்கினார்களோ அந்த விலைக்கே தமக்குத் தரவேண்டும் எனப் பிடிவாதம் செய்தார். பேரம் படியவில்லை. அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃபு (ரலி) அவர்கள் தம் ஆட்களிடம் ஒட்டகைகளின் கழுத்துக் கயிறுகளைக் அவிழ்க்கும்படி கூறினார்கள். அவ்வாறு அவிழ்க்கப்பட்டதும் அவருக்குத் தாம் வாங்கிய விலைக்கே அவற்றை விற்க உடன்பட்டார்கள். ஒட்டகைகளை, பணத்தை அள்ளிக் கொடுத்து விட்டு உவகையுடன் அவர் ஓட்டிச் சென்றார். அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரலி) அவர்களிடம் அருகிலிருந்த நண்பர், ''என்ன இப்படி வாங்கிய விலைக்கே விற்றுவிட்டீர்களே, அதனால் நமக்கு என்ன இலாபம்?'' என்று கேட்ட போது, ''இந்தக் கழுத்துக் கயிறுகள்'' என்று அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃபு (ரலி) அவர்கள் பதில் கூறினார்கள். ''இப்படி யெல்லாம் வியாபாரம் செய்தால் உருப்பட்டாற் போல் தான்'' என்று நினைக்கலாம். அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃபு (ரலி) அவர்கள் உருப்பட்டார்கள், ஊருக்கெல்லாம் அள்ளி வழங்கும் வள்ளல் என்னும் உரு பெற்றார்கள்.

இது அப்பொழுதைய செய்தி, இப்பொழுதைய செய்தி இது: ஒரு கடை இருந்தது. அதன் வாயிலில் மக்கள் எப்

பொழுதும் ஈ போல் மொய்த்துக் கொண்டிருப்பார்கள். அதன் அருகில் இருந்த மற்றொரு கடையில் அதன் உரிமையாளர் ஈ ஓட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பார். இந்தக் கடையில் மக்கள் ஈ போல் மொய்த்துக் கொண்டிருக்கக் காரணம் என்ன தெரியுமா? இந்தக் கடையில் எந்தச் சாமானும் அடுத்த கடை விலையைவிட ஓரிரு ரூபாய்களாவது குறைவாய் இருக்கும். இந்தக் கடைகாரர் அதிக இலாபத்தில் ஆசை கொள்ளாமல் தம் இலாபத்தைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டு விற்பனை செய்ததால்தான் அவர் கடையில் மக்கள் அப்படி மொய்த்துக் கொண்டு சாமான்கள் வாங்கினர். இந்த நல்ல முறையை நீங்களும் செய்து பார்க்கலாம்.

உங்களின் இருபத்தைந்தாம் வயதில் ஒரு வாணிபத்தை உண்டு பண்ணினீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அது நன்கு ஊன்றிப் பலம் பெறவும் உயரமாக வளர்ந்து பலன்தரவும் இளமையிலிருக்கும் உங்கள் உரத்தையும் திறத்தையும் ஒன்று விடாமல் பயன்படுத்தி உழையுங்கள். இரவும் பகலும் அதை எவ்விதம் வளர்க்கலாம், விருத்தி பண்ணலாம் எனச் சிந்தியுங்கள். சிந்திக்கச் சிந்திக்க உங்கள் உள்ளத்தில் புதிய உத்திகள் உண்டாகும். உங்கள் மனத்தில் புதிய திட்டங்கள் உருவாகும். அவற்றைச் செயல்படுத்தி வாணிபத்தைச் செழிக்கச் செய்யுங்கள். உங்களின் நாற்பதாம் வயதில் நீங்கள் வைத்த வாணிபம் இலாபத்தை வாரிச் சொரிந்து கொண்டிருக்க வேண்டும். இந்த வயதிற்குள் இப்படி ஒரு வாணிபத்தை உண்டு பண்ணிக் கொண்டால் உங்கள் முதுமை மகிழ்ச்சிகரமானதாய் இருக்கும். அல்லாஹ்வை வணங்க, வழிபட உங்களுக்குப் போதுமான அவகாசம் ஏற்படும்.

இவ்விதம் ஆழமாகச் சிந்தித்துச் செயல்படாமல் அப்போது கிடைக்கும் அதிக வருவாயை நினைத்துச் சிலர் சில தொழில்களைச் செய்வார்கள். இளமையின் வேகத்தில் அதை அவர்களால் செய்ய இயலும்தான். ஆனால் அவையெல்லாம் நீடித்து நின்று வருமானம் தரும் என எதிர்பார்க்க முடியாது. இப்படிப்பட்ட தொழில்களில் ஈடுபடும் சிலர் தம் இளமையை வீணாக்கிக் கொண்டு, தம் வலிமைக்கு வடிகாலிட்டு விட்டு அயர்ந்து போய் உட்கார்ந்து விடுகிறார்கள். அதன்பின் அவர்கள் ஒரு நல்ல தொழிலை உண்டு பண்ணிக் கொள்ளலாம் என முயலலாம், ஆனால் அது முயல்கொம்பாகவே முடியும் என்பதில் ஐயமில்லை.



உங்கள் தொழில் உங்களுக்கும் பயனளிக்க வேண்டும், உங்கள் ஊழியருக்கும் பயனளிக்க வேண்டும், ஊருக்கும் பயனளிக்க வேண்டும். உங்களுக்கு என்பதில் உங்கள் சந்ததிகளுக்கும் என்பதும் அடங்கும். உங்கள் தொழில் நூறாண்டுகளைக் கடக்க வேண்டும், நூறாண்டுகளுக்கு மேலாகவும் நடக்க வேண்டும். அப்படி நடக்க வேண்டுமானால் அதற்கு அடிக்காலிட வேண்டும் ஒன்றைக் கொண்டு. அது எது தெரியுமா? நேர்மை. ஒரு பெரும் தொழில் அதிபரிடம், ''உங்கள் திறமைக்குக் காரணம் யாது?'' என்று கேட்ட போது அவர் கூறினார், ''என் திறமையெல்லாம் என் நேர்மைதான்'' என்று.

உங்கள் ஊழியர்களை ஊழியர்கள் என்று கருதாதீர்கள். அவர்களை உங்கள் தொழிலின் பங்காளிகள் என்று கருதுங்கள்! அவர்களுக்கு அவர்கள் மனம் மகிழும் விதம் ஊதியம் அளியுங்கள்! அதுவே ஒரு தர்மம் என்றும் கருதுங்கள்! ஊழியர்களுக்குக் குறைந்த ஊதியம் கொடுத்து விட்டு அல்லாஹ்வுக்காக தான, தர்மம் செய்வதில் அர்த்தமே இல்லை.

உங்கள் தொழில் குறைந்தது பத்துப் பேருக்காவது வேலை கொடுப்பதாக இருக்க வேண்டும். அதனால் பத்துக் குடும்பங்கள் பிழைக்கும். அந்த நன்மை உங்களை வந்து சேரும்.

உங்கள் தொழில் மக்களுக்கு நன்மை செய்வதாக இருக்க வேண்டும். மக்களுக்குப் பாதகம் செய்யும் வாணிபம் அது எவ்வளவுதான் வருவாய் தருவதாய் இருந்தாலும் அதைச் செய்யாதீர்கள்.

# 5

# நல்ல இளைஞர்

இஸ்லாமிய இளைஞர்களாகிய நீங்கள் ஒரு வாணிபத்தை வைத்து வளர்த்து வளத்துடன் வாழத் தொடங்கியிருக்கிறீர்கள். இப்பொழுது உங்களுக்குச் சமுதாயம் பற்றிய அக்கறை ஒன்று உண்டாகிறது. அந்த அக்கறையின் காரணமாக ஏன் மேலை நாட்டு மக்களெல்லாம் முன்னேறியிருக்கும் போது முஸ்லிம்கள் மட்டும் முன்னேறவில்லை என்னும் எண்ணம் ஏற்படுகிறது. முஸ்லிம்கள் முன்னேறாததற்குக் காரணம் இஸ்லாம்தான் என்னும் எண்ணத்தை இஸ்லாத்தின் எதிரிகள் விதைத்து விட்டார்கள். அதன் மூலம் இஸ்லாத்தின் வளர்ச்சியைத் தடுக்கவும், முஸ்லிம்களின் முன்னேற்றத்தை முடக்கவும் திட்டமிட்டார்கள். அவர்களின் இந்தச் சதிக்கு இஸ்லாமிய இளைஞர்கள் சிலரும் இரையானார்கள்.

இந்த இளைஞர்கள் உணர வேண்டும் முஸ்லிம்கள் முன்னேறாததற்குக் காரணம் இஸ்லாத்தைப் பின்பற்றியது அல்ல, இஸ்லாத்தைப் பின்பற்றாததுதான் என்பதை. அறிஞர் ஜமாலுத்தீன் ஆப்கானி அவர்களிடம் ஒருவர் ''முஸ்லிம்கள் முன்னேறாததற்குக் காரணம் என்ன?'' என்று கேட்ட போது, ''அவர்கள் தங்கள் மார்க்கத்தைக் கைவிட்டது'' என்று அவர் கூறினார். இப்படி இஸ்லாத்தைக் கை விட்டதற்குக் காரணம் முஸ்லிம்களுக்கே, இஸ்லாமியக் கொள்கைகள் சில இந்தக் காலத்திற்குப் பொருந்துமா என்னும் ஐயம் ஏற்பட்டதாகும்.



இதற்குப் பிற மதப் பெண்மணி செர்ரீஸ் என்பவர் தாம் எழுதிய நூல் ஒன்றில் எழுதியதையே பதிலாகக் கூறுகிறோம். ''இஸ்லாம் கைவிடப்பட்ட கருவூலமாக இருக்கிறது. அதில் விந்தை என்னவென்றால் இஸ்லாத்தைப் பின்பற்றுகிறோம் என்று கூறிக் கொள்ளும் முஸ்லிம்களே அதைத் தவற விட்டிருப்பதுததான். முஸ்லிம்கள் அதன் வழியில் திரும்பி வராத வரையில் உலக சமுதாயங்களின் இறுதி அணிக்குத் தள்ளப்பட்டுத் திக்கு திசை தெரியாமல் தடுமாறிக் கொண்டே இருப்பர். இஸ்லாம் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஒரு தீர்வாகவும், ஒளியாகவும் இருப்பதுடன் முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி மக்கள்அனைவருக்கும் இறைவனிடமிருந்து வந்த வழிகாட்டுதலாகவும் இருக்கிறது.''

முஸ்லிம்களாகிய நாம் எல்லாம் அறிந்தவன் அல்லாஹ் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். காலத்தை உண்டு பண்ணியவனே அவன்தான். அவனுக்கு இக்காலம் பற்றியும் தெரியும், எக்காலம் பற்றியும் தெரியும். அவ்விதமிருக்க அவன் காலத்திற்குப் பொருந்தாத கருத்துக்களைக் கூறியிருப்பான் என்று எண்ணுவது அறிவீனம் இல்லையா? அத்தகையவர்கள் அல்லாஹ்வின் இந்த உரையை ஒரு கணம் உன்னிப்பாக எண்ணிப் பார்க்கட்டும்: ''அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் யாதொரு விஷயம் பற்றியும் கட்டளையிட்ட பின்னர் அவ்விஷயத்தில் (அதற்கு மாறாக வேறு) அபிப்பிராயம் கொள்வதற்கு விசுவாசியான எந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிமை இல்லை. (இதில்) அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் எவரேனும் மாறு செய்தால் நிச்சயமாக அவர்கள் பகிரங்க வழிகேட்டிலேயே இருக்கிறார்கள் (33:36)''

இந்த எச்சரிக்கையை எடுத்துக் கொள்ளாமல் இஸ்லாமியக் கொள்கைகள் சிலவற்றைப் பற்றி ஐயப்பாட்டில் இருப்பவர்கள் சில சமயம் அலட்சியமாகப் பேசி விடுகிறார்கள். அவர்களில் ஒருவன் இந்த மனிதன்: அவன் தெரு வழியே சென்று கொண்

டிருந்தான். அவன் சென்ற தெருவில் மார்க்கப் பள்ளி ஒன்று இருந்தது. அப்பொழுது அதில் மார்க்கப் பாடம் நடந்து கொண் டிருந்தது. ஆசிரியர், ''(நீங்கள் பயன்படுத்தும்) தண்ணீர் பூமிக்குள் செருகிவிட்டால் பிறகு (வேறோர்) தண்ணீர் ஊற்றை உங்களுக்குக் கொண்டு வருபவர் யார் என்று கவனித்தீர்களா என்று (நபியே!) நீர் கேளும்( 67:30) என்னும் அல்லாஹ்வின் திருமறை வாசகத்தைக் கூறிக் கொண்டிருந்தார். தெரு வழியே சென்று கொண்டிருந்த அந்த மனிதன் இதைக் கேட்டதும், ''நாங்கள் கூர்மையான கடப்பாறைகளால் பூமியின் கீழிருந்து தண்ணீரைக் கொண்டு வந்து விடுவோம்'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

அன்றிரவு அவன் உறங்கும் பொழுது பெரியவர் ஒருவர் அவன் கனவில் தோன்றி, அவன் கன்னத்தில் அறைந்து, அவன் கண்களைக் குத்தி, ''துர்பாக்கியவானே! நீ உன் வாதத்தில் மெய் உரைப்போனாயின் உன் கண்களின் ஊற்றுக்களிலிருந்து புதிய ஒளியை உருவாக்கு, பார்ப்போம்'' என்று கூறிவிட்டு மறைந் தனர். அன்று பொழுது விடிந்தது ஊருக்கெல்லாம், அவனுக் கல்ல. அவன் பார்வை பறிபோய் விட்டது. அவன் பார்வையைப் பறித்தது எது தெரியுமா? அவனுடைய அடாத வார்த்தை.

இளைஞர்கள் இவ்வித ஐயப்பாடு தம் மனத்தில் எழாமலும் இவ்வித அலட்சியப் பேச்சு தம் வாயில் வந்து விடாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். முஸ்லிம்களை முன்னேற்றியது இஸ்லாம்தான் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இஸ்லாம் வருவதற்கு முன்பு அரபு நாடு என்று ஒன்று இருந்து கொண்டுதான் இருந்தது. அது 'திடும்' என வானி லிருந்து வந்து விழுந்த நாடுமல்ல, 'திடும்' என கடலிலிருந்து எழுந்த நாடுமல்ல. மண்மீது இருந்த நாடுதான். அதில் மக்களும் வாழ்ந்து கொண்டுதான் இருந்தார்கள். ஆனால் இஸ்லாம் வருவதற்கு முன் அவர்கள் எப்படி வாழ்ந்து கொண்டிருந் தார்கள்? ஆடு மேய்த்துக் கொண்டு அலைபவர்களாய் இருந்து கொண்டிருந்தார்கள். அகப்படுபவர்களை அடித்துப் பறித்து உண்டு வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அற்பக் காரணங்களுக்காக அடித்துக் கொண்டு உதிரத்தை வடிப்பவர்களாய் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்!.



இஸ்லாம் அவர்களிடம் எவ்வித அற்புத மாற்றத்தை உண்டு பண்ணியது என்பதை அறிவீர்களா? அற்பக் காரணங் களுக்காக அடித்துக் கொண்டு உதிரத்தை ஓட்டிக் கொண்டிருந் தவர்கள் தம் ஆவி கொடுத்துப் பிறரைக் காக்கும் மனிதப் புனிதர் களாய் மாறினார்கள். ஒழுக்கம் என்று ஒன்று உண்டு என்றே தெரியாதிருந்தவர்கள் உயர் பண்புகள் அனைத்திற்கும் உரிமைக் காரர்களாய் ஆனார்கள். அஞ்ஞான இருளிலே அழுந்திக் கிடந்தவர்கள் அகிலத்தின் எட்டுத்திக்கிற்கும் அறிவு விளக்கை ஏந்திச் செல்பவர்களாய் ஆனார்கள். அரசு என்று ஒன்று இருக் கிறது என்பதையே அறியாதிருந்தவர்கள் அரியாசனங்களை அலங்கரிக்கத் தொடங்கினார்கள். ஆயிரம் என்று ஓர் எண் உண்டா என்று கேட்டவர்கள் கணிதவியலின் கரைகளை அளக்க ஆரம்பித்தார்கள். ஒரு போரின் போது கிடைத்த பொருள்களைப் பங்கிடத் தெரியாமல் ஒரு பதினாறு வயதுப் பையனின் உதவியை நாடியவர்கள் வானியலில் வல்லுநர் களாகி விண்மீன்களின் பெயர்ச்சிகளை விவரிக்கத் தொடங்கி னார்கள்.

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பின் அரபிகள் உலகாண்ட உரோமப் பேரரசை உருக்குலைத்து விட்டு, பாராண்ட பாரசீகப் பேரரசை உருட்டிப் புரட்ட வந்த போது பாரசீகர்கள் அதிர்ந்தார்கள். ''அரபிகளா? நம்மை எதிர்க்க வந்து விட்டார் களா? நம் அரசின் ஓரங்களில் ஆடுகளை மேய்த்துக் கொண்டு அலைந்தவர்களா நம்மை எதிர்க்க வந்து விட்டார்கள்?'' என்று அலற ஆரம்பித்தார்கள்.

அரபி முஸ்லிம்கள் எகிப்தில் அடைந்து கொண்டு வந்த வெற்றிகளைப் பார்த்துவிட்டு கிறிஸ்துவ மத குருமார்கள் எல்லோரும் ஒப்புக் கொண்டார்கள், ''இப்பொழுது இறைவன் முஸ்லிம்களின் பக்கம் இருந்து கொண்டிருக்கிறான்'' என்று.

அன்று ஏன் இறைவன் முஸ்லிம்கள் பக்கம் இருந்தான்? இன்று ஏன் அவன் முஸ்லிம்களின் பக்கம் இல்லை? இதோ பதில் : முஸ்லிம்கள் முஸ்லிம்களாக இன்று இல்லை. உயர் அளவில் அவர்கள் முஸ்லிம்களாக இருந்த போது அவர்களை வெற்றி அணைத்துக் கொண்டது. பெயர் அளவில் அவர்கள் முஸ்லிம்களாக ஆன போது வெற்றி அணைந்து விட்டது. அதனால்தான் ஓர் அறிஞர் கூறினார், '' இஸ்லாம் வெல்கிறது. முஸ்லிம்கள் தோற்கின்றனர்'' என்று.

இரு ஜெர்மன் இளைஞர்கள் இஸ்லாமிய நூல்களைப் படித்து விட்டு இஸ்லாத்தைத் தழுவினார்கள். அதன் பின் அவர்கள் முஸ்லிம்கள் சிலரைப் பார்க்க நேர்ந்தது. அந்த முஸ்லிம்களைப் பார்த்ததும் அவர்கள் செய்த முதல் வேலை என்ன தெரியுமா? இஸ்லாத்தைத் துறந்தது. அவர்கள் பார்த்த முஸ்லிம்கள் அவர்கள் இஸ்லாத்தின்மீது கொண்டிருந்த மதிப்பை இழக்கச் செய்து விட்டனர். அதனால்தான் அறிஞர் பெர்னார்ட் ஷா சொன்னார், ''நான் இஸ்லாத்தை விரும்புகிறேன்; முஸ்லிம்களை வெறுக்கிறேன்'' என்று.

இலண்டன் நகரில் ஒருவர் இருந்தார், அவர் இஸ்லாமிய நூல்கள் பலவற்றைப் படித்தார். அவருக்கு இஸ்லாம் மிகவும் பிடித்துப் போய்விட்டது. இஸ்லாத்தைத் தழுவ எண்ணினார். முஸ்லிம்களைப் பார்த்ததும் அவர் தம் எண்ணத்தை மாற்றிக் கொண்டார். இந்நிலையில் அவர் நோய்வாய்ப்பட்டார். மருத்துவமனையில் சேர்ந்தார். தாம் பிழைப்பது துர்லபம் என்று அவருக்குத் தோன்றியது. இறப்பதற்கு முன் இஸ்லாத்தைத் தழுவி விட்டால் நல்லது என எண்ணினார். ஆயினும் அதைச்



செய்வதிலிருந்தும் நழுவினார். இந்நிலையில் அவர் ஒரு கனவு கண்டார். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அவர் கனவில் தோன்றி, ''முஸ்லிம்களைப் பார்த்து இஸ்லாத்தைத் தழுவு வதை இனியும் தள்ளிப் போட வேண்டாம்!' என்று கூறிவிட்டு மறைந்தார்கள். விடிந்தெழுந்ததும் அவர் செய்த முதல் வேலை இமாமை அழைத்து வரச் செய்து இஸ்லாத்தைத் தழுவியதுதான்.

ஆங்கில நாட்டு அறிஞர் முகம்மது மர்மடியூக் பிக்தால் இஸ்லாத்தைத் தழுவுவது என்று முடிவு செய்தாலும் அதைச் செய்யத் தாமதித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர் ஒரு கனவு கண்டார். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அவர் கனவில் தோன்றி ''தாமதிக்க வேண்டாம்!'' என்று கூறினர். உடனே அவர் இஸ்லாத்தைத் தழுவினார்.

இன்று போல் இல்லாமல் அன்றைய முஸ்லிம்கள் உண்மை முஸ்லிம்களாக இருந்தார்கள். அவர்கள் வார்த்தையைக் கொண்டு இஸ்லாமியப் பிரச்சாரம் செய்தது கொஞ்சம் தான், வாழ்க்கையைக் கொண்டு செய்த பிரச்சாரம் தான் அதிகமாகும். நம் இந்தியத் திருநாட்டில் இஸ்லாம் வளர்ந்தது இங்கு ஆண்ட முஸ்லிம் அரசர்களைக் கொண்டு என்று எண்ணிக் கொண்டு விடாதீர்கள். இங்கு இஸ்லாம் பரவியது இறை நேசச் செல்வர்களைக் கொண்டுதான். அதாவது அவ்லியாக்கள் என்று நாம் குறிப்பிடுகிறோமே அவர் களைக் கொண்டுதான். மத்திய ஆசியாவில் ஏற்பட்ட மங்கோலியப் படையெடுப்பின் பேரழிவின் போது பாது காப்பான பூமி என்று கருதி இந்த இந்தியத் திருநாட்டின் பக்கம் அவர்கள் திரும்பினார்கள்.

இங்கு பேசப்பட்ட மொழிகளை அறிந்திராத அவர்களால் வார்த்தையைக் கொண்டு எங்ஙனம் பெரும் அளவு பிரச்சாரம் செய்ய முடியும்? எனவே அவர்கள் தம் வாழ்க்கையைக்

கொண்டுதான் பிரச்சாரம் செய்தார்கள். ''இறை நேசர்கள் இந்த இந்தியத் திருநாட்டில் செல்லாத இடமே இல்லை'' என்று நாம் கூறவில்லை, பிரபல ஆங்கில வார ஏடு ஒன்றே கூறியது.

இவ்வித இறைநேசச் செல்வர்களாக ஆவது இருக்கட்டும். நாம் குறைந்த பட்சம் இஸ்லாம் போதிக்கும் உயர் காரியங்களை உவந்தேற்று நடக்க வேண்டும். இஸ்லாம் ஒதுக்கும் தீய காரியங்களை வெறுத்து விரட்ட வேண்டும்.

இறுதி நாளில் கேட்கப்படும் கேள்விகளில் ஒன்று, ''உன் இளமையை எம்முறையில் செலவிட்டாய்?'' என்பதாகும். இளமையை இப்படிக் குறிப்பிட்டுக் கேட்பதற்குக் காரணம் இளமை பாவங்கள் செய்யத் தக்க பருவமாக இருப்பதுதான். அப்படிக் கேட்கப்படும் போது என்ன பதில் கூறுவது என்பதற்கான ஆயத்தங்களை நீங்கள் இப்பொழுதே ஆரம்பித்து விட வேண்டும். முதலாவதாக நீங்கள் இஸ்லாம் வலியுறுத்தும் ஐந்து கடமைகளையும் உங்கள் வாழ்வில் அணுவளவும் பிசகாமல் அனுசரிக்க வேண்டும். முதலில் உங்களிடம் இருக்க வேண்டியது ஈமான் என்னும் இறைநம்பிக்கை! அல்லாஹ் ஒருவன். அவன் உருவமற்றவன். அவன் எவராலும் பெறப்பட்டவன் அல்ல, அவன் எவரையும் பெறவும் இல்லை. அவன் எல்லாம் அறிந்தவன், எல்லாம் இயன்றவன். இறுதித்தீர்ப்பு நாள் என்று ஒன்று உண்டு. அதில் நன்மை செய்தோர்க்கு சுவர்க்கமும் தீமை செய்தோர்க்கு நரகமும் உறுதி ஆகிய இந்த நம்பிக்கைகளும் இறை நம்பிக்கை என்பதில் அடங்கும். இதில் அணுவளவு ஐயமும் உங்கள் உளமதில் உண்டாகிவிடக் கூடாது. இறை நம்பிக்கைக்கு விரோதமான சிந்தனையோ, சொல்லோ, செயலோ உங்களிடம் ஏற்பட்டு விடக் கூடாது. இறை நம்பிக்கை மட்டும் ஒருவர் மனத்தில் உறுதியாக இருந்து விட்டால் அவர் புரிந்த மற்றப் பாவங்களுக்குச் சிறிது காலம் தண்டனை அனுபவித்தபின் அவருக்கு இறுதியில் ஈடேற்றம் கிடைத்து விடும்.



இதுவரை நீங்கள் ஒரு நாளைக்கு ஐந்து முறை தொழுதால் சரி, அப்படித் தொழாவிட்டால் அதனை உடனே தொடங்கிவிடவேண்டும். ஒன்பது வயது வரைதான் ஒருவர் தொழாமல் இருக்க அனுமதி உண்டு. அதற்கு மேல் தொழாவிட்டால் அது பிழை என்று எழுதப்படும். தொழுகையில் அப்படி என்ன விசேஷம் இருக்கிறது என்று சில இளைஞர்கள் எண்ணலாம். மண்ணில் பாதம் பதித்து நடப்பவர்களை அல்லாஹ்வின் இருக்கையான அர்ஷ் அளவில் உயர்த்தக் கூடிய ஆற்றல் அதற்கு உண்டு. அண்ணல் நபி (ஸல்) அவர்களை விட சுவர்க்கத்திற்கு சொந்தம் கொண்டாட, ஒருவர் இருக்க முடியுமா? அவர்கள் ஒரு நாளைக்கு ஐந்து முறை மட்டும் தொழுதவர்கள் அல்லர். அவர்கள் இரவு முழுவதும் நின்று தொழுபவர்களாய் இருந்தார்கள். அப்படி நீண்ட நேரம் நின்று தொழுததால் அவர்களின் கால்கள் மரத்து விடுவதும் உண்டு. ''இறைவன்தான் உங்களின் முன் பின் பாவங்கள் அனைத்தையும் மன்னித்து விட்டதாகக் கூறுகிறானே, அப்படியிருக்க நீங்கள் ஏன் இப்படித் தொழ வேண்டும்?'' என்று தோழர்கள் கேட்ட போது, ''நான் ஒரு நன்றியுள்ள அடியானாக இருக்க வேண்டாமா?'' என்று அவர்கள் பதில் கூறினார்கள். இதிலிருந்து இறைவனைத் தொழுவது அவனுடைய மன்னிப்பைப் பெறுவதற்கும், அவன் நமக்குப் புரிந்த நன்மை களுக்கு நன்றி செலுத்துவதற்கும் ஆகும் என்பதை அறிந்து கொள்கிறோம், அல்லவா?

''தொழுகை சுவர்க்கத்தின் திறவுகோல்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இத்தகைய தொழுகை விஷயத்தில் இளைஞர்கள் அலட்சியமாய் இருந்து விடலாகாது. ஆனால் இறை இல்லமான பள்ளிகளில் வெள்ளிக்கிழமைகளில் மட்டும் இளைஞர்கள் சிறிதளவு காணப்பட்டாலும் மற்ற நாள்களில் ஐந்து வேளை தொழுகையில் அவர்களைக் காண்பது அரிதாகவே இருக்கிறது. அந்த வேளைத் தொழுகை

களிலெல்லாம் நடந்து வர முடியாத முதியவர்களும் நின்று தொழத் தடுமாறும் வயோதிகர்களும்தான் காணப்படுகின்றனர்.

ஒவ்வொரு முஸ்லிமும் ரமலான் மாதத்தில் முப்பது நோன்பும் தப்பாது வைக்க வேண்டும் என்பது இஸ்லாமிய விதி. நோன்பு வைப்பதில் இளைஞர்கள் அவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்வதில்லை. அது தவறு. இதுவரை அவர்கள் ரமலான் மாதத்தில் நோன்பு வைக்காதவர்களாய் இருந்தால் இனிமேலும் அவர்கள் அப்படி இருக்கக் கூடாது. அல்லாஹ் வின் கட்டளைக்கு அடிபணிவது என்பதுடன் அதில் உடலுக்கும் உள்ளத்திற்கும் நன்மையும் இருக்கிறது.

இளைஞர்களாகிய நீங்கள் இதுவரை ஓரளவு பொருள் ஈட்டிக் கொண்டிருப்பீர்கள். உங்களிடம் பணம் இருக்கும், நகை இருக்கும், சொத்துக்கள் இருக்கும். இவற்றின் மதிப்பில் நாற்பதில் ஒரு பங்கை அல்லாஹ்வுக்காகக் கொடுக்க வேண்டும். அதுதான் ஜகாத் என்பது. அது வருமான வரி அல்ல, சொத்து வரி. வருமானமே இல்லாதவர்கள், ''எனக்கு வருமானமே கிடையாது'' என்று கூறித் தப்பித்துக் கொள்ள முடியாது. வருமானமே இல்லாதிருந்தாலும் இருக்கும் சொத்திற்கு இந்த வரி உண்டு.

இளைஞர்கள் இளமையிலே ஹஜ்ஜுச் செய்து விடுவது நல்லது. ஹஜ்ஜுக் கடமைகளை சரி வரச் செய்வதற்கு ஓரளவு உடல் வலு தேவை. ஆனால் சில இளைஞர்கள் இதுவெல்லாம் பெரியவர்களுக்குத்தான் கடமை, நமக்கல்ல என்று கருதிக் கொள்கிறார்கள். இன்னும் சில இளைஞர்கள் இதையெல்லாம் கொஞ்சம் வயதானதற்குப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணிக் கொள்கிறார்கள். இதனால் இந்தியாவிலிருந்து ஹஜ் செய்யச் செல்வோரில் பெரும்பாலோர் வயோதிகர்களாகவே இருக்கின்றனர். அதைப் பார்த்துத்தான் அரபு மன்னர் அமீர் ஃபைசல் கேட்டாராம் ''இந்த நாடுகளில் இளைஞர்களே



கிடையாதா?'' என்று. இந்தோனேஷியாவிலிருந்து செல்வோரில் பெரும்பாலோர் இளைஞர்களாக இருக்கின்றனர். அதற்குக் காரணம் இந்தோனேஷிய இளைஞர்கள் திருமணம் செய்து கொண்ட அந்த ஆண்டே ஹஜ் செய்வது என்பதைக் கண்டிப்பான வழக்கமாக கொண்டிருக்கிறார்கள்.

இவ்விதம் இளைஞர்கள் இஸ்லாம் விதித்திருக்கும் ஐம்பெரும் கடமைகளை அணுவளவும் பிழை இன்றிப் பின்பற்ற வேண்டும். ஆனால் அவர்கள் அவற்றைப் பின்பற்றி விட்டால் போதும், நாம் முழு முஸ்லிமாக ஆகிவிட்டோம் என்று எண்ணிவிடக் கூடாது. இஸ்லாம் வெறுக்கும் ஆகாப் பழக்கங் களை அகற்றி விட வேண்டும். இஸ்லாம் விரும்பும் அழகிய குணங்களால் தங்களை அலங்கரித்துக் கொள்ள வேண்டும். இன்று இளைஞர்களிடம் இருக்கும் ஆகாப் பழக்கங்களில் பெரும்பாலானவை மேலை நாடுகள் தந்தவையாகும். மேலை நாடுகள் அறிவியல் துறையில் கீழை நாடுகளைவிட உயர்ந்தவை தான், ஒப்புக் கொள்கிறோம். ஆனால் அவை ஆன்மீகத் துறையில் அப்படி ஒன்றும் கீழை நாடுகளைவிட மேலானவை அல்ல. இதில்தான் கீழை நாடுகள் தவறு இழைத்து விட்டன. அவை ஆன்மீகத்துடன் அறிவியலையும் இணைத்து அவை இரண்டிலும் முன்னேறியிருக்க வேண்டும். இதைத்தான் கவிதிலகர் இக்பால் இப்படிக் கூறினார், ''கீழை நாடுகள் இறைவனைக் கண்டன. உலக நன்மைகளைக் காணத் தவறி விட்டன. மேலை நாடுகள் உலக நன்மைகளில் மூழ்கின. இறைவனை மறந்துவிட்டன'' என்று. எனவே மேலை நாடு களிலிருந்து அறிவியலைக் கற்கலாம், தொழில் நுட்பங்களைத் தெரிந்து கொள்ளலாம். நாகரிகத்தை நாம் அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

இளமை தீமை எளிதாக இடம் பிடித்துக் கொள்ளும் பருவ மில்லையா? ''வாலிபம் பைத்தியத்திலிருந்து ஒரு பிரிவு'' என்று அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். ''வாலிபம் என்பது

ஒருவகைப் பைத்தியம்'' என்று அரிஸ்டாட்டில் கூறினார். எனவே இளைஞர்கள் தீமை, தங்களின் பலவீனத்தைப் பயன்படுத்தித் தங்களை அடிமைப்படுத்திவிட அனுமதிக்கக் கூடாது.

தீமைகளில் மனத்தால் செய்வதும் உண்டு, உடலால் புரிவதும் உண்டு. மனத்தால் செய்யும் தீமைகளுக்கு உலகச் சட்டத்தில் தண்டனை இல்லை, ஆனால் இறை சட்டத்தில் தண்டனை உண்டு. எனவே இளைஞர்கள் மனத்தளவில் செய்யும் தீமைகளையும் தவிர்க்க வேண்டும். உடலால் புரியும் தீமைகளையும் தடுக்க வேண்டும். உடலளவில் செய்யப்படும் தீமைகளில் பல கண்களால் செய்யப்படுகின்றன. எனவே இளைஞர்கள் ஆபாசப் படங்களைப் பார்க்கக் கூடாது. ஆபாசப் படக் காட்சிகளையோ, ஆபாசத் தொலைக்காட்சிகளையோ பார்க்கக் கூடாது. அப்படிப் பார்த்தால் என்ன பாதகம் வந்து விடப்போகிறது என்று இளைஞர்கள் எண்ணக் கூடாது. ஆபாசப் படங்களை, படக்காட்சிகளைப் பார்ப்பது சிறிது சிறிதாக உடலில் விஷத்தை ஏற்றுவது போலாகும். சிறிது சிறிதாக ஏற்றப்படும் விஷம் ஒருநாள் ஆளைக் கொன்று விடும். சிறிது சிறிதாக ஏற்றப்படும் தீமை ஒரு நாள் ஒழுக்கத்தைக் கொன்று விடும். படக்காட்சிகளும், தொலைக்காட்சிகளும் இளைஞர்களின் மனம் கெட ஓரளவு காரணம் என்பது இப்பொழுது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த மனவியல் அறிஞர் ஒருவர் இந்தக் காட்சி களால் ஏற்படும் விளைவுகளைப் பற்றிப் பல மாணவர்களிடம் ஆராய்ந்து பார்த்தார். வன்முறைக் காட்சிகளையும் பெண்கள் சம்பந்தப்பட்ட பாதகக் காட்சிகளையும் அவர்களுக்குக் காட்டி ஆராய்ந்து பார்த்தார். அவ்விதக் காட்சிகளை அடிக்கடி பார்க்கும் மாணவர்களிடம் கடுமையான குற்றங்களையும் சாதாரணமாகக் கருதும் மனநிலை மேலோங்குகிறது என்றும், அதனால் அவர்கள் ஒரு சிறு தூண்டுதல் கிடைத்தாலும் அவ்விதக் குற்றங்களைப் புரியத் தயாராகி விடுகிறார்கள் என்றும் அவர் கூறினார்.



இயன்ற மட்டும் அந்நியப் பெண்கள் மீது உங்கள் பார்வைபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்! அதில் இருக்கும் நன்மைகளை இதோ அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நமக்குக் கூறுகிறார்கள்: ''எந்த மனிதன் அந்நியப் பெண்களைப் பார்ப்பதை விட்டும் தன் கண்களைப் பாதுகாத்துக் கொண் டானோ அவனுடைய ஈமானில் அல்லாஹ் ஒருவித இன்பத்தைப் போட்டு விடுகிறான். அதன் காரணமாக அவனுடைய உள்ளம் மகிழ்ச்சியடைகிறது.'' தெருவில் செல்லும் போது எதிரே வரும் பெண்மீது எதேச்சையாகப் பார்வைபட்டுவிடலாம் தான். அப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்பதை இதோ ஜாபிர்(ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ''எதிர்பாரா வண்ணம் ஒரு பெண்மீது பார்வை செல்வது பற்றி நான் அல்லாஹ்வின் தூதர் அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள், 'உடனே உம்முடைய பார்வையைத் திருப்பிக் கொள்ளும்!' என்று பதில் பகர்ந்தார்கள்.'' இது பற்றி அலீ(ரலி) அவர்களிடம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இப்படிக் கூறினார்கள்: ''அலீயே! எதிர்பாரா வண்ணம் ஒரு பெண் மீது பார்வை சென்று விடின் மீண்டும் அவளைப் பார்க்க வேண்டாம்! ஏனெனில் எதிர்பாரா வண்ணம் பார்வை சென்று விடுவதால் குற்றமில்லை. ஆனால் மறுமுறை பார்ப்பது கூடாது.'' மேலும் 'முதல் பார்வை தான் உங்களுடையது, இரண்டாவது பார்வை ஷைத்தானுடையது' என்றும் சொல்லப்படுகிறது.

இளைஞர்கள், தெருவில் செல்லும் போது கண்ணியத் துடன் நடந்து செல்ல வேண்டும், கூட்டங்களில் இன்னும் கண்ணியத்துடன் நடந்து கொள்ள வேண்டும். தெருவில் செல்லும் பெண்களைப் பார்த்துக் கேலி செய்வதும், கிண்டல் பண்ணுவதும் மிகவும் கேவலமான செயல்களாகும். இதனால்

சண்டை, சச்சரவு ஏற்படுவதும் உண்டு. அடி தடிகளிலும் சில சமயங்களில் குத்து வெட்டுகளிலும் முடிவதும் உண்டு. சில பெண்கள் அவமானத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தற்கொலையும் செய்து கொள்கிறார்கள். ஆண்கள் பலசாலிகள், பெண்கள் பலவீனர்கள். பலசாலிகள் அல்லவா, பலவீனர் களுக்கு உதவியாய் இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் பலவீனர்களுக்கு உபத்திரவமாக அல்லவா இருக்கிறார்கள். இது நல்லதல்ல.

இளைஞர்கள் எந்த சந்தர்ப்பத்திலும் அந்நியப் பெண் களுடன் தனித்திருப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அப்படி இருக்க நேர்ந்து விட்டால் அவர்களுடன் பேசக் கூடாது. அதிலிருக்கும் தீமையை அறிந்துதான் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இவ்விதம் கூறினார்கள்: ''தனிமையில் அந்நியப் பெண்களுடன் பேசாதீர்கள்! எவனுடைய கையில் என் உயிர் உளதோ அவன் மீது ஆணையாகச் சொல்கிறேன், எப்பொழுது ஒருவன் அந்நியப் பெண்ணிடம் தனிமையில் பேசுகிறானோ அப்பொழுது அங்கு ஷைத்தான் வந்து விடுகிறான்.''

இளைஞர்கள் தம் காதுகளையும் ஆபாசப் பேச்சு விழுந்து விடாமல் காத்துக் கொள்ள வேண்டும். தெருவில் செல்லும் போது ஆபாசப் பேச்சு காதில் விழுந்தால் அங்கிருந்து வேகமாக நடந்து விட வேண்டும். தப்பித் தவறிக்கூட ஆபாசப் பேச்சு பேசப்படும் இடங்களுக்குப் போகக் கூடாது. அவர்கள் இருக்கும் இடத்தில் ஆபாசப் பேச்சுப் பேச எவராவது ஆரம்பித்தால் உடனே அங்கிருந்து எழுந்து விட வேண்டும். அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த கிராண்ட் ஓரிடத்தில் நண்பர்கள் சிலருடன் அமர்ந்திருந்தார். அப்பொழுது அங்கு ஒருவர் வந்தார். அங்கிருந்தவர்களைப் பார்த்து, ''நான் ஒரு ஜோக் (விகடம்) கூறப் போகிறேன். இங்குப் பெண்கள் யாரும் இல்லையே'' என்று கேட்டார். அவர் ஆபாச விகடம் ஒன்றைக் கூறப் போகிறார் என்பதை கிராண்ட் உணர்ந்து கொண்டார். உடனே எழுந்தார், ''இங்குப் பெண்கள் இல்லாமல் இருக்க லாம். ஆனால் கனவான்கள் இருக்கிறார்கள்'' என்ற சொல்லி விட்டு நடந்து கொண்டே இருந்தார்.



இளைஞர்கள் தம் காதுகளைப் போலவே தம் நாவையும் காத்துக் கொள்ள வேண்டும். நாவினால் செய்யப்படும் தவறுகள் பலவாகும். அவற்றில் ஒன்று ஆபாசப் பேச்சு. ஆபாசப் பேச்சைக் காதால் கேட்பதே விரும்பத்தக்கதல்ல. ஆபாசப் பேச்சை வாயால் பேசுவது வெறுக்கத்தக்கதாகும். ஆபாசப்பேச்சு அழுக்கு மனத்தின் அடையாளமாகும். இளைஞர்களிடம் ஆபாசப்பேச்சு இருக்கவே கூடாது. அது அவர்களின் கண்ணியத்தைக் குறைத்துவிடும்.

சில இளைஞர்கள் அழகாக ஆடை அணிந்து கொண்டிருப் பார்கள். அவர்களின் உடம்பில் அழகான ஆடை இருக்கும். ஆனால் அவர்களின் வாயில் ஆபாச வார்த்தை இருக்கும். இப்படி ஒருவன் இருந்தான். அவன் உடைக்கும் உரைக்கும் ஒரு பொருத்தமும் இருக்க வில்லை. அவனை ஒரு பெரியார் பார்த்தார். அவன் அருகில் போய் நின்றார். ''சகோதரரே!'' என்று அழைத்தார். ''நீர் அணிந்திருக்கும் ஆடையின் மதிப்புக்குத் தக்கபடி உயர்வாகப் பேசும் அல்லது உம் பேச்சின் தரத்திற்குத் தக்கவாறு ஆடை அணிந்து கொள்ளும்!'' என்று கூறினார்.

''நாங்கள் அப்படியெல்லாம் ஆபாசமாகப் பேசுவ தில்லை. நான்கு நண்பர்களுடன் இருக்கும் போது நகைச் சுவைக்காக ஏதாவது ஒரு விஷயத்தைக் கூறினாலுமா குற்றம்?'' என்று இளைஞர்கள் கேட்கலாம். ''பொய் கலக்காத, தீமை விளைக்காத கதைகளைக் கூறிச் சிரிப்பூட்டுவது தவறல்ல'' என்று இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். ''கண்டிப்பாகவும், கம்பீரமாகவும் இருங்கள்! ஆயினும் தேவை'

ஏற்படும் போது புன்னகை புரிவதையும், நகைச்சுவையாகப் பேசுவதையும் நிறுத்திக் கொள்ள வேண்டாம்!'' என அறிஞர் ஹஸன் அல் பன்னா கூறுகிறார்.

விருந்து விசேஷங்களின் போது அங்கிருப்பவர்களைச் சிரிக்க வைப்பதற்காக அங்கில்லாதவர்களைக் கேலி செய்து பேசுவது புறம் பேசுவதுபோலாகும். புறம் பேசுவது பெரும் பாவமாகும். ஒரு விருந்திற்குச் சென்ற அரசு துறந்த ஆத்ம ஞானி இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் அங்குப் புறம் பேசப்படுவதை அறிந்ததும் உடனே எழுந்து, ''ஒரு சகோதரரின் இறைச்சி தின்னப்படும் இந்த இடத்தில் நான் இருக்க மாட்டேன்'' என்று கூறிவிட்டு நடந்து கொண்டே இருந்தார்கள்.

சில இளைஞர்கள் தம் வயதொத்த நண்பர்களுடன் மக்கள் நடமாடும் இடங்களில் நின்று கொண்டு மணிக்கணக்கில் சிரித்துப் பேசுவார்கள். ''ஓர் இளைஞனை முன்னுக்கு வர விடாமல் தடுப்பவற்றில் முக்கியமானது எதுவென்றால் அது அதிகமாகப் பேசுவதுதான் ஆகும்!' என்று ராபர்ட் சுக்டன் என்பவர் கூறினார். அதைத்தான் நம் நாட்டிலும் ''பெரும் பேச்சு பெரும் தரித்திரம்'' என்று கூறுவார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள், ''மனிதன் தனக்குத் தேவையில்லாத உரையாடல்களை விட்டொழிப்பது இஸ்லாத்தின் நற்குணங்களின் பாற்பட்டதாகும்'' என்று.

ஒரு நாள் தல்ஹா (ரலி) அவர்கள் தம் வீட்டிற்கு வெளியே வந்தனர். அப்பொழுது அவர்கள் வழியில் ஒரு நண்பரைக் காண நேர்ந்தது. அவர்கள் இருவரும் சாலையில் நின்று கொண்டே பேச ஆரம்பித்தார்கள். பேச்சு நீண்டு கொண்டே சென்றது. கால் கடுத்ததோ என்னவோ அங்கேயே உட்கார்ந்து கொண்டு பேச ஆரம்பித்தார்கள். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அவ்வழியே வந்தார்கள். தம் தோழர்கள் சாலையில் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தார்கள்.



அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தங்களை நெருங்கியதும் அவர்கள் இருவரும் எழுந்து சலாம் உரைத்தார்கள். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள், ''சாலையில் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பது விரும்பத்தக்க தல்லவே'' என்று. அப்பொழுது அந்தத் தோழர்கள் இருவரும், ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாங்கள் தேவையில்லாத தகாத பேச்சுக்களைப் பேசவில்லை. சில முக்கியமான பிரச்சினைகளைத்தான் விவாதித்துக் கொண்டிருந்தோம்'' என்று கூறினார்கள்.

தெருவில் ஒருவரைச் சந்திக்கிறீர்கள், அவரிடம் ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல வேண்டும் என்றிருந்தால் அதை அவரிடம் சுருக்கமாகச் சொல்லிவிட்டு ''வீட்டிற்கு வாருங்களேன்'', என்றோ ''வீட்டிற்கு வருகிறேன்'' என்றோ கூறிவிட்டு நகர்ந்து விடுங்கள்!

இளைஞர்கள் சிலரிடம் எதற்கெடுத்தாலும் விவாதம் புரியும் பழக்கம் இருக்கிறது. அவசியமான ஒரு விஷயம் பற்றி அறிவான முறையில் கலந்துரையாடுவது வரவேற்கத்தக்கதே. அநாவசியமான விஷயம் பற்றி வீணாக விவாதம் புரிவது விரும்பத் தக்கதல்ல. அண்ணல் நபி (ஸல்) அவர்களும், ''சண்டை, சச்சரவுகளில் ஈடுபடுவோரையும் வீண் விவாதங்கள் புரிவோரையும் அல்லாஹ் நேசிப்பதில்லை'' என்று கூறியிருக்கிறார்கள்.

பெரும்பாலான தர்க்கங்கள் மனக்கசப்பில் முடியும். சில சமயங்களில் சண்டையில் முடியும். அதற்குக் காரணம் எவரும் தாம் தர்க்கத்தில் தோற்பதை விரும்புவதில்லை. ஒருவர், ஒருவரைத் தர்க்கத்தில் தோற்கடித்து விட்டால் அவர் ஓர் எதிரியை உண்டு பண்ணிக் கொண்டு விட்டார் என்று அதற்குப் பொருள். அதனால்தான் ஹில்ரு (அலை) அவர்கள் நபி மூஸா (அலை) அவர்களுக்கு இவ்விதம் போதித்தார்கள்:

''பிறருடன் தர்க்கம் புரிவதற்காக நீர் கல்வி கற்க வேண்டாம்! கற்றபடி நிற்பதற்காகக் கல்வி கற்பீராக!'' அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ''நிச்சய மாக, அல்லாஹ்விடம் மனிதர்களில் மிகவும் கோபத் திற்குள்ளாகிறவர்கள் அதிகமாகத் தர்க்கம் புரிபவர்களே!'' ஓர் அறிஞர் கூறினார்: ''அறிவுப் பக்குவம் அடைந்தவர்கள் அதிகமாகத் தர்க்கம் புரிய மாட்டார்கள்.''

இளைஞர்கள் சிலரிடம் எளிதில் உணர்ச்சி வயப்படும் இயல்பு இருக்கிறது. இந்த உணர்ச்சியால் சில சமயங்களில் நன்மை ஏற்படுகிறது, சில சமயங்களில் தீமையும் ஏற்பட்டு விடுகிறது. உணர்ச்சி அறிவை மிகைத்து விடாமல் அடக்கி வைக்கும் போது நன்மை ஏற்படுகிறது. உணர்ச்சி அறிவை மிகைத்துவிட அனுமதிக்கும் போது தீமை ஏற்பட்டு விடுகிறது. அறிவை மிகைக்கும் உணர்ச்சிக்கு உதாரணமாக 'பிரேக்' இல்லாத வண்டியைக் குறிப்பிடலாம். உணர்ச்சி தம் அறிவை மிகைத்து விட 'காயிதே அஃலம்' என்றும் அனுமதித்ததில்லை. அதனால்தான் அவரால் எதனையும் அமைதியாகச் சிந்தித்து, சீர் தூக்கிப் பார்த்து செயல்பட இயன்றது. அவர் தம்மை 'குளிர்ந்த இரத்தம் ஓடக் கூடிய தர்க்கவாதி' என்று கூறிக் கொண்டார்.

இளைஞர்கள் உணர்ச்சி மேலிட்டுத் தங்களையே மறந்து ஊர்வலங்களிலும், பொதுக் கூட்டங்களிலும் உரத்துக் கோஷமிடுகின்றனர், கைதட்டுகின்றனர். நம் கொள்கையைக் கூற மிதமாக கோஷமிடுவதும், நம் பாராட்டைத் தெரிவிக்க மெதுவாகக் கைதட்டுவதும் தவறல்ல. ஆனால் அவை ஓர் அளவிற்குள் இருக்க வேண்டும். தொண்டை கிழியும் அளவு கோஷமிடுவதும், கை சிவக்கும் அளவு கைதட்டுவதும் நல்லதல்ல. இப்படி உணர்ச்சி மேலீட்டால் உரத்துக் கோஷ மிட்ட சிலர் அந்த இடத்திலேயே மயங்கி விழுந்து இறந்திருக் கிறார்கள். உரத்துக் கை தட்டியவர்கள் நெஞ்சு வலி வந்து



அவதிப்பட்டிருக்கிறார்கள். இளைஞர்கள் ஈர விறகைப் போலும் இருக்க வேண்டாம். பாஸ்பரஸைப் போலும் இருக்க வேண்டாம்! அவர்கள் தீக்குச்சி போல் இருந்தால் அதுவே போதுமானதாகும்.

இளைஞர்கள் சிலரிடம் இருக்கும் இன்னொரு இயல்பு எதிலும் அவசரப்படுவதாகும். சுறுசுறுப்பு அவசியம், அவசரம் அநாவசியம். ஒரு காரியத்தை அவசரமாகச் செய்யும் போது அதைக் கெடுத்துக் கொள்ளும் அபாயம் அதிகம். அதனால்தான் நம்நாட்டிலும் கூறுவர், ''பதறிய காரியம் சிதறும்!'' என்று. அதனால்தான் இப்படிச் சொல்வதுண்டு, ''அவசரத்தில் கை விட்டால் அண்டாவிற்குள்கூடக் கையை விட முடியாது'' என்று. இப்படி அவசரப்பட்டுக் காரியத்தைக் கெடுத்துக் கொள்வதால்தான், ''அவசரக்காரனுக்குப் புத்தி மட்டு'' என்று நம் நாட்டில் ஒரு பழமொழியே ஏற்பட்டு விட்டது. அமைதி தான் அல்லாஹ்வின் இயல்பாகும். அவசரம் ஷைத்தானின் குணமாகும். அதனால்தான் அண்ணன் நபி (ஸல்) அவர்கள் இவ்விதம் கூறினார்கள்: ''(உலக விஷயங்களில்) தாமதிப்பது அல்லாஹ்வின் பாலிருந்தும், அவசரப்படுவது ஷைத்தானிட மிருந்தும் ஏற்படுவதாகும்.'' மேலும் அவர்கள் அறிவித்தார்கள்: ''மறுமைக்குரிய செயல்களைத் தவிர மற்ற ஒவ்வொரு செயலிலும் தாமதம் செய்வது நல்லதாகும்.''

இளைஞர்கள் இவ்விதத் தவறுகள் தம்மை அணுகாமல் தள்ளி வைக்க வேண்டும். சில தீமைகளைத் தொலைவில் வைத்தே துரத்தி அடிக்க வேண்டும். இம்மாதிரித் தீமைகள் நெருங்கக் கூடிய பருவம் இளமைப்பருவமாகும். பள்ளியில் பயிலும் போதோ, கல்லூரியில் கற்கும் போதோ பிற பையன்களைப் பார்த்து புகை பிடிக்கும் பழக்கம் சில இளைஞர்களுக்கு ஏற்பட்டு விடுகிறது. 'ஃபாஷன்' என ஆரம்பிக்கும் இந்தப் பழக்கம் பிறகு உயிரையே கொல்லும் பாஷாணமாக ஆகிவிடுகிறது. கெட்ட பழக்கங்களுக்கு ஆயுள்

கெட்டி என்பர். அவை அட்டை போல் ஒட்டிக் கொண்டு உயிர் போகும் வரைகூட விடுவதில்லை. புகை பிடிப்பதால் ஒரு மனிதனின் ஆயுளில் 2250 நாள்கள் குறைந்து விடுகின்றன என்று ரஷ்யாவில் ஆய்ந்து அறிந்துள்ளனர். இதுவரை உலகில் நடந்த ஆயிரக்கணக்கான போர்களில் இறந்தவர்களைவிட அதிகம் பேர் இந்தப் புகைப் பழக்கத்தால் இறந்திருக்கின்றனர் என்று கூறப்படுகிறது. இந்தத் தீமையை எப்படி ஒழிப்பது என்பதற்கு வழி தெரியாமல் உலக நாடுகளெல்லாம் விழி பிதுங்கிக் கொண்டிருக்கின்றன. 'புகைப்பது உடலிற்குத் தீமை பயப்பது' என்று புகைப் பொருள்களில் ஒட்டச் செய்வது ஒன்றுதான் அவற்றால் செய்ய இயன்றதெல்லாம். இதனால் எல்லாம் பெரிய பலன் ஏற்பட்டு விடாது. தம் நாட்டு மக்கள் எல்லோரும் புகைப்பதை விட்டு விட வேண்டும் என்பதற்காக ஒரு நாட்டின் அதிபர் தம்மிடமிருந்த அந்தப் பழக்கத்தை விட்டு விட்டார் என்று சமீபத்தில் ஒரு செய்தி வந்தது.

புகைப்பழக்கத்தைப் போலவே உடலுக்கு ஊறு செய்வது குடிப் பழக்கமுமாகும். மது அருந்துவது மது விற்பவனிடம் பணத்தைக் கொடுத்து, ''என்னைக் கொஞ்ச நேரம் பைத்திய மாக்கு!'' என்று கூறுவதாகும். மது அருந்தியவர்கள் பைத்தியக் காரர்கள் போலத்தான் நடந்து கொள்கின்றனர். அவர்களின் அறிவு தற்காலிகமாக அவர்களை விட்டும் அகன்று விடுகிறது. அதனால் அவர்கள் மயக்கம் தெளிந்ததும் வெட்கித் தலை குனிய வேண்டிய காரியங்களையெல்லாம் போதையில் இருக்கும் போது புரிந்து விடுகிறார்கள். இதை உணர்ந்துதான் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள், ''மதுவின் முடை நாற்றத்தை நான் வெறுக்கிறேன். அதை அருந்தியவன் வீரத்தையும் வெட்கத்தையும் இழந்து விடுகின்றான்'' என்று. இஸ்லாம் மது அருந்துவதைக் கடுமையாகக் கண்டிக்கிறது. ''அதில் (மது) நன்மையைவிடத் தீமையே அதிகம்'' என்று அல்லாஹ் கூறுகிறான். ''மதுபானம் பாவங்கள் ஒருங்கு சேரும்



இடமாகும்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அறிவித் திருக்கிறார்கள். மது அருந்துவதற்கு அல்லாஹ்வின் தடை வந்ததும் மதீனாவின் தெருக்களில் மது ஆறாய் ஓடியது என்று கூறுவர்.

அல்லாஹ் தடுத்தது அது என்பதால், அதனை அலீ (ரலி) அவர்கள் எவ்வளவு வெறுத்தார்கள் என்பதை நீங்கள் அறிவீர் களா? ''ஒரு சொட்டு மது ஒரு கிணற்றில் விழுந்து, அந்த இடத்தைச் சமப்படுத்தி அந்த இடத்தின் மீது ஒரு மனாரா எழுப்பப்பட்டு அதில் நின்று பாங்கு சொல்லச் சொன்னால் நான் சொல்ல விரும்ப மாட்டேன்!'' என்று அலீ (ரலி) அவர்கள் கூறியிருக்கிறார்கள். மதுவை எவ்வளவு வெறுத்திருந்தால் அவர்கள் இப்படிக் கூறியிருப்பார்கள் என்று எண்ணிப் பாருங்கள்!

மதுவைப் பற்றி அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் என்ன கூறியிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? ''மது பானத்தில் என் விரலை நனைக்க நேர்ந்து விட்டால் அந்த விரலை வெட்டி எறிந்து விடுவேன்'' என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஒரு பெரியார் இருந்தார்கள், இந்த உலகத்தில்தான், வானகத்தில் அல்ல. அவர்கள் மதுவை அல்ல, மது என்னும் சொல்லை அல்ல, மது வைக்கும் பாத்திரமான கூஜா என்னும் சொல்லைக்கூடத் தம் உதடுகள் உச்சரிக்கக் கூடாது என்று எண்ணினார்கள். மதுவுக்கும், தமக்கும் எவ்வளவு தொலை இருக்க வேண்டும் என்று எண்ணியிருந்தால் அவர்கள் இப்படி இருந்திருப்பார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள்!

அன்று முஸ்லிம்கள் மதுவை எப்படி விலக்கி வைத்திருந் தார்கள், இன்று முஸ்லிம்கள் எப்படி விலக்கி வைத்திருக் கிறார்கள் என்பதை உணர்த்த ஒரு சம்பவம் உண்டு. சில

ஆண்டுகளுக்கு முன் ஜெர்மனியில் இது நடந்தது. ஒரு முஸ்லிம் தொழுவதற்காக ஓர் இடத்திற்கு வந்தார். அவரின் சட்டைப் பையில் ஒரு மதுப்புட்டி இருந்தது. அதை எடுத்தார், சற்றுத் தள்ளி வைத்தார், தொழுதார், தொழுது முடித்ததும் மதுப் புட்டியை எடுத்துத் தம் சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டு நடந்தார். இதைப் பார்த்தார் இந்தியாவிலிருந்து சென்றிருந்த முஸ்லிம் ஒருவர். அவருக்கு ஆத்திரம் அணை கடந்து கொண்டிருந்தது. எனினும் அதை அடக்கிக் கொண்டு அந்த முஸ்லிம் அருகில் சென்று, ''என்ன இப்படிச் செய்கிறீர்கள்?'' என்று கேட்டார். அதற்கு அவர் என்ன பதில் கூறியிருப்பார் என்று எதிர்பார்க்கிறீர்கள்? ''தொழும் போது அதனை நான் என்னை விட்டும் விலக்கித்தானே வைத்திருந்தேன்'' என்பது தான் அவர் அளித்த பதில்.

இவ்விதம் அல்லாஹ்வும், அவன் தூதரும் தடை செய்த மதுவை அருந்தியதன் பலனைத்தான் இப்பொழுது உலகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. குற்றங்கள் புரிவது இப்பொழுது மிகவும் அதிகரித்து விட்டது. குற்றங்கள் புரிவதற்குக் காரணம் குடிப்பழக்கம் என்று அமெரிக்காவில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று கூறுகிறது. இதற்காக அமெரிக்க நீதித்துறை நியமித்த குழு ஒன்று சிறைச் சாலை களுக்குச் சென்று 32,112 கைதிகளைப் பேட்டி கண்டது. அந்தக் கைதிகள் தாங்கள் குற்றம் புரியுமுன் மது அருந்தியதாகவும் குற்றம் புரியும்போது போதையில் இருந்ததாகவும் கூறினர். கொலைக் குற்றம் சாட்டப்பட்ட கைதிகளில் பாதிப் பேர் தாங்கள் போதையில் இருந்த போதுதான் கொலை செய்ததாகக் கூறினர். குடித்து விட்டு வாகனங்களை ஓட்டி மக்களைக் கொல்பவர்களில் பெரும்பாலோர் இளைஞர்களாகவே இருக்கின்றனர்.

மது போதாதென்று இப்பொழுது போதைப் பொருள் பழக்கம் மக்களிடையே குறிப்பாக இளைஞர்களிடையே



வேகமாகப் பரவிக் கொண்டிருக்கிறது. இந்தியத் தலைநகரில் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களில் அதிகம் பேர் முப்பது வயதிற்குட்பட்ட இளைஞர்களே என்று கூறப்படு கிறது. ஜெர்மனியில் ஒரு கொடிய போதைப் பொருளை உண்டு விட்டு நான்கு பேர் இறந்தனர். அவர்களில் ஒருவர் பெண். வயது என்ன தெரியுமா? பதினான்கு. போதைப் பொருள் பழக்கத்தால் நரம்புத் தளர்ச்சி ஏற்படுகிறது, செயல்திறன் போய் விடுகிறது, விரக்தி வந்து விடுகிறது.

போதைப் பொருளைப் போலவே குடியைக் கெடுக்கும் ஒரு பழக்கம் சூதாட்டமாகும். இஸ்லாம் வருவதற்கு முன் அரபு அவனியில் சூதாட்டம் அதிகமிருந்தது. சூதாட்டம் துவக்கத்தில் விளையாட்டிற்கென்றே ஆரம்பிக்கும் சிலந்தி வலை போல் இருக்கும். அது பிறகு வடக்கயிறு போல் இறுக்கும். எனவே சும்மாதான் விளையாடுகிறோம் என்று கூறிக்கொண்டு எந்தச் சூதாட்டத்தையும் தொடங்கி விட வேண்டாம்! இலேசாக எண்ணிக் கொண்டு ஆரம்பித்தவர்கள் இறுதிவரை அதை விட முடியாமல் இறந்திருக்கின்றனர். ஓர் உண்மையைக் கூறட்டுமா? எந்தத் தீமையை விட்டும் ஒருவன் விலகி விடலாம். சூதாட்டத்தை விட்டும் ஒருவனால் விலகவே முடியாது.

சூதாடிச் செல்வந்தரானவரை உலகம் இதுவரை கண்ட தில்லை. சூதாடி எல்லாவற்றையும் இழந்து ஓட்டாண்டியான வரைத்தான் உலகம் கண்டிருக்கிறது. எனவே அறிஞர் ஹஸன் அல் பன்னாவின் இந்த அறிவுரையை மறந்து விடாதீர்கள். ''எல்லாவிதமான சூதாட்டங்களை விட்டும் விலகி நில்லுங்கள்! எவ்வளவு இலாபம் வந்தாலும் சரி, விலக்கப்பட்ட வழிகளில் பொருள் ஈட்ட விரும்பாதீர்கள்!''

அல்லாஹ் இட்ட இந்தக் கட்டளை உங்கள் மனத்தை விட்டும் அகலாதிருக்கட்டும்! ''மது பானத்தைக் கொண்டும்,

சூதாட்டத்தைக் கொண்டும் உங்களுக்கிடையில் விரோதத்தையும், குரோதத்தையும் உண்டு பண்ணவும், அல்லாஹ்வுடைய ஞாபகத்திலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்து விடவுமே, நிச்சயமாக ஷைத்தான் விரும்புகிறான். (ஆகவே, அவைகளிலிருந்து) நீங்கள் விலகிக் கொள்வீர்களாக!'' *(5:91)*

இன்று சூதாட்டம் பலவித உருவங்களில் வரத் தொடங்கி விட்டது, பரவத் தொடங்கிவிட்டது. விரைவாக, எளிதாகப் பொருள் ஈட்டிப் பணக்காரராக வேண்டும் என்று மனிதர் கொள்ளும் பேராசையே இந்தச் சூதாட்டங்கள் அனைத்திற்கும் இரை போடுவதாகும். இந்தச் சூதாட்டங்களுக்கு இளைஞர்கள் இரையாகிவிடக் கூடாது.

இவ்விதம் தீமைகளையெல்லாம் உங்களை விட்டும் விரட்டி அடித்த பிறகு அழகிய பண்புகளால் உங்களை அலங்கரித்துக் கொள்ளுங்கள்! அழகிய பழக்க வழக்கங்களால் உங்கள் வாழ்வு இலங்குமாறு ஆக்கிக் கொள்ளுங்கள்! அழகிய பண்புகளும், அழகிய பழக்க வழக்கங்களும் அமைந்து அத்துடன் அழகிய முகமும், உருவமும் அணைந்து கொண்டால் அந்த மனிதர் உண்மையிலேயே பாக்கியசாலி என்பதில் ஐயமில்லை. ஒருவருக்கு அழகிய முகத்தையோ, உருவத்தையோ அளிப்பவன் அல்லாஹ்வாவான். இளைஞர்கள் தம் வயதின் காரணமாகத் தம் உடல் அழகில் கொஞ்சம் அக்கறை அதிகமாக எடுத்துக் கொள்வது இயல்பு. அல்லாஹ் அவர்களுக்கு உருவ அழகை அளித்திருந்தால் அதற்காக அவர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும். அல்லாஹ் அப்படி அளிக்கா விட்டால் அதை அவர்கள் அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டும். அதற்காக அல்லாஹ்மீது அதிருப்தி கொள்ளக் கூடாது. அல்லாஹ் அவர்களுக்கு அழகை சற்றுக் குறைத்து அறிவைச் சற்று அதிகப்படுத்தியிருக்கலாம். அறிவும் இளைஞர்களுக்கு அழகு என்பதில் ஐயமில்லை. சொல்லப் போனால் உடல் அழகைவிட அறிவு அழகு மிகவும் மேலானதாகும். அழகிருந்து அறிவு இல்லா விட்டால் அவன் ஒரு பயனும் இல்லாதவன் ஆவான். அழகில்லாதிருந்து அறிவு அமைந்து விட்டால் அவன் உறு பயன்கள் உள்ளவன் ஆவான். அறிவு, அதன் காரணமாக உண்டாகும் பண்புகள், பழக்க வழக்கங்கள் இவையே ஒரு மனிதனை உயர்த்தும் என்பதில் ஐயமில்லை.



அழகுள்ள ஒருவனும் அழகில்லாத ஒருவனும் ஒரு பெரியாரிடம் சென்றார்கள். அவரிடம் அவர்கள் நன்மையான ஒன்றைப் போதிக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். அவர் அழகானவனைப் பார்த்து, ''அழகானவனாய் இருக்கும் நீ அழகில்லாத அசிங்கமான எச்செயலையும் செய்வது உனக்குத் தகுதியுடையது அல்ல'' என்றார். அவர் அழகில்லாதவனைப் பார்த்து, ''அழகில்லாத எக்காரியத்தையும் நீ செய்தால் இன்னும் அசிங்கமாகவல்லவா ஆகிவிடும்'' என்று கூறினார். இதிலிருந்து அறிவது அழகை வளர்த்துக் கொள்வதற்கு அவசியமானது அழகற்ற காரியங்களை ஆற்றாதிருப்பது, அழகான காரியங்களை ஆற்றுவது என்பதல்லவா? எனவே இளைஞர்கள் அழகுள்ளவர்களாய் இருந்தாலும் அவர்கள் தாம் புரியும் காரியம் ஒவ்வொன்றிலும் அழகிருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

அழகுள்ளவர்கள்,அழகற்றவர்கள் இருவருமே தம் முகத்தை அழகாக வைத்துக் கொள்ள வேண்டும். மனிதருக்கு முகம் என்பது ஒரு முக்கியமான உறுப்பாகும். அழகிற் சிறந்த அண்ணல் நபி (ஸல்) அவர்களே தம் முகத்தை அழகாக வைத்துக் கொள்வதில் அக்கறையுள்ளவர்களாய் இருந்தார்கள். அவர்கள் தம் தலைமயிரையும், தாடி மயிரையும் வெட்டி சீர் செய்து அழகாக வைத்துக் கொள்வார்கள். ''அல்லாஹ்வின் தூதர் அவர்கள் தங்கள் தாடியில் நீளத்தாலும், அகலத்தாலும் (ஒன்றிரண்டு மயிர்கள்) நீட்டிக் கொண்டிருப்பதைக் கத்தரித்து ஒழுங்குபடுத்தி வந்தார்கள்'' என்று அண்ணல் நபி (ஸல்)

அவர்களின் தோழர் ஒருவரே கூறினார். தம் தாடி மயிர், தம் தலைப்பாகை சரியாக இருக்கின்றனவா என்பதை அறிவதற்காக அவர்கள் தம் முன் வாய் அகன்ற பாத்திரத்தில் தண்ணீர் வைத்து அதில் குனிந்து தம் முகத்தைப் பார்த்துக் கொள்வார்கள். அவர்களுக்கு முகௌகிஸ் என்னும் எகிப்து மன்னர் முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்றை அன்பளிப்பாக அனுப்பி வைத்தார். அதனை அவர்கள் அருமையாக வைத்துப் பயன்படுத்தி வந்தார்கள். அது உடைந்து போன போது அதற்கு வெள்ளியால் பூண் போட்டுக் கொண்டார்கள். அவர்கள் தம் தலை மயிருக்கு எண்ணெயும் போட்டுக் கொண்டார்கள். உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக்காலத்தில் மாநில ஆளுநர் ஒருவர் தம் தலைக்கு எண்ணெய் தடவாமல் அலங்கோலமாய் தம் முன் வந்து நின்ற போது, ''தலைக்குப் போட எண்ணெய் இல்லையா?'' என்று கேட்டு விட்டு, உடனே போய்த் தலைக்கு எண்ணெய் போட்டுக் கொண்டு வரும்படி கூறினார்கள்.

இளைஞர்கள் சிலரிடம் இருக்கும் ஓர் இயல்பு அதிக நேரம் கண்ணாடி முன் நின்று தங்கள் முகத்தைப் பார்ப்பதாகும், தங்கள் தலைமயிரை சரி செய்வதாகும். இப்படித் தங்களை அலங்கரித்துக் கொள்வதில் அளவிற்கு அதிகமாக அக்கறை கொள்பவர்கள் சிலர் வாழ்வில் முன்னேறுவது என்பதைக் கோட்டை விட்டு விடுகிறார்கள். இவர்கள் அழகுக் காளைகளாக ஊரில் உலாவந்து கொண்டிருப்பார்கள். உருப்படியான காரியம் எதனையும் செய்வதில் ஆர்வம் கொள்ள மாட்டார்கள். இது உருவத்தை விட்டு விட்டு நிழலைப் பிடிக்கும் செயலாகும். ''ஓர் அழகான முகத்திற்காக என் உடைமையில் ஒரு பாதியையே கொடுக்கத் தயார்'' என்று கூறிய ரஷ்ய ஞானி லியோ டால்ஸ்டாய் பிறகு தம் கொள்கையை முற்றிலும் மாற்றிக் கொண்டார்.

நம் நாட்டில் '' ஆள் பாதி, ஆடை பாதி'' என்று கூறுவார்கள். ஆடை ஒருவரின் தோற்றத்தை உயர்த்தும் என்னும்



அர்த்தத்தில்தான் அப்படிக் கூறப்படுகிறது. அழகுள்ளவர்கள் சற்று அடக்கமான ஆடையை அணியலாம், அழகில்லாதவர்கள் சற்று அழகான ஆடை அணிவதில் தவறில்லை. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அடக்கமான ஆடையையே அணிந்து வந்தார்கள். வெளி நாட்டிலிருந்து தூதுவர்கள் தம்மைக் காண வந்தால் அப்பொழுது அணிந்து கொள்வதற்காக அவர்கள் தனி ஆடை வைத்திருந்தார்கள். ஆனால் பட்டாடைகளை, மிகவும் மேலான ஆடைகளை வெறுத்தார்கள். ஆண்கள் பட்டாடை அணியக் கூடாது என்றும் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இளைஞர்கள் சற்று அழகான ஆடை அணிவதில் தவறில்லை என்றாலும் அடக்கமான ஆடையே அவர்களுக்கு உகந்ததாகும். 'ஃபாஷன்' என்னும் பெயரில் விதவிதமான ஆடைகள் வரலாம். ஆனால் அவை போன்று ஆடைகளை அணிய வேண்டும் என ஆசைப்படக் கூடாது. அதற்காகப் பாட்டன் காலத்து ஃபாஷன் படியே ஆடை அணிய வேண்டும் என்று அர்த்தமில்லை. கால வழக்கப்படி ஆடைகளில் சிறு மாற்றங்கள் செய்து கொள்வதில் தவறில்லை. ஆனால் அவனியில் பிறந்ததே அழகாக ஆடை அணிவதற்கே என்னும் விதம் இளைஞர்கள் எண்ணி விடக் கூடாது. இப்படி எண்ணியவர்கள் சிலர் அழகான ஆடைகளை அணிபவர்களாக மட்டுமே இருந்து விட்டுப் போயிருக்கிறார்கள். ஒரு காலத்தில் மிகவும் அழகான ஆடை அணிபவர்களாக இருவரைக் குறிப்பிட்டதுண்டு. அவர்கள்தாம் அந்தோனி ஈடனும், காய்தே அஃலமும். ஆனால் இவர்கள் இருவரும் ஆடைக்கு அதிக மதிப்புக் கொடுத்து, வாழ்க்கையைக் கோட்டை விடவில்லை. ஒருவர் ஆங்கில நாட்டுப் பிரதம மந்திரி ஆனார், அடுத்தவர் அற்புத சாதனையாளராக மாறினார்.

இளமையில் கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களுக்கே அழகான ஆடை அணிய வேண்டும் என்னும் ஆசை இருந்தது. அதனால் அவர்கள் மிகவும் ஆடம்பரமான

ஆடை அணிபவர்களாக ஆனார்கள். ஆனால் பிறகோ அவர்கள் இதனினும் அடக்கமான ஆடை இருக்க முடியாது என்று கூறத்தக்க ஆடையை அணிய ஆரம்பித்தார்கள். அவ்விதம் தாம் மட்டும் இருக்கவில்லை, தம் மனைவி, மக்களும் இருக்க வேண்டும் என விரும்பினார்கள். ஒரு சமயம் அவர்களின் மனைவி தம் ஆடை மிகவும் கிழிந்து விட்டது என்று கூறினார். அதைக் கேட்டுக் கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் என்ன பதில் கூறினார்கள், தெரியுமா? வீட்டில் தொங்கிய படுதாவைக் கிழித்து அதைக் கொண்டு ஒட்டுப் போட்டுக் கொள்ளும்படி கூறினார்கள்.

இளைஞர்கள் சிலருக்குக் கழுத்தில் தங்கச் சங்கிலி போட்டுக் கொள்ள வேண்டும் என்னும் ஆசை ஏற்படுவது உண்டு. இது இஸ்லாமிய விதிகளுக்கு எதிரான ஆசையாகும். ஆண்கள் தங்க ஆபரணங்கள் அணிந்து கொள்வதை இஸ்லாம் அங்கீகரிக்க வில்லை. தங்க மோதிரம் அணிய வேண்டும் என்றும் சில இளைஞர்களுக்கு ஆசை இருக்கிறது. கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களின் புதல்வரையும் இந்த ஆசை விட்டு விடவில்லை. அவர் ஆயிரம் பொற்காசுகள் மதிப்புள்ள கல் பதிக்கப்பட்ட மோதிரம் ஒன்றை வாங்கி யிருக்கிறார் என்று கலீபா கேள்விப்பட்டார்கள். அவரை அழைத்து அவருக்குப் பின்வருமாறு அறிவுரை பகர்ந்தார்கள்: ''மகனே! ஆயிரம் பொற் காசுகள் மதிப்புள்ள மோதிரத்தை நீ வாங்கியிருப்பது அறிந்து வருந்துகிறேன். அதை விற்று ஆயிரம் ஏழைகளின் பசியைப் போக்கு! மோதிரம் அணிய ஆசை யிருந்தால் இரும்பினால் ஒரு மோதிரம் செய்து, 'தன் தகுதியை உணர்ந்து நடப்பவனுக்கு அல்லாஹ் அருள் பாலிப்பானாக!' என்னும் பொன்மொழியை அதில் பொறித்து அணிந்து கொள்!'' பொன்னிற்குப் பதிலாகப் பொன்மொழியைக் கொண்ட மோதிரத்தை அணியச் சொன்ன இந்த உத்தமர் உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் கலீபாக் கடமையை



அற்புதமான முறையில் ஆற்றிவிட்டுத் தம் இருபத்தொன்பதாம் வயதில் இறந்தவர்கள் ஆவர். அவர்கள் இறந்ததை அறிந்து பெரிய கிறிஸ்துவ மதகுரு ஒருவர் கூறினார், ''இறந்தவர்களை உயிர்ப்பிக்கக் கூடிய ஒருவர் இன்று இறந்துவிட்டார்'' என்று.

ஆடையைக் கொண்டு ஒருவரை அவர் எப்படிப்பட்ட ஆள் என்று அறிந்து கொள்ள முடியாது. ஆனால் அவர் வாயைத் திறந்து ஓரிரு வார்த்தைகள் கூறினால் போதும் அவரை அறிந்து கொள்ளலாம். அதனால் இளைஞர்கள் தம் உரைகளை அழகாகவும் அறிவாகவும் கூறப் பழகிக் கொள்ள வேண்டும். இன்னும் கொஞ்சம் பேச மாட்டார்களா என்று எதிரே இருப்பவர்கள் விரும்பும் விதம் இதமாகவும், பதமாகவும் இருக்க வேண்டும் அவர்கள் உரையாடல். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் விரோதிகள் அதிகம் பயந்தது அவர்களின் உரையாடலுக்குத்தான். ஏனெனில் அது அவ்வளவு தூரம் மனித மனங்களைக் கவரக் கூடியதாக அமைந்திருந்தது.

இவ்விதம் உருவ அழகையும், உரை அழகையும் உயர்த்திக் கொண்ட நீங்கள் உங்களின் குண அழகையும் குன்றளவு ஏற்றிக் கொள்ள வேண்டும். அவ்விதம் செய்யின் உங்களை எல்லோரும் ஏத்திப் போற்றுவார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

அதற்கு ஆதாரம் இதோ ஒரு சம்பவம்: அப்துல்லாஹ் இப்னு ஆமிர் என்பவர் உதுமான் (ரலி) அவர்களின் சிறிய தந்தை மகனாவார். அவர் ஒரு நாள் பள்ளி வாயிலிலிருந்து தம் வீட்டிற்குத் தனியே சென்று கொண்டிருந்தார். அது இரவு நேரமாக இருந்தது. அவரை வழியில் ஓர் இளைஞர் பார்த்தார். அந்த இளைஞர் அந்தப் பெரியவரைப் பின் தொடர்ந்து சென்றார். அவர் தம்மைப் பின் தொடர்ந்து வருவதை அந்தப் பெரியவர் அறிந்து கொண்டு அவரைத் திரும்பிப் பார்த்து, ''என்னிடம் எதுவும் கூற வேண்டுமா?'' என்று கேட்டார்.

அதற்கு அந்த இளைஞர் என்ன பதில் கூறினார், தெரியுமா? ''தங்களிடம் சொல்வதற்கு ஒன்றுமில்லை. இந்த இரவு நேரத்தில் தாங்கள் தனியாகச் செல்வதைப் பார்த்து, தங்களுக்கு ஆபத்து எதுவும் ஏற்பட்டு விடக் கூடாதே என்று எண்ணி தங்கள் உதவிக்காகவேதான் நான் தங்களைப் பின் தொடர்ந்து வருகிறேன்'' என்று அந்த இளைஞர் கூறினார். உடனே அந்தப் பெரியவர், இளைஞரின் கையைப் பிடித்துக் கொண்டு வீடு வரை சென்று தம் வீட்டை அடைந்ததும் ஆயிரம் பொற்காசு களை அள்ளிக் கொடுத்து, ''இவற்றை வைத்துக் கொள்ளும்! உம் பெற்றோர் உமக்கு மிகவும் நல்ல பண்புகளைக் கற்றுத் தந்திருக்கிறார்கள்!'' என்று கூறி அவரை அனுப்பி வைத்தார். அந்த இளைஞரின் அரிய பண்பு அவர் பெற்றோருக்கும் பாராட்டைப் பெற்றுத் தந்திருக்கிறதைப் பார்த்தீர்களா?

இவ்விதம் நீங்கள் முதியவர்களை மதிப்பவர்களாய் மட்டும் இருந்தால் போதாது, நீங்களே முதியவர்களாயும் இருக்க வேண்டும் என்று காபூஸ் நாமா நூலின் ஆசிரியர் கருது கிறார். அவர் இளைஞர்களுக்கு வழங்கும் அறிவுரை இதுதான்: ''நீங்கள் வயதில் இளையவர்களாய் இருங்கள். ஆனால், அறிவில் முதியவர்களாய் இருங்கள்.''